கலை
இலக்கிய
மாத
சஞ்சிகை


233

வைகாசி 2024
05.05.2024
ஆளுமைச் சிறப்பிதழ்

# ஜீவநதி

200/-

பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்



சோ.பத்மநாதன்
பேராசிரியர் சபா.ஜெயராசா
கலாநிதி க. இரகுபரன்
பேராசிரியர் செ. யோகராசா
பேராசிரியர் அம்மன்கிளி முருகதாஸ்
இ.சு.முரளிதரன்
கந்தையா பத்மானந்தன்
கோகிலா மகேந்திரன்
சி.ரமேஷ்
ந.குகபரன்
கலாநிதி தி.செல்வமனோகரன்
அ.பௌநந்தி
ம.பா.மகாலிங்கசிவம்
த.அஜந்தகுமார்
கந்தர்மடம் அ.அஜந்தன்
பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா
கலாநிதி எஸ்.பத்மராஜா

## எஸ்.சிவலிங்கராஜா சிறப்பிதழ்

கலை இலக்கிய மாத சஞ்சிகை

2024 - வைகாசி- ஆளுமைச் சிறப்பிதழ்

# பொருளடக்கம்

## கட்டுரைகள்

**இச்சிவம் கண்ட அச்சிவம்**
சோ.பத்மநாதன்.................................. 03

**தமிழ்ப்புலமை மரபின் தளர்வில்லாத தொடர்ச்சியில் நிமிர்நிலை கொள்ளும் பேராசிரியர்**
பேராசிரியர் சபா.ஜெயராசா..................... 06

**பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா ஈழத்து உரை மரபைத் துலக்கிய பேருபகாரி**
கலாநிதி க. இரகுபரன்............................ 09

**பேராசிரியர் சிவலிங்கராஜாவின் ஈழத்துத் தமிழ் இலக்கியச் செல்நெறி**
பேராசிரியர் அம்மன்கிளி முருகதாஸ்......... 12

**வித்தியாசமான தொகுப்பாக வெளிவந்துள்ள கலாநிதி சிவலிங்கராஜாவின் "சொல்லினால் ஒரு மாளிகை"**
பேராசிரியர் செ.யோகராசா....................... 16

**நினைவில் நின்ற பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா அவர்களின் நினைவுப் பேருரைகள் மறந்தவையும் மறைக்கப்பட்டவையும் ஓர் உசாவல்**
சி.ரமேஷ்................................................18

**பேராசிரியர் சிவலிங்கராஜாவின் "யாழ்ப்பாணப் பண்பாடு மறந்தவையும் மறைந்தவையும்" ஓர் வாசகனின் வாசனை அனுபவம்**
கந்தையா பத்மானந்தன்......................... 25

**பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவின் "யாழ்ப்பாணத்துக் கல்வி வளர்ச்சியில் இந்திய ஆசிரியர்களின் பங்களிப்பு" ஆய்வுநூல் சார்ந்து ஒரு வாசகர் எண்ண அலை**
கோகிலா மகேந்திரன்............................28

**இலங்கைத் தமிழ்க் கல்வி பற்றி வரலாற்றினை ஆழமாக ஆதாரங்களுடன் அலசும் "19 ம் நூற்றாண்டு யாழ்ப்பாணத்துத் தமிழ்க்கல்வி"**
அ.பௌநந்தி....................................... 34

**யாழ்ப்பாணத்துப் பண்பாட்டம்சங்களை அகழ்ந்து எடுத்துத்தரும் "யாழ்ப்பாணத்து வாழ்வியற் கோலங்கள்"**
ம.பா.மகாலிங்கசிவம்.............................38



## சிறுகதை

பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா - 32

## கவிதைகள்

ஞ்கையன் - 55, புலவர்மணி வை.க.சிற்றம்பல

பண்டிதர் க. சச்சிதானந்தம் - 56

**வடமராட்சியின் கல்விப்பாரம்பரியமும் இலக்கிய வளமும் குறித்த முகிழ்நிலை ஆய்வு நூல்**
இ.சு.முரளிதரன்...................................40

**பல்கலைக்கழகத்துக்குள் ஒரு புதிய "பண்டிதமணி"; வித்துவசிரோமணி கணேசையர் வாழ்க்கையும் பணியும்" பற்றிய குறிப்பு**
கலாநிதி தி.செல்வமனோகரன்..............42

**நான் கண்ட பேராசிரியர்**
கலாநிதி எஸ்.பத்மராஜா.........................44

**பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா அவர்களின் நாநலமும் "மேடையிலே பேசுவோம்" நூல் நயமும் சிறுகுறிப்பு**
ந.குகபரன்..........................................46

**யாழ்ப்பாணத்து வாழ்வியற் கோலங்கள் ஒரு பார்வை**
கந்தர்மடம் அ. அஜந்தன்..................... 48

**பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா அவர்களின் சுன்னாகம் அ.குமாரசுவாமிப்புலவர் வாழ்வும் பணியும்**
த.அஜந்தகுமார்.................................. 52

# ஜீவநதி

**2024 வைகாசி இதழ் - 233**

**பிரதம ஆசிரியர்**
க.பரணீதரன்

**துணை ஆசிரியர்கள்**
வெற்றிவேல் துஷ்யந்தன்
ப.விஷ்ணுவர்த்தினி

**பதிப்பாசிரியர்**
கலாநிதி த.கலாமணி

**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.

**ஆலோசகர் :**
திரு.கி.நடராஜா
தில்லைநாதன் கோபிநாத்

**தொலைபேசி** : 0775991949
0212262225

**E-mail** : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
Commercial Bank, Nelliady
A/C - 8108021808 - CCEYLKLY



இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.



## ஜீவநதி சந்தா விபரம்

தனிப்பிரதி - 100/= ஆண்டுச்சந்தா - 3000/=
வெளிநாடு - $ 100U.S
மணியோடரை
அல்வாய் தபால் நிலையத்தில்
மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி
**K .Bharaneetharan,**
**Kalaiaham ,**
**Alvai North west, Alvai.**
வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்
K.Bharaneetharan Commercial Bank - Nelliady Branch
A/C No.- 8108021808 CCEYLKLY



# ஜீவநதி

**(கலை இலக்கிய மாத சஞ்சிகை)**


அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
- பாரதிதாசன்-

## பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா
## ஈழத்துத் தமிழ் இலக்கியத்தின் சொத்து

போராசிரியர் எஸ்.சிவலிங்கராசா அவர்கள் கரவெட்டியில் பிறந்து யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் வசித்து வருகின்றார். பேராசிரியரின் தமிழ் அறிவு எடை போட முடியாதது. பேராசிரியர் அவர்கள் ஈழத்து இலக்கியம் வளமுற தன்னாலான பங்களிப்புகளை வழங்கிக் கொண்டு இருப்பவர். மாணவர் பராயத்தில் ஆரம்பித்த தமிழார்வம் அவரை சிறந்ததொரு பேச்சாளராக்கியது. அனைவரும் வியந்து பார்த்த வடமராட்சியின் பேச்சாளராக மாணவப் பருவத்தில் திகழ்ந்தார். பண்டிதர் வீரகத்தியிடம் தமிழைக்கற்று தன்னை வளப்படுத்திக்கொண்டு தமிழ்த்துறைப் பேராசிரியர் களின் வழிகாட்டல்கள், கற்பித்தல்களின் ஊடாக தனது அறிவை விசாலித்துக் கொண்டு பேரெழுச்சி மிக்க தமிழ் அறிஞராக வெளிப்பட்டு வருபவர்.

தமிழை உயிராகக் கொண்டு இயங்கி வருபவர். இவரிடம் தமிழ் கற்கும் மாணவர்கள் இவரிடம் கற்பதைப் பெரும் பேறாகக் கருதிக் கற்பார்கள். வெறும் பாடத்திட்டத்துடன் கற்பிக்கும் ஆசிரியர்கள் மத்தியில் மாணவர்களை வளப்படுத்தும் நோக்குடன் பல்துறை சார்ந்த தமிழ் அறிஞர்களாக மாணவர்களை ஆக்கும் நோக்குடன் கற்பிக்கும் பேராசிரியராக எஸ்.சிவலிங்கராசா அவர்கள் காணப்படுகின்றார்.

தமிழர்களது பண்பாட்டம்சங்களை தன் தமிழறிவோடு அலசி ஆராய்ந்து புத்தகங்களாக வெளியிட்டு வரும் அரும் பணியையும் செய்து வருகின்றார்.


கவிஞராக, கட்டுரையாளராக, சிறுகதையாசிரியராக, கல்வியிய லாளராக, மேடைப் பேச்சாளராக, விமர்சகராக, நடிகராக, பதிப்பாளராக தனது ஆளுமையை வெளிப்படுத்திக் கொண்டு வருபவர். தமிழ்ப் பாடல்களையும் கவிதைகளையும் மேடைகளில் இவர் சொல்லிக் காட்டும் விதமே தனித்துவமானது. இவர் கலந்து கொள்ளும் மேடைகள் என்றும் கலகலப்பாக இருக்கும். நகைச்சுவையுடன் கூடிய தமிழறிவை வழங்குவதில் பேராசிரியருக்கு நிகர் யாருமிலர்.

மாணவர்களை வழிப்படுத்தி அவர்களது கல்வியில் மேம்பாடடையச் செய்வதில் அதிக அக்கறை கொண்டவர். தனது மாணவர் எவரையும் கைவிட்டது கிடையாது. அவர்களை உயர்வடையச் செய்ய தன்னாலான உதவிகளை செய்து வருபவர். ஈழத்து இலக்கியத்துக்கு 20 இற்கு மேற்பட்ட நூல்களைத் தந்தவர். பல்வேறு பட்டங்களைப் பெற்றவர். எல்லோருடனும் அன்பாகவும் பண்பாகவும் மரியாதையுடனும் பழகும் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா அவர்களது சிறப்பிதழை வெளியிட்டு ஜீவநதி மகிழ்வடைகின்றது.

- க. பரணீதரன்


**ஜீவநதி கிடைக்கும் இடங்கள்/ விற்பனையில் உதவுவோர்**

1. புத்தகக்கூடம் - திருநெல்வேலி
2. பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம், கொழும்பு செட்டித்தெரு
3. புத்தகப்பண்பாட்டுப் பேரவை, 68, நீதிமன்ற வீதி, மல்லாகம்
5. பண்டாரவன்னியன் புத்தகசாலை - வவுனியா
4. அ.யேசுராசா
5. பரணி புத்தகக்கூடம் - நெல்லியடி
6. மு.யாழவன்- திருகோணமலை,
7. கந்தர்மடம் அ.அஜந்தன்
8. சி.ரமேஷ்
9. நா.நவராஜ்



# இச்சிவம் கண்ட அச்சிவம்

கவிஞர் சோ.பத்மநாதன்

*1980இன் கடைக்கூறு. நான் பட்டப் படிப்பை நிறைவு செய்த தருணம். கலைப்பீடாதிபதியாக இருந்த பேராசிரியர் கைலாசபதியைச் சந்தித்து விட்டு வெளியே வந்தேன். வேறொருவர் உள்ளே நுழைந்தார். அவரை எனக்குத் தெரியாது. சில வாரங்களின் பின் தெரியவந்தது. அவர், தமிழ் சிறப்பு பட்டத்தில் முதற்பிரிவில் தேறிய சிதம்பரப்பிள்ளை சிவலிங்கராசா என்பதும், பின்னாளில் அந்த* exit entry *பற்றி நினைவு கூர்ந்த சிவம் சொன்னார். மாணவ நிலையில் இருந்த ஒருவர் கைலாஸுக்கும் முன்னே இருந்து உரையாடியது கண்டு தான் வியப்படைந்ததாகவும் தன்னைக் காட்டி "உவரைத் தெரியுமா?* English *இல் விண்ணன். ஆளை விடாதை!" என்று கைலாஸ் சொன்னதாகவும் அறிந்தேன்.*

*சிவமும் நானும் "முத்தல்" கேஸ்களாகவே பட்டப் படிப்பை மேற்கொண்டவர்கள். சிவம் கரவெட்டி வாணி கல்விக் கழகத்தில் பண்டிதர் க.வீரகத்தியிடம் பாடம் கேட்டவர். நான் யாழ்.இந்துக் கல்லூரியில் வித்துவான் கார்த்திகேயனிடமும் "கொம்யூனிஸ்ற்" கார்த்தி கேசனிடமும் கற்று, ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் டொக்ரர் கு.சிவப்பிரகாசம் என்ற சிந்தனையாளன் திருவடியில் அமரும் பேறுபெற்றவன்.*

*நாம் இருவரும் அடிநிலையிலிருந்து போராடி முன்னுக்கு வந்தவர்கள்.*

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கைலாசபதி, சிவத்தம்பி, சண்முகதாஸ் ஆகிய ஆளுமைகளுக்கு அணுக்கராக சிவலிங்கராசா இருந்தார். பின்னாளில் தமிழ்நாட்டில் மாநாடு களில் கலந்து கொள்ளும் சந்தர்ப்பங்களில் இப்பேராசிரியர்கள் பேரைச் சொன்னாலே தான் மதிக்கப்பட்டதாக, சிவம் கூறுவார்.*

*தம்மை 19ஆம் நூற்றாண்டின் ஈழத்து இலக்கியத்தின் பால் ஆற்றுப்படுத்திய திசை காட்டியாகக் கைலாசபதியைக் கொண்டாடுவார் சிவலிங்கராசா, சுன்னாகம் குமாரசாமிப் புலவர் பற்றிய ஆய்வுக்குத் தம்மை ஆற்றுப்படுத்தியவர் கைலாசபதி என்றும், "எங்கள் வளாகத்தின் தாழ்வாரத்தில் பண்டிதமணி இருக்கிறார். அவரைக் கண்டு உரையாடும்!" என்று "கைலாஸ்" வழிகாட்டியதையும் சிவம் நன்றியோடு நினைவு கூருகிறார்.*

*சிவம் முனைவர் பட்ட ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட பொருள் "ஈழத்துத் தமிழ் உரை*

மரபு” ஆய்வேட்டின் வெளிவாரி மதிப்பீட்டாளர் பேராசிரியர் செ.வை.சண்முகம் எழுதிய புறக்குறிப்பை வாசித்துக் காட்டிய பேராசிரியர் சு.சுசீந்திரராஜா, “S.V.S இடம் இத்தகைய பாராட்டுப் பெறுவது எளிதன்று” என்றாராம்.


“உலகம் தழீஇய தொட்பம்”, “உலகம் தோடொப்ப ஒழுகல்” என்பதற்கு சிவத்தை விடப் பொருத்தமான உதாரணங்களைக் காட்டுதல் அரிது. மேலே நான் குறிப்பிட்ட பேராசிரியர்கள் அனைவரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கற்பித்தவர்கள். சிவம் அவர்களுக்கு அணுக்காரானதில் வியப்பில்லை. பேராசிரியர் தில்லைநாதனிடம் இவர் கற்றதில்லை ஒரு மூத்த புலமையாளர் என்ற அளவில் மதிப்பு வைத்திருக்கிறார். அவ்வளவே. பேராசிரியருடைய தளம் பேராதனை மற்றும் கொழும்பு. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு சொந்த ஊரான சங்கானைக்கு வந்தவர் கொழும்பு திரும்ப முடியவில்லை. காரணம் கொவிட் தடுப்பூசி போடவில்லை. அரச மற்றும் தனியார் மருத்துவமனைகளில் தடுப்பூசி இல்லை. பேராசிரியருடைய சங்கடத்தை அறிந்த சிவம், களத்தில் குதித்தார். பகீரதன் கங்கையைக் கொண்டு வந்ததுபோல இந்தியத் தலைமைத்தூதரகத்துக்கு நடையாக கொவிட் ஊசி மருந்தைக் கொணர்ந்தார். மருத்துவமனைக்குள் யாரும் நுழையமுடியாது. மகன் DR.ரகுராமனை ஏவி ஊசி போடுவித்து பேராசிரியரை அனுப்பி வைத்தார். அடுத்த நாளே கொழும்பு போக வழிபிறந்தது. பேராசிரியர் தில்லைநாதன் சொன்னார். “என்னிடம் தமிழ் (சிறப்பு) கற்ற மாணவர்கள் யாரும் நான் தளர்ந்த காலத்தில் உதவ வருவதில்லை. எந்தக் கடப்பாடும் இல்லாத சிவலிங்கராசா பேருதவி செய்கிறார். சமூகத்தில் அவருக்கிருக்கும் செல்வாக்கைக் காண என் மெய்சிலிர்க்கிறது!”.

1995 ஒக்ரோபர் இல் - வலிகாமம் இடப்பெயர்ச்சிக்குப் பின் மீளக்குடியமர்ந்து, இழந்தவற்றையும் தொலைந்தவற்றையும் நாம் இருப்பெடுத்துக் கொண்டிருந்த வேளை, சிவம் வீடு தேடிக் கொண்டிருந்தார். கையில் பணமில்லை. பேராசிரியர் கைலாச நாதக் குருக்கள் முன்பே ஓய்வு பெற்று அவுஸ்திரேலியா போய்விட்டார். அவர் வாழ்ந்த வீட்டை விற்க விரும்புகிறார் என அறிந்த யாழ்.பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் உள்ளிட்ட பலர் - பணப்பலம் வாய்ந்தவர்கள் - களமிறங்கலாயினர். கையில் காசில்லாத சிவத்துக்கு ஆசை. வெறுங்கை முழமிடுமா? பூசலார் போல ஆசைப் பட்டார். நிலைமையைப் பரிசீலித்த குருக்கள் “சிவலிங்கராசாவுக்கே வீட்டைக் கையளியுங்கள்!” என ஆணையிட்டார். இது “ஸ்ரீவித்யா” வாய்த்த கதை. இத்தனைக்கும் சிவம் குருக்களுடைய மாணவரல்லர். ஆய்வந்த குருக்கள் வீட்டில் குடியேறிய நாள் தொடக்கம் சிவத்துக்கு தெய்வானுக்கிரகம் பூரணமாகக் கிடைக்கத் தொடங்கியது!.

முன்பே குருக்களுடைய ஆசீர்வாதம் சிவத்துக்கு வாய்த்திருந்தது. திருமணமாகி, சரஸ்வதி சகிதம் முன்னேஸ்வரம் போனார். வடிவாம்பிகைக்கு அபிஷேகம் செய்து கைலாசநாதக் குருக்கள் பிரசாதம் வழங்கியபோது, சிவம் வேண்டிக் கொண்டது “அம்பாள் போல் ஒரு பெண் பிள்ளை வாய்க்க வேண்டும்!” வேண்டுதல் பலித்தது. பெண் குழந்தை! சிவதி எனப் பெயர் சூட்டியவர் குருநாதர் வீரகத்தி. அடுத்துப் பிறந்த ஆணுக்குப் பெயர் சூட்டியவர் சிவத்தம்பி : ரகுராமன்! ரகுராமனுக்கு ஏடு தொடக்கியவர் வித்தியானந்தன். அந்த நிழற்படத்துக்கு “வித்தி ஆரம்பம்” என்று மகுடமிட்டேன்!.

சிவத்துக்கு வாழ்க்கை Plain sailing ஆக இருந்ததில்லை. விரிவுரையாளராகிய புதிது. போர்க்காலம். எல்லோரையும் போலவே நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்தார். பிள்ளைகள் இருவரையும் திருநெல்வேலியிலிருந்து சென்.ஜோன் டொன் பொஸ்கோவுக்கு ஈருருளியை வலித்துக் கொண்டு விரைவார். ஒரு நாள், றாக்கா றோட்டில் இவரைக் கண்ட துறைத் தலைவர் ஆ.வேலுப்பிள்ளை, அடுத்த நாளே நேரசூசியை மாற்றி காலை 8.00–9.00 விரிவுரை போட்டுவிட்டார். பாவம் சிவம். 7 மணிக்கு வீட்டிலிருந்து புறப்பட்டு, பிள்ளைகளை 7.30 க்கு இறக்கிவிட்டு பல்கலைக்கழகம் வந்தாக வேண்டும். பிள்ளைகள் ஒரு மணி நேரம் முன்னதாகவே வந்து தூங்குவதைக் கண்ட அருட்சகோதரி ஒருவர் அவர்களுக்கு ஆங்கிலம் கற்பிக்கலானார். பிள்ளைகள் முன்னேறி மருத்துவபீடம் நுழைந்தார்கள்.

“நயனங்கள் மூன்றுடைய நாயகனே தண்டித்தால் சயமன்றோ!”



என்று ஏற்றுக் கொண் டார் சிவம்.

சிவலிங்கராசா வின் reality wit எனக்குப் பிடிக்கும். பேராசிரியர் ஒருவரின் தலைமை யில் ஒரு முறை உரை யாற்றத் தொடங்கும் போது சிவம் சொன் னார்; “எம் இருவருக்கு மிடையில் பத்து வித மான முரண்பாடுகள் இருந்தாலும், நாம் அத்துவிதமாகவே இருக்கிறோம்!” இந்தச் சொல்லாடல்தான் இவர் பேச்சின் வசீகரம்!





சிவத்துக்குள் ஒரு கவிஞன் இருப்பதை எனக்குமுன் கண்டுகொண்டவர். கைலாசபதி. ஒரு கவியரங்கில் சிவம் தன் கவிதையை அரங்கேற்றியபின் இறங்கிவர, “கொஞ்சம் முக்கினால் உனக்குக் கவிதை வரும்!” என்று பாராட்டியவர் கைலாசபதி. யாழ்ப்பாணக் கல்லூரியில் நடந்த பாரதி விழாக் கவியரங்கில் சிவம் பாடிய கவிதை பிரசித்தமானது :

மகாகவி பாரதி மீது எம்மிருவருக்குமுள்ள ஈடுபாடு சொல்லுந்தரமன்று. நெஞ்சின் மிக்கது வாய் நேரும் என்பர். ஒரு நாள் தன் முழங்கால் வலி பற்றி முறையிட்டார் சிவம். நான் சொன்னேன் : “உங்களுக் கென்ன, வீட்டிலேயே நாலு மருத்துவர்!” வாய்மூடு முன் அவர் சொன்னார்;

“நாலு வைத்தியரும் – இனிமேல்
நம்புதற்கில்லை என்றார்!”

தன் நூலை வித்தியானந்தனுக்குச் சமர்ப்பணம் செய்ய பாரதியின் வாக்கை எடுத்தாள்கிறார்.

“திண்ணை வாயில் பெருக்க வந்தேன்எனை
தேசம் போற்றத் தன் மந்திரியாக்கினாய்!”

சிவலிங்கராசாவுக்குள் ஒரு கவிஞன் இருப்பதை நான் எப்பொழுதோ கண்டு கொண்டேன்.

“நீறிலங்கு நெற்றி நிலவெறித்த குங்குமத்தை
நூறுமுறை உன்னும் உளம்!” என்பதும்,
“மின்சாரம் தந்த மிகுந்தபல சேவையையும்
சம்சாரம் தானே – இன்று
சரிக்காட்டிக் கொள்கிறது! என்பதும்,
“இடம்பெயர்ந்து
“அகதி முடிசூடி” அலைந்து திரியும்
அவனும் மனிதன் தான்!
நெஞ்சைக் கொடுத்து நிமிர்த்திச் சைக்கிளிலே
கொஞ்ச விறகைக் கொண்டு வந்து தந்திடுவான்
அவன்
வயிற்று நெருப்பைத் தணித்த திருப்தியிலே
என் வீட்டடுப்பு
புகை கக்கிச் சூடேற்றும்”

கவி மின்னல் கீற்றுக்கள்.

இவற்றை அவர் ஊதி ஒளிரச் செய்யவில்லை என்ற மனக்குறை எனக்குண்டு.

சிவலிங்கராசாவுக்குள் ஒரு கிராமத்தான் இருக்கின்றான். வடமராட்சி, கரவெட்டிப் பேச்சுத் தமிழில் ஊறிய, அம்மக்களின் பழக்க வழக்கங்களை ரசிக்கும் – இன்றும் அவர்கள் உரையாடலை ஏற்ற இறக்கத்தோடு mime பண்ணும் ஒரு கலைஞன் வாழ்கின்றான். திருநெல்வேலி வாசியாகி 50 வருடமாகியும் “துடைக்கினும் போகேன்!” என்று அவரோடு அடம் பிடிக்கிறது வடமராட்சிப் பண்பாடு!

இடையீடின்றி நாம் நடத்தும் மாலை உரை யாடல்களில் – நான் முன்பு கண்டிராத சீனியம்மான், சட்டம்பியார் பரம்பரை யாக்கரை கணேசன், பண்டிதர் பொன் கணேசன், கவிஞர் அல்வாயூர் செல்லையா, மன்னவன் கந்தப்பு, A.D.சுப்பிரமணியம், வீரசிவலிங்கம், மூத்ததம்பி அப்பா விட்டார் என எண்ணற்ற சித்திரங்கள் என்மன அரங்கில் உலா வருகின்றன.

இக்கட்டுரையின் தலைப்பைப் பற்றிய விளக்கம் சிலருக்குத் தேவைப்படலாம். தமிழ் நாட்டின் சைவ ஆதீனங்கள் சமய ஒழுகலாறுகளைக் கட்டிக்காத்து வருபவை. ஓர் ஆதீனத் தம்பிரான் சற்று இறுக்கமாகவே சம்பிரதாயங்களைப் பேணுகிறவர். “வீண்வார்த்தை பேசக்கூடாது. தெய்வ சிந்தனை, பேச்சுத் தவிர வேறு எதுவும் காதில் விழக்கூடாது எனக் கட்டளை இட்டிருந்தார்.

பேச அனுமதிக்கப்பட்ட சொல் “சிவ” மட்டுமே. அது பெயராயும் வரும்; வினையாயும் வரும்.

ஒரு நாள் இரண்டு பணியாளர்களுக்கிடையில் முரண்பாடு முற்றி, கைகலப்பில் முடிந்தது. தம்பிரான் அவர்களை அழைத்து விசாரணை நடத்தினார். சாட்சியமளித்த ஒருவன் நடந்ததை விபரிக்கலானான் :

“அச்சிவம் இச்சிவத்தை, சிவ!”
“இச்சிவம் அச்சிவத்தை சிவசிவ
அச்சிவம் இச்சிவத்தைச் சிவசிவ சிவசிவ
இச்சிவதம் அச்சிவத்தை சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
அச்சிவம் இச்சிவம்
சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ”

பேராசிரியர் சபா.ஜெயராசா

பழந்தமிழ் இலக்கியம் தொடர்பான சு.வித்தி யானந்தனது புலமை ஊட்டலும் நவீன இலக்கிய வளர்ச்சி தொடர்பான பேராசிரியர் க.கைலாசபதி, கா.சிவத்தம்பி ஆகியோரது தெளிவெழல் நோக்கும் (INSIGHT) பேராசிரியர் சிவலிங்கராசாவின் இலக்கிய நோக்கிலும், அறிவுத்திரள் பரப்பிலும் (SCHEMA) ஆக்க விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன.

# தமிழ்ப்புலமை மரபின் தளர்விலாத் தொடர்ச்சியில் நிமிர்நிலை கொள்ளும் பேராசிரியர்

அறிகை, (COGNITION) அறிவு (KNOWLEDGE) மீயறிகை (METACOGNITION) என்ற நிலைகளில் மரபுவழித் தமிழ்ப்புலமை வரைபின் நீட்சி வடிவினராக மட்டுமன்றி, புதிய வளர்ச்சிகளோடு உறவாடும் ஆளுமை நிறைவோடும் நிரல் கொண்டு நிற்பவர், பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா. இலக்கணர மரபு, செய்யுள்மரபு, உரை மரபு, முதலாம் பன்முகக் கவிப்பைக் கொண்ட தமிழ்ப் புலமைப் பெரு மரபில் ஈழத்து அடையாளத் தேடலை முன்னெடுத்த தேசிய இனச் சால்பு வரைபை மேற் கொண்டவராகவும் அவர் விளங்கு கின்றார்.


மொழியின் அடிப்படைக் கட்டமைப்பை நிலை நிறுத்தி நிற்பது இலக்கணம். மொழியின் பன்மைப் பரிமாணங்களை அறிவியல் நிலையில் ஆராய்வது மொழியியல் மொழியின் அழகியல் வெளிவீச்சைத் தொகுத்து நிற்பது இலக்கியம், மொழி வழி அறிவை உருவாக்குதல், களஞ்சியப் படுத்தல், கையளித்தல், செயல் விளைவை உருவாக்குதல் ஆகிய வற்றோடு தொடர்புபட்டு நிற்பது கல்வியியல் மொழி என்ற பெருந் தளத்தில் அமைந்த அறிபரி மாணங்களோடு நீடுநிலைத்து நிற்பவர் பேராசிரியர்.

மொழி பற்றிய ஆய்வில் மொழி நிகழ்த்துகை (Performance) மொழித் திறனெழுதேர்ச்சி (COMPETENCE) ஆகிய கருத்து வடிவங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. நிலைபேறான சூழலில் மொழியை உள்ளுணர்ந்து பயன்படுத்துதல் மொழியின் நிகழ்த்துகையாகும். மொழியை விளைவு நோக்கிக் கையாளுதலாக அது அமையும்.

மொழி பற்றிய உள்ளார்ந்த அறிவின் இருக்கை திறனெழு தேர்ச்சியாகின்றது. ஆற்றுகை நிலைவரத்தில் மொழி மீது பிறகாரணிகள் செல்வாக்கை விளைவிக்கவல்லவை.

மொழியியலாளர் மேற்கூறிய நிலைவரத்தில் மொழியை நோக்க, அறிகை உளவியலாளர் சொற்கள் கருத்து வடிவங்களை (Concepts) தாங்கி நிற்றல் பற்றியும், தன்மயமாக்கல் தன் அமைவாக்கல் ஆகிய செயற்பாடுகளை அடியொற்றி மொழிப் பயன்பாடும் சமூக இடைவினைகளும் அறிகை அமைப்பு உருவாக்கமும் இடம் பெறுதலையும் விளக்குகின்றனர்.

சமூக இருப்பினதும் இலக்கத்தினதும் வழியாக மொழியின் உரு வாக்கமும் செயற்பாடுகளும் நிகழ்வதை மார்க்சிய அறிகை உளவியலாளர் குறிப்பிடுவர்.



மொழி பற்றிய நோக்கை மேலும் விபரிக்க வந்த சோம்ஸ்கி "அகில நிலை இலக்கணம்" "தொற்று வாய் இலக்கணம்" முதலாம் கருத்து வடிவங்களை முன்வைத்துள்ளார். மொழியின் கட்டுமானம், உயிரியல் தொடர்ச்சி வழியாக மனித மூளையில் இடம் பெற்றுள்ளமையை விரிவாக விளக்கினார். மனித உயிரியல் வளர்ச்சிக்கும், மொழிக்கும், இலக்கண ஆக்கத்துக்கும் உள்ள தொடர்புகள் பற்றிய சிந்தனைகள் உலகில் வளர்ச்சி கொள்ளத் தொடங்கின.



மனித மூளையின் மொழிக் கட்டுமானம் அனைத்தும் மனிதருக்கும் பொதுவானதாக இருத்தல் அகில நிலை இலக்கணத்தால் விளக்கப்படுகிறது. சொற்களைப் பயன்படுத்தி இலக்கண விதிகளுக்கு உட்பட்டதாக எண்ணிறந்த வசனங்களை உருவாக்க முடியும் அல்லது பிறப்பாக்கம் செய்ய முடியும் என்பதை தோற்றுவாய் இலக்கணம் என்ற கருத்து வடிவம் வாயிலாக சோம்ஸ்கி விளக்கினார்.

மொழியும் இலக்கணமும் தொடர்பான கருத்தாடல்கள் இருபதாம் நூற்றாண்டிலே பல நிலைகளில் மேற்கிளம்பலாயின அந்நிலையில் தமிழ் இலக்கண வல்லுனர்கள் மொழியியல் சிந்தனைகளோடு உறவாடலாயினர்.

தமிழ்க் கற்சாசனங்களில் இடம் பெற்றுள்ள மொழியையும் இலக்கண அமைதியையும் பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை ஆய்வுக்கு உட்படுத்தினார். மரபுவழித் தமிழ் இலக்கணப் புலமையாளர்களாகிய பேராசிரியர் எ.சதாசிவம் பேராசிரியர் சண்முகதாஸ் ஆகியோர் நவீன மொழியற்கல்வியிலும் ஈடுபாடு கொண்டனர்.

தமிழ் மொழியின் வரலாற்றுப் போக்கில் நிகழ்ந்த இலக்கண விரிவையும் வளர்ச்சிகளையும் பேராசிரியர் அ.வேலுப்பிள்ளை விரிவான ஆய்வுகளுக்கு உட்படுத்தினார்.

மார்க்சிய நோக்கில் சமூக வளர்ச்சிக்கும் இலக்கண வளர்ச்சிக்கும் உள்ள தொடர்புகளை பேராசிரியர் கா.சிவத்தம்பி ஆழ்ந்து ஊடுருவி விளக்கினார்.

பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் நிகழ்ந்த அந்த வளர்ச்சிகள் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசாவின் வளர்ச்சிக்குரிய ஊட்டல் வளங்களாக அமைந்தன. அவற்றோடு பண்டிதர் வீரகத்தியுடனான இலக்கணக் கல்வி வீச்சும் அவரது தமிழ் அறிவுப்பரவலில் நெட்டாங்கு மற்றும் அகலாங்கு நீட்சிகளை ஏற்படுத்தின.

பழந்தமிழ் இலக்கியம் தொடர்பான சு.வித்தியானந்தனது புலமை ஊட்டலும் நவீன இலக்கிய வளர்ச்சி தொடர்பான பேராசிரியர் க.கைலாசபதி கா.சிவத்தம்பி ஆகியோரது தெளிவெழல் நோக்கும் (INSIGHT) பேராசிரியர் சிவலிங்கராசாவின் இலக்கிய நோக்கிலும், அறிவுத்திரள் பரப்பிலும் (SCHEMA) ஆக்க விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன.

பின் காலனிய சூழலில் தேசிய இலக்கியம், தேசிய இனச் சால்பினரை அடையாளப்படுத்தும் இலக்கியம், முதலியவற்றின் எழுச்சி நிகழலாயிற்று. அவற்றின் பின்புலத்தில் ஈழத்துத்தமிழ் இலக்கியத்தைத் தேடலும், தனித்துவத்தை நிலை நிறுத்தலும். முன்னெடுக்கப்படலாயின.

பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசாவின் பின்வரும் எழுத்தாக்கத் தொகுப்பை நோக்கும் பொழுது, அத்தகைய விளைவை உற்றறி நோக்கிலும், புலமை நோக்கிலும் செறிவுடன் முன்னெடுத்து அடையாளப் படுத்தியுள்ளார் என்பதைக் காணலாம்.

அவரது படைப்புப் பட்டியல் வருமாறு:

ஈழத்தத் தமிழ் இலக்கியச் செல்நெறி, தமிழியற் கட்டுரைகள் (தொகுப்பு) பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஈழத்தத் தமிழ்க் கல்வி, யாழ்ப்பாணத்து வாழ்வியற் கோலங்கள், ஈழத்துத்தமிழ் உரை மரபு, வித்துவ சிரோமணி கணேசையர், சுன்னாகம் அ.குமாரசாமிப் புலவர் வாழ்வும் பணியும், வடமராட்சியின் கல்விப் பாரம்பரியம், ஈழகேசரியும் குழந்தை இலக்கியமும், சிவை.தாமோதரம்பிள்ளை வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம், ஆகிய நூல்களின் நீட்சியாக இந்திய

ஆசிரியர்களின் கல்விப் பங்களிப்பின் சுவறல் பற்றிய விபரண நூலாக்கமும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஈழத்துத் தமிழ்ப் புலமை மரபின் நீட்சியையும் தொடர்ச்சியையும் அவர் எவ்வாறு முன்னெடுத்து வந்தார் என்பதைப் பின்வரும் தொடர்ச்சி வெளிப் படுத்தும்.

அ. பேராசிரியர் க.கணபதிப்பிளை ஈழத்தமிழர் வாழ்வியற் கோலங்களை சமூக மானிட வரைபாக்கி, "ஈழத்து வாழ்வும் வளமும்" பற்றிய பனுவலை எழுதி னார். அதன் தொடர்ச்சியில் பேராசிரியர் சிவலிங்கராசா "யாழ்ப்பாணத்து வாழ்வியற் கோலங்கள்" என்ற நூலை எழுதினார். யாழ்ப்பாணத்தில் நிகழும் சடங்குகளையும், வழக்காறுகளையும் ஆவணப்படுத்தும் ஆக்கமாக அது வெளிவந்தது. கலைக்கேசரியில் கட்டுரைகளாக வெளிவந்து அந்த ஆக்கம், பின்னர் நூலுருப் பெற்றது.

ஆ. உயர் கல்வியில் ஆங்கிலம் கற்பித்தல் தொடர்பான செயல் நிலை ஆய்வுகள் உலகில் பரவலாக நிகழ்ந்து வருகின்றன. கடினமான விடயங் களை நகைச்சுவை செறுங்கலவைப்படுத்திக் கற்பிக்கையில், விளைவு உச்ச நிலையில் இருத்தல் கண்டறியப்பட்டுள்ளது. பேராசிரியர் சு.வித்தியானந்தன் கடினமான இலக்கணத்தை நகைச்சுவை கலந்து கற்பித்து ஆக்கவிளைவை ஏற்படுத்தியமை பல்கலைக் கழகத்திலே செயல்நிலை வெற்றியை ஈட்டியது. தமிழ் கற்பித்தலில் நகைச்சுவை கலந்த கற்பித்தல் மரபை பேராசிரியர் சிவலிங்கராசாவும் பேராசிரியர் நா.சுப்பிர மணிய ஐயரும் தொடர்ந்து நிலை நிறுத்தினர்.

இ. பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் உள்ளோர் கல்வியியல் துறை சார்ந்த அறிவளிக்கை இயலில் (PEDAGGY) ஈடுபாடு கொள்ளல் சுவாமி விபுலானந்தர் காலத்திலிருந்தே வளர்ச்சி கொண்டு வந்துள்ளது. அதன் தொடர்ச்சியாக பேராசிரியர் கா.சிவத்தம்பி "தமிழ் கற்பித்தலின் உள்ளகங்கள்" என்ற நூலை எழுதினார். தொடர்ந்து பேராசிரியர் சிவலிங்கராசா கல்வியோடு இணைந்து நான்கு நூல் களை எழுதியுள்ளார்.

தமிழர்களின் மரபு வழிக் கல்விச் செயற்பாடுகள் தொடர்பான வாய்மொழி மரபுகளை ஆவணப்படுத்த வேண்டிய தேவை காலச் சூழலில் எழுந்துள்ளது.

திண்ணைப்பள்ளி என்பதன் பழைய பெயர் "தாவரப்பள்ளி", குருகுலப்பள்ளி என்பதன் முன்னைய பெயர் "அண்ணாவிக் கோட்டம்" எனப்பட்டது. அவற்றோடு மரநிழற்பள்ளி, நிலாப்பள்ளி, பட்டறைக் கல்வி, மடத்தடிக்கல்வி, அட்டாளைக்கல்வி, துறவுக் கல்வி முதலாம் அமைப்புக்களும் இருந்தன. தமிழருக்கு என நீண்ட கல்வி இருந்தது என்பதை வாய்மொழித் தேட்டம் அடையாளப்படுத்துகின்றது.

ஈ. இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தத்துவம் பேராசிரியர்களாக க.கைலாச பதியும், கா.சிவத்தம்பியும் விளங்கினர். ஈழத்து இலக்கியம் தொடர்பான அவர்களின் சிந்தனை ஊறல் பல்கலைக்கழகத் தமிழியல் ஆய்வுகளில் செயற்பாடு கொண்டு வளரலாயின. தமிழ் என்ற பொது நிலை



ஆய்வுகளில் இருந்து ஈழம் தழுவிய சிறப்பு நிலை ஆய்வு மேலெழலாயிற்று.

ஈழத்துத் தமிழ்ச் சமுதாயத்தின் பண்பாடு மற்றும் இன உணர்வுகள் தொடர்பான தேடலின் முன் னெடுப்பை பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை, பேராசிரியர் சு.வித்தியானந்தன் ஆகியோர் தொடக்கி வைத்தன ராயினும், கருத்தியல் நிலையில் அதற்குரிய உரை யாடலை பேராசிரியர் க.கைலாசபதியும் கா.சிவத் தம்பியும் முன்னெடுத்தனர். தமிழ் இலக்கிய நெடுப் பரப்பில் "ஈழத்து இலக்கியம்" என்ற இணைப்பு மேலெழுந்தது.

ஈழத்து இலக்கிய அடையாளங்களை மீட்டெடுக்கும் மரபை பேராசிரியர் சிவலிங்கராசா மேலும் முன்னெடுத்து ஆய்வுகளையும் ஆக்கங்களையும் பரவலிட்டார்.

உ. உலக இலக்கியப் பரப்பில் சிறுவர் இலக்கியம் என்ற ஆய்வுப் புலம் பதினெட்டாம் நூற்றாண்டிலிருந்தே வளர்ச்சி கொள்ளத் தொடங்கியது. குழந்தை உளவிய லின் வளர்ச்சியோடு சிறுவர் இலக்கிய ஆக்கமும் ஆய்வுகளும் பல்கலைக்கழக நிலையில் எழுகோலம் பெற்றன.


இலங்கையின் உயர் கல்விப் புலமை மரபு வளர்ந்தோர் இலக்கியங்களோடு தான் பெருமளவில் தொடர்புபட்டு நின்றது. உளவியலாளர் அருணந்தி அவர்களின் முயற்சி, சிறுவர் இலக்கிய ஆக்க நிலை நிறுத்தலை ஏற்படுத்தியது. அந்த மரபோடு உறவாடியும் அளிக்கையை மேற்கொண்டும் பேராசிரியர் சிவலிங்க ராசா இயங்கலானார். தமிழ்புலமை மரபின் தளர்விலா நீட்சியில். பேராசிரியர் சிவலிங்கராசாவின் அடையாளம் அவரது ஆக்கங்களின் எழுகை வலுவோடு நிற்கின்றன.

கலாநிதி க. இரகுபரன்



தம்முடைய
புலமைச் செயற்பாடுகளில்
ஈழத்துத் தமிழிலக்கியத்துக்கு
முன்னுரிமை
கொடுத்த பல்கலைக்கழக
அறிஞர் வரிசையில்
இன்று மிக
முக்கியமானவராகத்
திகழ்பவர்
பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா
அவர்களே.
அவர் மேற்கொண்ட
பிரதானமான
ஆராய்ச்சிகள்
ஈழத்து இலக்கியம்,
பண்பாடு
தொடர்பானவையே. அவற்றுள்
மிக முக்கியமானதாகக்
கொள்ளத்தக்கது
“ஈழத்துத் தமிழ் உரை மரபு”
எனலாம்.

# பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா ஈழத்து உரை மரபைத் துலக்கிய பேருபகாரி




தமிழ், இன்று பல்தேசிய மொழிகளுள் ஒன்றாக விளங்குகிறது. ஆனால் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பாதிக்கு முன்பாக தமிழ் அத்தகைய நிலையினை எய்தியிருக்கவில்லை. பாரத கண்டத்தின் தென்முனையிலே உள்ள ஓரளவு பரந்த நிலப்பரப்பிலேயே அது பண்டைக்காலம் முதலாக நிலவி வந்தது. அந்தக்காலம் முதலாகவே ஈழநாட்டிலும் தமிழ் மொழி நிலைபெற்று வழங்கி வந்தமையை தொல்லியற் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. ஆயினும் தென் தமிழகத்தோடு ஒப்பிடும் நிலையில், ஈழம் மிகச் சிறிய நிலப்பரப்பையும் மக்கள் தொகையையும் கொண்டதாகவே அமைந்தது. அன்றியும் பலம் மிக்க தமிழரசர் ஆட்சி ஒன்றின் கீழ் நிலைபேறாக அது விளங்கவும் இல்லை. இத்தகு காரணங்களால் தமிழகத்தை ஒத்ததாக, அறாத் தொடர்ச்சியையும் பெருந்தொகை இலக்கிய முயற்சிகளையும் கொண்ட தமிழ் இலக்கிய வரலாறு ஒன்றினை, ஈழத்தில் கண்டுகொள்ள முடியவில்லை. எனினும், பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து - வேறொரு வகையில் கூறுவதாயின் ஆறுமுகநாவலர் காலம் முதலாக - ஈழநாடு தமிழ் மொழி, இலக்கிய துறைகள் பலவற்றில் முன்னோடியாகவும் செம்மையாகவும் அமைந்த சாதனைகள் பலவற்றுக்கு நிலைக்களமாக, வழிகாட்டியாக அமைந்தது.

அந்த நிலையை ஈழம் என்று எய்தியதோ, அன்றே அது பிராந்திய ரீதியான காழ்ப்புணர்வுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலையையும் எய்தியது. அன்று முதல் தமிழகத்து “வீரசாமிச் செட்டியார்” களுக்கு “நல்லறிவுச் சுடர் கொளுத்தும்” மனப்பாங்கு

ஒன்று ஈழத்துத் தமிழறிஞர்களிடம் தம்மையறியாதே முனைப்புற்றது. தமிழகத்தார் சிலர் ஈழத்தறிஞர்மேல் வெளிப்படுத்திய காழ்ப்புணர்வுக்கான பதிற்குறி நடவடிக்கைகளை ஈழத்தில் ஆறுமுகநாவலர் முதலான பாரம்பரியத் தமிழறிஞர் தொடக்கம் பேராசிரியர்கள் தனஞ்சயராசசிங்கம், கைலாசபதி, பூலோகசிங்கம் முதலான ஈழத்துப் பல்கலைக்கழகத் தமிழறிஞர் வரை பலரிடத்தும் கண்டு கொள்ளலாம். ஈழத்தில், பல்கலைக்கழகங்களிலும் வெளியிலும் "ஈழத்துத் தமிழிலக்கியம்" சிறப்புக் கவனத்தைப் பெற்றதும் அந்த வகையில் என்றே கொள்ள வேண்டும்.

அவ்வகையில், தம்முடைய புலமைச் செயற் பாடுகளில் ஈழத்துத் தமிழிலக்கியத்துக்கு முன்னுரிமை கொடுத்த பல்கலைக்கழக அறிஞர் வரிசையில் இன்று மிக முக்கியமானவராகத் திகழ்பவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா அவர்களே. அவர் மேற்கொண்ட பிரதானமான ஆராய்ச்சிகள் ஈழத்து இலக்கியம், பண்பாடு தொடர்பானவையே. அவற்றுள் மிக முக்கிய மானதாகக் கொள்ளத்தக்கது "ஈழத்துத் தமிழ் உரை மரபு" எனலாம்.

தமிழ் இலக்கியங்களுக்கு ஈழத்தவர்கள் எழுதிய உரைகள் பற்றிய அந்த நுண்ணாய்வு கலாநிதிப் பட்டத்துக்காக அவரால் மேற்கொள்ளப்பட்டதாகும். பேராசிரியர் சிவலிங்கராஜா, அதனை உசிதமான சில திருத்தங்களோடு ஒரு நூலாக "குமரன் புத்தக இல்லம்" ஊடாக 2003ஆம் ஆண்டில் வெளிப்படுத்தினார்.

தமிழ் உரை மரபு நெடிய, வளமான வரலாற்றினைக் கொண்டது. ஆனால் ஈழத்தில் தமிழ் உரைமரபு அத்துணை நெடிய வரலாற்றினைக் கொண்ட தல்ல. எனினும் அது வெறுமையானதும் அல்ல; குறிப் பிடத்தக்க சிறப்பம்சங்கள் பலவற்றைக் கொண்டது; தனியான ஆய்வுக்கு உரியது. இந்த உண்மையை உணர்ந்து கொண்ட பேராசிரியர் க.கைலாசபதி யவர்கள், தன் அன்புக்கும் புலமை ரீதியிலான நம்பிக்கைக்கும் பாத்திரரான மாணவராக விளங்கிய எஸ்.சிவலிங்கராஜாவை இந்த ஆய்வை நோக்கி வழிப் படுத்தினார். அது தொடர்பில் பேராசிரியர் எஸ்.சிவலிங்க ராஜா தன் நூலின் முகவுரையில் முன்வைக்கும் விடயங்கள் அவதானிக்கத்தக்கன.

> "ஈழத்து தமிழ் உரை மரபிலே ஆய்வு செய்ய வேண்டும் என்ற ஊக்கத்தினை எனக்குத் தந்தவர் பேராசிரியர் கைலாசபதி அவர்களே. சுன்னாகம் அ.குமாரசுவாமிப் புலவர் பற்றி முதுமாணிப்பட்ட ஆய்வினை நான் மேற்கொண்டிருந்த வேளையில் அதற்கு மேற்பார்வையாளராக இருந்த கைலாசபதி, முதுமாணிப்பட்ட ஆய்வு நிறைவு பெற்றதும் ஈழத்துத் தமிழ் உரைமரபு பற்றிய ஆய்வினைச் செய்ய வேண்டும் என்று பணித்தார். வைத்திய சிகிச்சைக்காக யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்குப் புறப்பட்ட போது தமது "லீவு"க் கடிதத்தினை என்னிடம் தந்து இதனைப் பல்கலைக்கழகத்திலே கொடுக்கும் படி கூறிய தோடு மு.வை. அரவிந்தன் எழுதிய "உரையாசிரி யர்கள்" என்னும் நூலையும் தந்து "படித்துப்பார்" என்று கூறிச் சென்றவர் பின் திரும்பவேயில்லை.
> ஈழத்துத் தமிழ் இலக்கியப் பரப்பைத் தொட்டுக் காட்டி, அதனைத் துலக்கும் வகையில் ஆய்வுகள் செய்ய வேண்டும் என்று தூண்டி என்னை





அணைத்து வளர்த்த என் பேராசான் பேராசிரியர் க.கைலாசபதியை கண்கள் பனிக்க, நெஞ்சு கனக்க இந்நூல் வெளிவரும் வேளையிலே நன்றியுடன் நினைவு கூருகின்றேன்."

ஒரு வாக்குமூலமாக அமையும் இந்த முன்னுரையில், ஈழத்துத் தமிழிலக்கியத்தில் கைலாசபதி கொண்டிருந்த கரிசனையும் அக்கரிசனை பேராசிரியர் சிவலிங்கராஜாவிடம் தொற்றுவிக்கப் பட்டவாறும் நன்கு துலக்கமுறுகின்றன. கூடவே, இருவருக்கும் இடையிலான அத்தியந்த உறவையும் பேராசிரியர் கைலாசபதி கடைசி நாட்களில் தன் மனதை எந்தத் துறை நோக்கிச் செலுத்தியிருந்தார் என்ற உண்மையையும் உணர்ந்து கொள்ள முடியும். மு.வை.அரவிந்தன் எழுதிய "உரையாசிரியர்கள்" என்ற நூலைப் படித்ததன் பதிற்குறியாக அமைந்ததே ஈழத்து உரைமரபு பற்றிய கைலாசபதியின் அக்கறை என்பதையும் இந்த முன்னுரையூடு ஓரளவில் உணர்ந்து கொள்ள முடிகின்றது. ஆய்வுக்கு மூலவராக விளங்கிய கைலாசபதி காலமான நிலையிலும், தன் ஆசானின் ஆவலை செவ்விய முறையில் சிவலிங்கராஜா பூர்த்தி செய்துள்ளார்.

இந்த ஆய்வு முயற்சி தொடங்கிய நிலையிலோ அன்றேல் முற்றுப்பெற்ற நிலையிலோ குறித்த விடயம் தொடர்பிலான முன்னோடி ஆய்வு எதுவும் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க வகையில் இடம்பெற்றிருக்கவில்லை. அவ்வகையில் இதனை ஒரு முன்னோடி ஆய்வு என்றே கொள்ள வேண்டும். மொத்தம் ஐந்து இயல்களையும் முடிவுரையையும் கொண்டதான இந்த ஆய்வின் முதலாவது இயல் "ஈழத்துத் தமிழ் உரைமரபு" பற்றி வரலாற்று நோக்கில் சுருக்கமாக விளக்கியுரைக்கின்றது. சங்க இலக்கிய உரைகள், நீதி நூல் உரைகள், பக்தி இலக்கிய உரைகள், புராண இதிகாச உரைகள் என்பன ஏனைய இயல்களின் தலைப்புக்கள். அந்த இயல்களின் உள்ளார்ந்த விடயங்களை நோக்குகையில் இந்த நூல்களுக்கெல்லாம் ஈழத்தவர் இத்தனைபேர் உரை எழுதினார்களா என்ற வியப்புணர்ச்சி நிச்சயம் ஏற்படும். சுருக்கமாகக் கூறின் ஈழத்துத் தமிழியலுக்கு பல்வேறு பங்களிப்பினை நல்கிய பேராசிரியர் சிவலிங்கராஜா அவர்களின் அந்தத் துறை சார்ந்த "பெரும் படைப்பு" இது என்று துணிந்து கூறலாம்.

அந்தத் துணிவுக்கு மத்தியிலும் சிறு துணுக்கம் ஒன்று எம் மனதில் எழுவது தவிர்க்க முடியாதது.

"ஈழத்துத் தமிழ் அறிஞர்கள் இலக்கியம், இலக்கணம், தத்துவம் முதலிய துறைசார் நூல் களுக்கு உரை கண்டுள்ளனர். இவை ஒவ் வொன்றும் தனித்தனி ஆய்வுப்பரப்புக்கு உரியவையாகக் காணப்படுகின்றன. "ஈழத்துத் தமிழ் உரைமரபு" என்னும் இவ்வாய்விலே தமிழ் இலக்கியங்களுக்கு ஈழத்து அறிஞர்கள் எழுதிய உரைகளே நுண்ணாய்வுக்கு உட்படுத்தப் பட்டுள்ளன."

பேராசிரியர் சிவலிங்கராஜா அவர்களின் மேற்படி கூற்று, அவரது ஆய்வின் எல்லை எது என்பதனைத் தெளிவுபடுத்தும். அதாவது, ஈழத்து அறிஞர்கள் தமிழ் இலக்கியங்களுக்கு எழுதிய உரைகள் மாத்திரமே அவரது ஆய்வில் கருத்தில் எடுக்கப்பட்டன. ஏனைய இலக்கணம், தத்துவம் ஆகிய துறைகளுக்கு ஈழத்து அறிஞர்களால் எழுதப்பட்ட உரைகள் பற்றிய ஆராய்ச்சிப் பரப்பு இன்னும் வெறுமையாகக் கிடக்கின்றதே என்பதுதான் எழும் துணுக்கம். உண்மையில் ஈழத்தவர்களால் தமிழ் இலக்கியங்களுக்கு எழுதப்பட்ட உரைகளை விட, இலக்கணம், தத்துவம் ஆகிய துறைகளுக்கு எழுதப்பட்ட உரைகளே வளம் மிக்கன. அவை தொடர்பான ஆராய்ச்சியை, எந்தக் கைலாசபதி தூண்டப்போகிறார்? எந்த சிவலிங்கராஜா துலக்கப் போகிறார்?

கலாநிதி அம்மன்கிளி முருகதாஸ்

# பேராசிரியர் சிவலிங்கராஜாவின்
## ஈழத்துத் தமிழ் இலக்கியச் செல்நெறி

பேராசிரியர் சிவலிங்க ராஜாவின் ஈழத்துத் தமிழ் இலக்கியச் செல்நெறிபற்றி நோக்க முயலும் போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை யின் ஈழத்து இலக்கிய வரலாற்றுத் தேடல் பற்றி குறிப்பிடவேண்டும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை அதன் ஆரம்ப காலத்திலிருந்தே (1974) ஈழத்து இலக்கிய வரலாற்றையும் ஈழத்துப் பூதந்தேவனார் முதல் இன்றைய :ஈழத்துப் புலவர்கள் எழுத்தாளர் கள் பற்றியும் ஈழத்து வரலாறு பற்றி யும் கூடிய ஆர்வம் காட்டியது. தமிழ்த்துறையில் தமிழ்ச் சிறப்புக் கற்கைகளை மேற்கொண்ட மாணவர்களுக்கு ஈழத்து இலக்கி யம் பற்றியும் ஈழத்து இலக்கிய காரர்கள் பற்றியும் ஆய்வுகளை மேற்கொள்ளுமாறு வழிப் படுத்தியது. தமிழ் விசேடகற்கை மாணவர்களில் முதல் தொகுதி மாணவர்களில் க. நாகேஸ்வரன் சி. சுமத்திரி ஆகியோரும் இரண்டாம் தொகுதி மாணவர்களாக எஸ் சிவலிங்கராசா, சு. சரஸ்வதி இ.கண்ணம்மா, சர்வஜீவதயாபரி க.சுபத்திரா உ.செல்வரத்தினம் அம்மன்கிளி (அடியேன்) என ஏழுபேரும் கற்றோம் எங்களுக்கு அக்காலத்தில் ஆய்வுக்காகத் ஈழத்துத்தமிழ் இலக்கியம் சார்ந்தே ஆய்வுத் தலைப்புகள் தரப்பட்டன. அவற்றிற் சில வருமாறு

சுபத்திரா- ஈழத்துப் பழமொழிகள்

சர்வ ஜீவதயாபரி- யாழ்ப் பாணத்துக் கல்வெட்டுகள் (யாழ்ப் பாணத்தில் இறந்தவர்களின் நினைவாக எழுதப்படும் கல்வெட்டுமரபு பற்றியது).

சிவலிங்க ராஜா - வடமராட்சிக் கல்விப் பாரம்பரியம்

சரஸ்வதி - இலங்கையர்கோன் கதைகள்

கண்ணம்மா- ஈழத்து ஊஞ்சல் பாடல்கள்

அம்மன்கிளி- ஈழத்து அறிஞர்களின் இலக்கிய இலக்கண சர்ச்சைகள்



அடுத்த தொகுதி மாணவர்களும் இலங்கை தொடர்பான தலைப்புகளையே தெரிந்தெடுத்தனர் இவர்களில் றூபி வலன்ரினா இலங்கையில் தனித் தமிழ் இயக்கம் என்ற தலைப்பைத் தெரிவு செய்திருந்தார். முதல் தொகுதி மாணவி சுமத்திரி மகாகவியின் கவிதைகள்பற்றி எழுதினார்.

சிவலிங்கராஜா பல்கலைக்கழகத்தில் கற்று முடிந்ததும் உடனடியாகவே விரிவுரையாளராக இணைந்தார் (1981) அவரது கற்றல் கற்பித்தல் ஆர்வம் ஈழத்து இலக்கியத்திலேயே குறிப்பாகச் சென்றது. க.கைலாசபதி, கா. சிவத்தம்பி,அ.சண்முகதாஸ் எம்.ஏ நுஃமான், மௌ சித்திரலேகா, நா.சுப்பிரமணியன் சி.கலையரசி க.யோகேஸ்வரி ஆகியோரிடமும் கா. இந்திரபாலாவிடமும் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்றவர். கைலாசபதி சிவலிங்கராஜாவிடம் ஈழத்து இலக்கிய வரலாறு பற்றி கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என அறிவுறுத்தினார்.

சிவலிங்கராஜா பல்கலைக்கழகத்துக்கு வர முன்னரே கவிதை எழுதுவதிலும் மேடைப் பேச்சிலும் ஆர்வம் கொண்டிருந்தார். பண்டிதர் வீரகத்தியின் மாணவர். உடுப்பிட்டித் தொகுதியில் போட்டியிட்ட பாராளுமன்ற உறுப்பினராக இருந்த மு,சிவசிதம் பரத்தின் தேர்தல் களங்களில் தமிழரசுக்கட்சியின் முக்கிய பேச்சாளராகவும் இருந்தவர். மரபுக்கவிதையில் வல்லவராக இருந்தார்.

ஏலவே அவருக்கு இருந்த தமிழார்வம் ,தமிழ் இலக்கிய அறிவு, பல்கலைக்கழகத்தில் அவர் பெற்ற வழிகாட்டல்கள் என்பன காரணமாக அவர் ஈழத்துப் புலவர் மரபையும் ஈழத்து இலக்கிய மரபையும் யாழ்ப் பாணத்துப் பண்பாட்டு மரபையும் உரைமரபையும் மட்டு மல்லாது ஈழத்துப் பதிப்புகளையும் ஆராயத் தொடங்கி னார். அவர் வெளியிட்ட நூற் பட்டியலைப் பார்த்தால் இவ்வுண்மை புலனாகும்.ஈழத்துத் தமிழ் இலக்கியச் செல்நெறி, ஈழத்து தமிழ் உரைமரபு வடமராட்சிக் கல்விப் பாரம்பரியம், யாழ்ப்பாணத்து வாழ்வியற் கோலங்கள், கணேசையர் போன்ற அவரது நூல்களையும் அக நானூறு, ஐங்குறுநூறு ஆகியவற்றின் மீள் பதிப்பு களையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

**ஈழத்துத்தமிழ் இலக்கியச் செல்நெறி**

ஈழத்துத்தமிழ் இலக்கியச் செல்நெறி என்ற இந்த நூலுக்கு முன்னர் ஆரம்பகால ஈழத்து இலக்கியம் பற்றி எழுந்த இரு நூல்களைக் குறிப்பிட வேண்டும் 1. ஈழத்துத் தமிழ்நூல் வரலாறு எவ்.எக்ஸ்.சி நடராசா 1970) ஈழத்துத்தமிழ் இலக்கிய வளர்ச்சி (க.செ நடராசா 1982) என்பன அவை. இவற்றில் காணப்பட்ட விடுபாடுகளை கவனத்தில் கொண்டு ஈழத்துத்தமிழ் இலக்கியச் செல்நெறியை எழுதியுள்ளார்.

ஈழத்துத்தமிழ் இலக்கியச் செல்நெறி இதுவரை நான்கு பதிப்புகளைக் கண்டுள்ளது. இதன் முதற் பதிப்பு 2001இலும் இரண்டாம் பதிப்பு 2003 இலும் மூன்றாம் பதிப்பு 2009 இலும் வெளியிடப்பட்டுள்ளன. இப்பதிப்பு களில் இரண்டாம் பதிப்பில் புதிய சில சேர்க்கைகள் இடம்பெற்றுள்ளன. பின்னர் மூன்றாம், நான்காம் பதிப்புகள் மாற்றமெதுவுமின்றி வெளிவந்துள்ளன. இவற்றில் திருத்தங்கள், சேர்க்கைகள் எதுவும் மேற் கொள்ளப் படவில்லை. இந்தக் கட்டுரைக்கு ஆதாரமாக எடுத்துக் கொள்ளப்பட்டது இதன் மூன்றாம் பதிப்பாகும்.

இந் நூல் பேராசிரியர் சிவத்தம்பிக்குச் சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. அந்த சமர்ப்பணம்

படையல்
காய்த்த மரம் ஆதலினால்
கல்லெறிகள் பட்டவன் நீ
கல்லால் எறிந்தவர்க்கும் கனிகொடுத்த
பழமரம் நீ
பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பிக்கு
இந்நூல்

என அமைகிறது.

நூலானது முன்னுரைகளுடன் ஐந்து இயல் களையும், பின்னிணைப்புகள் உசாத்துணைகள் சுட்டி ஆகியவற்றைக் கொண்டும் அமைந்துள்ளது. முதலா வது இயலாக அறிமுகமும் இரண்டாவது இயலாக ஆரியச் சக்கரவர்த்திகள் காலமும் மூன்றாவது இயலாக போர்த்துக்கேயர் காலமும் நான்காவது இயலாக ஒல்லாந்தர் காலமும் ஐந்தாவது இயலாக ஆங்கிலேயர் காலமும் அமைந்துள்ளன. பின்னிணைப்பில் இரண்டாம் பாலபோதத்தின் சிலபகுதிகளும் உ.வே. சாமிநாதையர் பதிப்பித்த சீவக சிந்தாமணியில் ஏற்பட்ட பிழைகளை எடுத்துக்காட்டி குமாரசாமிப்புலவர் வெளியிட்ட சீவக சிந்தாமணிப்பிழைகள் என்று குறிப்பிட்ட பிரசுரத்தின் ஒருபகுதியும் சி.வை தாமோதரம்பிள்ளை தனது நூல்கள் தொடர்பாக வெளியிட்ட விளம்பரம் ஒன்றும் கொடுக்கப் பட்டுள்ளன.

ஈழத்து இலக்கிய வரலாற்றை ஆய்வு செய்வதில் உள்ள பிரச்சினைகள் அறிமுகப்பகுதியில் கூறப் பட்டுள்ளன. இதில் இலங்கைத் தமிழரின் அரசியல் வரலாறு பற்றிய தெளிவின்மை நிலவுவதானது இலக்கிய வரலாற்றிலும் தெளிவின்மையை ஏற்படுத்தியுள்ளது என்பதுடன் இலங்கைத்தமிழ் மக்களின் நாட்டாரியல் பற்றிய ஆய்வுகளோ சிங்கள இலக்கியங்களுடனான ஊடாட்டங்களோ அறியப்படாத நிலையும் ஈழத்து இலக்கிய வரலாற்றைப் பதிவதில் சிக்கலை ஏற்படுத்தி யுள்ளன. நூல்கள் முழுதும் கிடைக்காமை, 19ஆம் நூற்றாண்டுக்கு முந்திய ஈழத்து இலக்கியங்கள் பல் வேறு காரணங்களால் பேணப்படாமை போன்றனவும் இந்தப்பிரச்சினைகளுக்கு காரணமாகலாம் என ஈழத்து இலக்கிய வரலாற்றை எழுதுவதில் உள்ள பிரச்சினை களுக்கான காரணங்களை விளக்குகிறார்.

ஓர் ஆய்வாளருக்கு தனது ஆய்வின் பயன் என்ன என்பதை தெளிவுறுத்த வேண்டிய கடமை உள்ளது. அந்த வகையில் முதலிலே ஈழத்து இலக்கியங்கள் பற்றி எழுந்த நூல்களைக் குறிப்பிட்டுச் செல்வதுடன் தனது நூல் இவற்றையெல்லாம் தொகுத்து ஓர் வெட்டு முகப் பார்வையில் ஈழத்து இலக்கிய வரலாற்றைத்

தொட்டுக்காட்டிச் செல்வதாக இந்நூல் அமைகிறது (பக்: 4)என்று அவர் தனது நூலின் நோக்கம் பற்றிக் குறிப்பிடுவது முக்கியமானது.

வரலாறு என்பது காலப்பகுப்பை அடிப்படை யாகக் கொண்டது. இலக்கிய வரலாறும் அப்படியே தான். அந்த வகையில் தமிழ் இலக்கிய வரலாற்றுப் பகுப்பு போல அல்லாது ஈழத்து இலக்கிய வரலாற்றினை காலப்பிரிப்பு செய்வது மிகவும் சிக்கலானது. சங்க இலக்கியங்களிலிருந்து அடையாளங் காணப்படும் ஈழத்திலக்கியம் ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆட்சிக் காலம் வரை தெளிவான குறிப்புகளைக் கொண்டிருக்க வில்லை. எனவே வரலாறு குறித்து ஆங்காங்கே பெறப்படும் வரலாறு மற்றும் இலக்கியத் தகவல்களை வைத்து இக்கால இலக்கியங்கள் பற்றிய வரலாற்றைக் கட்டமைத்துள்ளார். சங்கப்பாடல்களில் குறிப்பிடப்படும் ஈழத்துப் பூதந்தேவனார் பற்றிய வாதப்பிரதிவாதங்கள், முரஞ்சியூர் முடிநாகராயர் பற்றிய கருத்துகள் என்பன எடுத்துக் கூறப்பட்டுள்ளன. ஈழத்தில் பக்தி இலக்கி யத்தின் செல்வாக்கு இருந்தமைக்கு ஆதாரமாக கோணேஸ்வரப்பதிகம் கேதீச்சரப்பதிகம் ஆகிய தேவாரப்பதிகங்கள் எடுத்துக் கூறப்படுகின்றன. சோழப் பெருமன்னராட்சிக் காலத்தில் ஒட்டக்கூத்தர் இலங்கைக்கு வந்ததாகச் சிங்கள மக்களிடையே சொல்லப்படும் கதை, அனுராதபுரத்து நான்கு நாட்டார் கல்வெட்டு போன்றவை இலங்கையில் தமிழர் செறிந்து வாழ்ந்ததை எடுத்துக் கூறுகின்றன. தமிழ் இலக்கி யங்கள் காலந்தோறும் பயின்று வந்துள்ளமையை இலங்கையில் தோன்றிய இலக்கியங்கள் எடுத்துக் காட்டுகின்றன என்று தன் கூற்றை ஆதாரப்படுத்தி இலங்கையில் சோழருடைய ஆட்சிக்காலத்திலே தென்னிலங்கையில் தமிழராட்சிக்கு எதிரான கருத்துகள் தோன்றத் தொடங்கியமையை பதுளைக் கல்வெட்டிலே தமிழ்மன்னருக்கு சிங்களப் பெண்களைத் திருமணம் செய்து கொடுக்க வேண்டாம் எனக் குறிப் பிட்டிருப்பதையும்இந்நூலில் எடுத்துக் காட்டி யுள்ளார் சோழர் படையெடுப்பு அக்காலத்தில் இலங்கையில் வாழ்ந்த சிங்கள மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட வில்லை என்பதும் இதனாற் பெறப்படுகிறது.

இலங்கையில் சோழராட்சி முடிவிலே இலங்கையின் வடபகுதியிலே ஆரியச்சக்கரவர்த்தி களின் ஆட்சி தொடங்குகிறது (கி.பி 13ஆம் நூற்றாண்டு) இந்தக் காலப்பகுதியிலேயே ஈழத்துக்குரிய இலக்கி யங்கள் அடையாளம் காணப்படுகின்றன. அதன் அடிப் படையில் ஈழத்துத்தமிழ் இலக்கியச் செல்நெறியில் ஈழத்து இலக்கியங்களின் வரலாறு ஆரியச் சக்கர வர்த்திகள் காலத்திலிருந்து ஆரம்பிக்கப்படுகின்றது.

இரண்டாவது இயலாக அமைந்துள்ள இந்த ஆரியச்சக்கரவர்த்திகள் காலம் சமயச்சார்புடைய இலக்கியங்கள் , வரலாற்று வரன்முறை கூறும் நூல்கள், வைத்திய சோதிடநூல்கள் காவியங்கள் என நான்கு பிரிவாக ஆராயப்படுகின்றது. ஆரியச்சக்கரவர்த்திகள் கால இலக்கியம் பற்றிய பகுதியில் உள்ள (1.) சமயச் சார்புடைய நூல்கள் பகுதியிலே ஆரியச் சக்கரவர்த்தி கள் காலத்தில் இருந்திருக்கக் கூடிய கந்த புராண படனமரபு பற்றிப் பேசுகையில் தமிழ்நாட்டில் காணப்பட்ட புராண படனமரபுகள் இங்கு தாக்கம் செலுத்தியிருக்க வாய்ப்புண்டு என்பதை எடுத்துக்கூறி இலங்கையில் தட்சிண கைலாய புராணம், திருக்கரைசைப்புராணம் போன்றவை தோன்றுவதற்கு சமகாலத்தில் தமிழ் நாட்டில் தோன்றிய புராணமரபும் காரணமாக இருந்திருக்கலாம் என பொருத்தமான ஊகங்களை முன் வைத்துள்ளார். கதிரைமலைப் பள்ளுவும் சமயச் சார்புடைய நூல்கள் வகையினதே. இதுவும் தமிழ் நாட்டில் சமகாலத்தில் தோன்றிய பள்ளின் வழிவந்ததே. பள்ளுகளில் முந்தியது தமிழ்நாட்டில் தோன்றிய முக்கூடற் பள்ளு என்பர். அதை மறுத்து கதிரைமலைப் பள்ளே காலத்தால் முந்தியது என்று கூறும் இலங்கை அறிஞர் கருத்தையும் எடுத்துக் கூறி கால வரையறை கொண்டிருக்கக் கூடிய பிரச்சினை களையும் கூறுவது குறிப்பிடற்குரியது.



(2) வரலாற்று வரன்முறை கூறும் நூல்கள் என்ற பகுதியிலே இலங்கைத் தமிழிலக்கியத்தில் முக்கிய பங்கை வகிக்கும் இவ்வகை யான நூல்கள் பற்றிக் கூறப்படு கின்றன. தமிழ்நாட்டில் தோன்றிய ஸ்தல புராணங்களுக்கும் இவற்றுக்கும் சற்றே வேறுபாடுண்டு. இலங்கையில் தோன்றிய வையாபாடல், கைலாய மாலை கோணேசர் கல்வெட்டு

என்பவற்றை இவ்வகைக்குள் அடக்கி அவை பற்றிய விவரணத்தைத் தந்துள்ளார்.

(3)வைத்திய சோதிட நூல்கள் அடுத்துக் கூறப்படு கின்றன. தமிழக மரபில் வைத்திய சோதிட நூல்கள் இலக்கிய வரலாற்றிற் சேர்க்கப்படவில்லை பரராஜ சேகரம் செகராஜசேகரம் போன்ற வைத்திய நூல்களும் செகராஜசேகரமாலையும் தம்ப தெனியவில் அரங்கேற்றப்பட்ட சரசோதிமாலை ஆகிய சோதிட நூல்களும் இக்காலத்துக்குரியவை என்பது எடுத்துக் காட்டப்பட்டு வைத்தியமும் சோதிடமும் இணைந்த வாறிருந்த சமூக வழக்கங்களையும் குறிப்பிட்டுள்ளார்

(4) காவியங்களாக அக்காலப்பகுதியில் தோன்றிய இரகுவம்சமும் கண்ணகி வழக்குரையும் எடுத்துக் கூறப்பட்டு அவற்றின் தோற்றப் பின்னணி விளக்கப்படுகிறது.

மூன்றாவது இயல் போர்த்துக்கேயர் கால மாகும். இந்த இயலிலே இக்காலத்துத் தோன்றிய இரண்டு கிறிஸ்தவ நூல்கள் பற்றிய விவரம் தரப்படு கிறது. ஞானப்பள்ளு சந்தியோகுமையூர் அம்மானை என்பன அவை.


நான்காவதாக அமைவது ஒல்லாந்தர் கால மாகும் இக்காலப்பிரிவில் தோன்றிய இலக்கியங்கள் சமயச்சார்பானவை உள்ளூர்ப் பிரபுத்துவத்தைப் பாடியவை.,வைத்தியம் சோதிடம் சார்பானவை வரலாற்றுச் சார்பானவை நாடக இலக்கியம் என ஐந்து வகையினதாக வகுக்கப்பட்டு ஆராயப்படுகிறது.

ஐந்தாவதாக அமைவது ஆங்கிலேயர் கால மாகும். இப்பகுதியில் 19ஆம் நூற்றாண்டின் இலக்கிய வளர்ச்சி பற்றி இங்கே ஆராயப்படுகிறது.

19 ஆம்நூற்றாண்டில் ஏற்பட்ட அரசியல் பொருளாதார சமூக மாற்றங்களை எடுத்துக்கூறி அவற்றின் விளைவாக இலக்கியவரலாற்றில் ஏற்பட்ட அல்லது ஏற்படுத்தப்பட்ட முக்கியமான மாற்றங்கள் கூறப்படுகின்றன. கல்விமுயற்சிகள், அச்சியந்திரம், பத்திரிகைகள், பதிப்பு முயற்சிகள், பாடநூல்கள், அகராதி முயற்சிகள், மொழிபெயர்ப்பு முயற்சிகள் வசன நடை இலக்கியம், நாடகம் மற்றும் ஆய்வுகள் என்ற அடிப்படையில் வகுக்கப்பட்டு ஆராயப்பட்டுள்ளன.

அதாவது ஆங்கிலேயர் ஆட்சியில் அறிமுக மான புதியமுறைக் கல்வியால் ஏற்பட்ட மாற்றங்கள், அச்சியந்திர வருகையும் அதனால் ஏற்பட்ட விளைவு களான பத்திரிகைகள், பாடநூல்கள் என்பன பற்றியும் நாடகங்கள், இலக்கியங்கள் எனப் பத்தொன்பதாம் நூற்றாண்டு பற்றிய விரிவான தெளிவான வரலாறு இந்நூலிற் கூறப்பட்டுள்ளது.

ஈழத்துத்தமிழ் இலக்கியச் செல்நெறி என்ற இந்த நூல் ஈழத்தின் வரலாற்றையும் ஈழத்து இலக்கி யங்களின் தோற்றத்தையும் இணைத்து, குறிப்பிட்ட கால தமிழக இலங்கை கல்வி ஊடாட்டங்களையும் சேர்த்து ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றைப் பத்தொன்பதாம் நூற்றாண்டு வரையில் நோக்கியிருக்கிறது. மேலும் ஈழத்துத்தமிழ் இலக்கிய வரலாறு பற்றி அறிவதில்




சிக்கலாக உள்ள இடங்களை அக்காலத்தில் தமிழகத் துக்கும் இலங்கைக்குமிடையே நடைபெற்ற இலக்கிய ஊடாட்டங்களை கவனத்தில் கொண்டு தன் கருத்தை இணைத்துக் கூறி இருப்பதும் வைத்தியசோதிட நூல்கள் பற்றிக் கூறும் போது வைத்தியமும் சோதிடமும் ஒன்றுக்கொன்று இணைந்திருந்தமையை நடை முறையில் உள்ள நம்பிக்கைகளை அல்லது பழக்க வழக்கங்களை ஆதாரமாகக் காட்டி நடைமுறையி லிருந்து எடுத்துக் காட்டுவதும் முக்கியமானதாகும். நூலின் பின்னிணைப்புகளும் அக்காலத்து இலக்கியப் போக்கின் தன்மையை எடுத்துக்காட்டியுள்ளன.

இறுதியாக

சிவலிங்கராஜா ஓய்வு பெற்றபின்னும் தனது எழுத்து வேலைகளை தளராது செய்து கொண்டும் இலக்கியக் கூட்டங்களிலும் கருத்தரங்குகளிலும் கலந்து கொண்டும் இருக்கிறார்.


பத்தொன்பதாம் நூற்றாண்டு வரையான ஈழத்தின் தமிழ் இலக்கிய வரலாற்றை அறிய விரும்புபவர் களுக்கு மிகவும் உறுதுணையாக இருக்கின்ற இந்நூல் ஈழத்து இலக்கிய வரலாறு பற்றிய பருவரைவான ஒரு அறிவை ஏற்படுத்துவதாக அமைகிறது. மேலும் இந்த நூல் தமிழை ஒரு பாடமாகக் கற்கும் இலங்கைப் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் கல்விப்பொதுத் தராதர உயர்தர மாணவர்களுக்கும் ஈழத்துத் தமிழ் இலக்கியத்தைக் கற்க விரும்புகின்ற வெளி நாட்ட வருக்கும் உசாத்துணை நூலாகப் பயன்பட்டுக் கொண்டிருக்கிறது.

ஈழத்தின் இருபதாம் நூற்றாண்டுத்தமிழ் இலக்கிய வரலாறு இணைக்கப்படவேண்டும் என்பது அவரது விருப்பம்.

அதை எழுதி முடிக்க காலம் கைகொடுக்கும். எழுதிமுடிப்பார் என நம்புகிறேன்.

பேராசிரியர் செ.யொகராசா

# வித்தியாசமான தொகுப்பாக வெளிவந்துள்ள கலாநிதி சிவலிங்கராஜாவின் "சொல்லினால் ஒரு மாளிகை"




நவீன கவிதைகள் கொண்ட தொகுப்புகளே அதிகமாக வெளிவருகின்ற இன்றைய சூழலில் அவற்றிலிருந்து வித்தியாசப்படும் இத்தொகுப்பிலே மரபுசார்ந்த கவிதைகளும் கவியரங்கக் கவிதைகளுமே இடம் பெற்றுள்ளன. எனினும், இவ்வாறு வெளிவரும் தொகுப்புகளிலிருந்து கூட இத்தொகுப்பு வேறுபட்ட தனித்துவ அம்சங்கள் பெற்று விளங்குகின்றது.

இத் தொகுப்பிலுள்ள மரபுசார்ந்த கவிதைகளுள் கணிசமானவை பக்தி பற்றியனவாகவும், ஏனையவை இரங்கற்பா, வாழ்த்துப்பா, தற்சார்ப்புக் கவிதைகளாகவு முள்ளன.

தமிழில் பக்திப்பாடல் மரபு நீண்ட- வளமான பாரம்பரியம் கொண்டது. இந்நூற்றாண்டில் - இன்று வரை பக்திப் பாடல் தொகுப்புகள் வெளிவந்த வண்ண முள்ளன. எனினும், இன்று வருகின்ற ஏனைய பக்திப் பாடல்களிலிருந்து இத்தொகுப்பிலுள்ள பக்திப்பாடல் களில் சிறப்பம்சமொன்றுள்ளது. இக் கவிஞர் தமது பக்திப் பரவச உணர்ச்சியை "தான் கலந்து" தமிழ்த் தேன் சுவைகலந்து-வெளிப்படுத்துவதே அதுவாகும்;



"புறக் கதவைப் பூட்டினார் போய் விட்டார் ஐயர்
பூசனைகள் செய்வேன் நான் பூசலர் போலே
மறக்க முடியா அகத்து மண்ட பத்தினுள்ளே
மற்றவர்கள் காணாத மனக்கதவினூடு
உறக்கமின்றிப் பார்த்திருந்து உன் பெயரை ஓதி
உண்டான இன்பத்தின் னூற்றாக வாழ்வு
சிறக்கவழி செய்திடுதல் வேண்டுமென தைய
சித்தி புத்தி விநாயகனே கும்பிடுவே னுன்னை"

என்று கவிஞர் பாடுவது இதற்கொரு எடுத்துக் காட்டாகிறது.

இரங்கற்பா, வாழ்த்துப்பா என்பன பொதுவாக உணர்ச்சித் தீவிரங்கொண்டனவாகவோ புகழ்மாலை யாகவோ வெற்றார வாரமாகவோ வெளிப்படுவதே வழக்கமாகும். எனினும், இத்தொகுப்பிலுள்ளவற்றில் அத்தன்மைகள் அருகி, பொருள் பொதிந்தனவாக அவை அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. "பண்டித மணி"யின் மறைவின் போது கவிஞர் இவ்வாறு தனது உணர்வுகளை வெளிப்படுத்துகின்றார்:

"ஈழத்து இலக்கியத்தை
மூடிக் கிடந்த
முட்புதர்கள் தாமகற்றி
வாழ "வழி" சமைத்த
வல்லாளா, போய் வருக
...........................
சின்னத்தம்பி புலவன்
செய்தளித்த கவிதைகளை
பொன்னம்பல பிள்ளை
போற்றி வந்த கவிச்சுவையை
தன்னேரிலாச் சி.வை
தாமோதரன் புகழை
தென்னகத்துப் பண்டிதர்க்குத்
தெரியப்படுத்துதற்காய்
சன்னமாய்ப் பாய்ந்து
சமர்புரிந்த பேராளா"

தற்சார்ப்புக்கவிதைகள், கவிஞரது இலட்சிய வேட்கை, கவிதா நோக்கு என்பவற்றை வெளிப் படுத்துகின்றன. இவ்வாறான கவிதைகளுளொன்றான "நான்வேண்டுவன" கவிஞரது பொதுநல நாட்டத்தைப் பறைசாற்றுகின்றது.

"ஓட்டைக் குடிசைக்கள்
ஒன்றும் விடாமலே
ஓட்டிக் கலைத்திடல் வேண்டும்!

கல்
வீட்டை அமைத்தவர்
வாழ்வு வளம்பெற
வையம் வழிதர வேண்டும்"

என்று அது பற்றிப் பலவாறு வெளிப்படுகிறார், கவிஞர்.

மேற் கூறியவற்றை விட, இத் தொகுப்பிலே அதிகமுள்ள "கவியரங்கக் கவிதைகள்" பலவிதங்களில் எமது கவனத்தை ஈர்த்துள்ளன. ஏறத்தாழ 1960 தொடக்கம் 1975 வரை ஈழத்திலே கவியரங்குகள் ஆதிக்கம் செலுத்தியிருந்தன. இவை பின்னரும் இடம் பெற்று வந்திருப்பினும் முன்னர்போல செல்வாக்குப் பெற முடியவில்லை. எவ்வாறாயினும், இக்கவியரங்கு களில், ஏலவே குறிப்பிட்ட தலைப்பில் கவிதைகள் எழுதப்பட்டு வாசிக்கப்படுவதே வழக்கமாயிருந்தது. அவ்வாறு தான் இத்தொகுப்பிலுள்ளவை திருக்குறளும் இளைஞர்களும், "பாரதியும் பெண்மையும்", "எங்கே கலையிருக்கும்?", "நமக்குத் தொழில் கவிதை" முதலான தலைப்புகளில் இயற்றப்பட்டு, கவியரங்கு களிலே பாடப்பட்டவையாகும்.

எனினும், கவியரங்கக் கவிதைகளிலே மேற் கூறியவாறு பொருள்பொதிந்த தலைப்புகளிருப்பினும், பெரும்பாலான கவியரங்கக் கவிஞர்கள் மலினமான நகைச்சுவை, சிலேடை, அணி அலங்காரங்கள் முதலானவற்றைப் பயன்படுத்தியோ இசை வெள்ளம் பெருகச் செய்தோ சபையோரது கைதட்டலைப் பெறுவதே பரவலான வழக்கமாக இருந்துள்ளது. எனினும், இ.முருகையன், மஹாகவி, நீலாவணன், நுஃமான் முதலானவர்களின் கவியரங்குக் கவிதைகள் அத்தகையனவாகவன்றி, சமூகநோக்கு, பேச்சோசை, பொருள் அழுத்தத்திற்கேற்ற வாசிப்பு முதலான பண்பு களைக் கொண்டிருந்தன. இப் பண்புகள் இத்தொதிக் கவிதைகளிலும் மிளிர்கின்றமை பாராட்டிற்குரியது.

மேலும், இக் கவியரங்கக் கவிதைகள் 1980 களுக்குப் பின்னர் பாடப்பட்டனவாதலின் போர்க்கால வாழ்க்கையின் பன்முக அவலங்களும் யதார்த்தச் சித்திரிப்புகளாக வெளிப்பட்டுள்ளமை இக்கவிதைகளின் பெறுமதியை அதிகரிக்கச் செய்துள்ளன. எடுத்துக் காட்டாக பின்வரும் பகுதியைக் குறிப்பிடலாம்:

"அகத்தாள் துயர் துடைக்க,
வீதிக்கு மெல்ல வெளிக்கிடுவேன்
விறகுச் சயிக்கிளிலே
வியர்வை மழையில் நனைந்து
என் போல பெண்டாட்டி
பிள்ளை உள்ள ஒருவன் தான்.
இடம் பெயர்ந்து
அகதிமுடிசூடி,
அலைந்து திரியும்
அவனும் மனிதன் தான்.
நானும் அவனும்
நடுத் தெருவுச் சொந்தம் தான்
நெஞ்சைக் கொடுத்து
நிமிர்த்திச் சைக்கிளிலே
கொஞ்ச விறகை
கொண்டு வந்து தந்திடுவான்
அவன்
வயிற்று நெருப்பைத் தணித்த திருப்தியிலே
என் வீட்டடுப்பு
புகை கக்கிச் சூடேற்றும்"

மூத்த கவிஞர் இ.முருகையனது கவிதைகளில் காணப்படும் சிறப்பம்சங்களுளொன்று, அறிவியல், கலை, இலக்கியம் சார்ந்த விடயங்களையும் சுவையான கவிதை களாக்கியமையாகும். இத்தொகுப்பிலுள்ள "எங்கே கலை யிருக்கும்?" என்ற கவிதையை வாசிக்குமொருவருக்கு முருகையனது அத்தகைய கவிதைகள் நினைவுக்கு வரவே செய்யும். இதற்கு இப் பகுதி சான்றாகிறது:


"பானை வனைந்த குயவன், தன்
நாரியுளைவை மறக்க ஓர்,
குச்சியினால் கோலமிட்டுப் பார்த்தான் அப்
பானையிலே; கூடி இருந்தவர்கள்
கொண்டாடிக் குதூகலித்து
மெச்சி அவனைப் புகழ்ந்தார்கள்.
சித்திரமும் பாட்டும் சிறந்தகலை யாவும்
இப்படித்தான் நண்பா, பிறந்திருக்கும்!

இலக்கியத்தின் உள்ளடக்க, உருவப் பிணைப்புப் பற்றி, – சிற்பத்தின் உயிரினதும் அழகினதும் கலப்புப் பற்றி, வெகுசிறப்பாக, பின்வருமாறு வெளிப்படுத்து கின்றார்.

"அங்கங்கள் யாவும் ஓர்
அங்குலம் பிசகாமல்
தங்கத்தகட்டால் தட்டி எடுத்ததுபோல்
பொங்கிப் பொலியும் அழகிருந்தும்
அங்கதனுள் ஊசலாடுகின்ற உயிரிலையேல்
அக்கலையேன் நண்பா
அடியேனை விட்டுவிடும்...
ஊசலாடுகின்ற உயிரிருந்தும்
ஓரங்குல மூக்கும்
ஒன்பதங்குலப் பல்லும்
கூசிக்குறுகும் விழியொன்றும்
காலொன்று கூழை
கையொன்று தான் நீளம்
ஆருக்குதவும் இவ்வாருயிர்தான் ஏன் நண்ப,
உருவும் உயிரும்
ஒன்றித்து வந்தாலே
பெருகும் கலையழகைப் பேசல் பொருந்துமடா"

ஆக, இவற்றையெல்லாம் நோக்கும்பொது கவியரங்கின் தலைப்புகள் எதுவாயிருப்பினும் இக்கவிஞரது கவி ஆளுமையும் ஆற்றலும் அனுபவமும் எவற்றையெல் லாம் பொருள் புதிது, சொற்புதிது, சுவை புதிது ஆன கவிதை களாக ஆக்கித் தந்துள்ளமையை எம்மால் அவதானிக்க முடிகின்றது. எனவே, இக்கவிஞர் தொடர்ந்து கவிதை எழுதும் முயற்சியில் ஈடுபட்டு, பேராசிரியர்கள் க.கணப திப்பிள்ளை, நுஃமான், சி.மௌனகுரு முதலானோர் வழிவந்த பல் கலைக்கழகத் தமிழாசிரியர்களது கவிதைப் பாரம்பரியத் திற்கு மேன்மேலும் வளமும் வலுவும் சேர்க்க வேண்டுமென்பதே எம் போன்றோரது எதிர்ப் பார்ப்பாகும்.

சி.ரமேஷ்



# நினைவில் நின்ற பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா அவர்களின் நினைவுப் பேருரைகள் மறந்தவையும் மறைக்கப்பட்டவையும் ஓர் உசாவல்

*தான் வாழுகின்ற சூழலில் தன் சமூகம் பயனுறும் வகையில் அறிவினை வழங்கியவர்கள் தான் வாழ்ந்த காலத்தின் பின்னும் வரலாற்றில் நிற்பவர்கள். அவர்களே வரலாற்றைத் தீர்மானிக்கும் சக்தியாகவும் அமைபவர்கள். அறிவுச் சூழலில் பல்கலைக்கழகத்துக்குள்ளும் பல்கலைக் கழகத்துக்கப்பாலும் ஆக்கபூர்வமான ஆய்வுகளை முன்னெடுத்த பேராசிரியர் சிதம்பரப்பிள்ளை சிவலிங்கராஜா அவர்கள் ஈழம் போற்றும் சிறந்த புலமைத்துவ ஆளுமைகளில் ஒருவர். தொன்மைச் சிறப்பு மிக்கத் தமிழ்க்கல்வியாளருள் ஒருவராக விளங்கும் பேராசிரியர் இலக்கிய ஆர்வலர்கள் போற்றும் சிறந்த பேச்சாளரும் தமிழறிஞருமாவார். தீராத வேட்கைமிக்க தமிழ்ப் பற்றாளராக விளங்கும் இவர் பல்கலைக்கழகத்துக்கு வருவதற்கு முன்னரே கந்தமுருகேசன், ஏ.டி. சுப்பிரமணியம் போன்றோரிடம் தமிழை முறையாகக் கற்கும் வாய்ப்பினைப் பெற்றிருந்தார். பண்டிதர் க. வீரகத்தியின் வாணி கலைக் கழகத்தில் பண்டிதவகுப்பு, சைவப் புலவர் வகுப்பு என இரண்டையும் கற்று 1966இல் சைவப் புலவர் பரீட்சையில் முதல் வகுப்புச் சித்தியினையும் பெற்றார். 1967 இல் பால பண்டித பரீட்சைக்குத் தோற்றி அதில் சித்தியும் பெற்றார்.*


*பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களிடமும் பேராசிரியர் க.கைலாசபதியிடமும் பண்டைத்தமிழ் இலக்கியங்களையும் நவீன இலக்கியங்களையும் ஆழ, அகலக் கற்றவர். பேராசிரியர்களான கா.சிவத்தம்பி, அ.சண்முகதாஸ், எம்.ஏ.நுஃமான், இந்திரபாலா முதலிய ஆளுமைகளின் தொடர்பினால் தன்னைப் புடமிட்டுக்கொண்டவர். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் தமிழைச் சிறப்புப் பாடமாகப் பயின்று கலைமாணித் தேர்வுக்கு “வடமராட்சியின் கல்விப் பாரம்பரியமும் இலக்கிய வளமும்” என்னும் ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பித்து முதற்பிரிவிலே சித்தி*

பெற்றவர். "ஈழத்து உரையாசிரியர்களின் சிறப்பியல்பு கள்" என்னும் கட்டுரையைச் சமர்ப்பித்து அப்பல்கலைக் கழகத்திலேயே கலாநிதிப் பட்டத்தையும் பெற்றுக் கொண்ட பேராசான் சிவலிங்கராஜா அவர்கள், யாழ் பல்கலைக்கழகத் தமிழ் துறைத் தலைவராக விளங்கி ஓய்வு பெற்றவர்.

"ஈழ இலக்கிய வரலாற்றை நேர் செய்து
ஆழப்புகுந்துமிக ஆராய்ந்தான் – வாழும்
தமிழ் செய்தான் சங்கக் கவிக்குரை செய்து
அமிழ் தளித்தான் சான்றோன் அவன்..."

எனப் பண்டிதர் க.சச்சிதானந்தன் அவர்களால் சிறப்பிக்கப்படும் சிவலிங்கராஜா அவர்கள் தேர்ந்த ஆய்வாளராகவும் விளங்கியவர். அவருடைய நினைவுப் பேருரைகள் ஆழமும் அறிவும் நிரம்பியவை. முறையான நூல் வடிவம் பெறாது துண்டுப் பிரசுரங்களாகவும் கைநூல்களாகவும் விளங்கும் இவ் நினைவுப் பேருரைகள் தொகுத்து நூலாக்கப்படல் காலத்தின் கட்டாயம் ஆகும்.

*09.05.1993*ஆம் ஆண்டு ஈழகேசரி நா.பொன்னையா அவர்களின் நினைவுப் பேருரையை "ஈழகேசரியும் குழந்தை இலக்கியமும்" என்ற தலைப்பில் ஆற்றியிருந்தார். ஈழத்தில் குழந்தை இலக்கி யத்தின் ஆரம்பகால முயற்சிகளை ஆராயும் இப் பேருரை *1918*ஆம் ஆண்டு ச.வைத்தியநாதர் என்பவரால் வெளியிடப்பட்ட குழந்தை இலக்கியம் குறித்த பதிவு களையும் எமக்குத் தருகிறது. ஈழகேசரியின் குழந்தைப் பருவத்தில் வெளியிடப்பட்ட அருள்நந்தியின் பிள்ளைப் பாட்டு தோன்றிய வரலாற்றையும் ஈழத்து இலக்கிய செல்நெறியில் அது ஏற்படுத்திய தாக்கம் குறித்தும் இந்நினைவுப் பேருரை பேசுகிறது. மரபுவழிக் குழந்தைக் கவிதைகளில் இருந்து ஈழகேசரிக் குழந்தைக் கவிதைகள் வேறுபடுமாற்றினை பேராசிரியர் காரண, காரியங்களோடு இப்பேருரையில் ஆராய்கிறார். ஈழகேசரியின் பாலர் பகுதியில் மாமா, மாமி என குழந்தை வாசகரோடு உறவாடிய பொறுப்பாசிரியர், திடீரென "சட்டாம்பியர்" என்ற பெயரோடு அப்பகுதியில் தோன்றக் காரணம் நாட்டின் சூழ்நிலைக்கமைவாக பாடசாலைக் கட்டமைப்பினை உள்வாங்கிக் கொண்டமையே என்பதை *04.07.1943*இல் வெளியான கடிதத்தின் வாயிலாக தெளிவுபடுத்தி இக்கட்டுரையை நகர்த்திச் செல்வார். பின்னர் அது பாலர்பகுதியாக மாற்றப் பட்டு கேசரி மாமாவால் தொடர்ந்தும் அச்சிறுவர் பகுதி நடாத்தப்பட்டதன் காரணத்தையும் இக்கட்டுரையில் ஆய்வுக்குட்படுத்துகிறார். ஈழகேசரி மீது பாடசாலை மாணவருக்கு இருந்த ஈடுபாடும் கட்டுரையில் நன்காராயப்படுகிறது. பேராசிரியரின் கட்டுரை ஈழகேசரியின் பாலர் பகுதியில் இடம்பெற்ற ஆக்கங்கள் மற்றும் எழுதிய ஆசிரியர்கள் குறித்தும் விரிவாக ஆராய்கிறது.




*24.06.2001*ஆம் ஆண்டு பாவலர் துரையப்பா அவர்களின் நினைவுப் பேருரையை பேராசான் எஸ்.சிவலிங்கராஜா அவர்கள் ஆற்றியிருந்தார். "ஈழத்து நவீன தமிழ்க் கவிதை முன்னோடி பாவலர் துரையப்பா பிள்ளை" என்ற தலைப்பில் ஆற்றப்பட்ட அப்பேருரை பாவலர் ஈழத்து இலக்கியத்துக்கு ஆற்றிய பங்களிப்பினை மதிப்பிடுகிறது. இந்தியாவில் கோலாம்பூர் மிசன் பாடசாலையில் கடமையாற்றிய காலப்பகுதியே பாவலருக்கு முற்போக்குச் சிந்தனையை விதைத்தது என்பதை பேராசிரியர் க.கைலாசபதி அவர்களின் கூற்றினை ஆதாரங்காட்டி நிறுவும் பேராசிரியர் சிவலிங்கராஜா உதயதாரகை, இந்துசாதனம் பத்திரிகை துறைக்கு பாவலராற்றிய பணிகளையும் எடுத்துரைக் கிறார். பாவலர் துரையப்பாவின் குன்றாத ஊக்கமும் குறையாக முயற்சியும் மாகாஜனாவின் முன்னேற்றப் பாதைக்கு எவ்வாறு துணை நின்றது குறித்தும் இக்கட்டுரையில் போதிய கவனஞ் செலுத்துகிறார். பாவலரின் உருவாக்கத்துக்கு ஊற்றுக்கால்களாக அமைந்த காரணிகளை விரிவாகப் பரிசீலிக்கும் இக்கட்டுரை பாவலர் துரையப்பாபிள்ளையின் இலக்கிய நோக்கு நிலையை ஆழ விமர்சிக்கவும் செய்கிறது. பாரதியாரையும் பாவலரையும் இக்கட்டுரையில் ஒரே புள்ளியில் இணைத்து நோக்கும் சிவலிங்கராஜா அவர்கள் பாரதியாருக்கு பலவகைகளிலும் பாவலர் முன்னோடியாக அமைந்தவாற்றினை விளக்குகிறார். பாவலரின் மொழிக் கல்வி பற்றிய சிந்தனை, பெண் கல்விக்கு பாவலர் கொடுத்த முக்கியத்துவம், பாவலரின் கலை பற்றிய எண்ணம், சமூக ஏற்றத் தாழ்வுகளை நீக்குவதில் பாவலர் எடுத்த முன்முயற்சிகள் முதலான பலவிடயங்கள் பாவலரின் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு இக்கட்டுரையில் விலாவாரியாகப் பேசப் படுகிறது.

*07.07.2003* ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் பேராசிரியர் க.கைலாசபதி அவர்களின் நினைவுப் பேருரையை பேராசிரியர் எஸ்.சிவலிங்க ராஜா அவர்கள் ஆற்றியிருந்தாரகள். அப்பேருரை "பேராசிரியர் கணபதிப் பிள்ளையின் காதலியாற்றுப்படை காட்டும் யாழ்ப்பாணத்துப் பண்பாட்டுக் கோலங்கள்" என்ற தலைப்பில் அமைந் தது. பேராசிரியர் வாழ்க்கைச் சரிதத்தை யும் அவர் தமிழ் இலக்கியத்துக்கு ஆற்றிய பணிகளையும் சுருக்கமாகக் கூறும் இவ்வாய்வு காதலியாற்றுப்படை காட்டும் யாழ்ப்பாணத்துப் பண் பாட்டுக் கோலங்களை யாழ்ப்பாணத்துத் தமிழர் களின் உணவுப் பழக்கம், ஆடை அணிகள், விளையாட்டுகள், வழிபாடும் சடங்குகளும், நம்பிக்கைகள்,

பொதுவானவை என்னும் பகுதிகளுக்கூடாக ஆராய்கிறது. யாழ்ப்பாண மக்களால் விரும்பி உண்ணப்படும் வெள்ளையப்பம் எனப்படும் புளிச்ச அப்பம், பனங்காயுடன் சாமை மாவினை குழைத்துச் செய்யப்படும் பனங்காய்ப் பலகாரம், கள்ளுவடை எனப்படும் பருத்தித்துறை வடை முதலானவற்றோடு இட்டலி, இடியப்பம், பிட்டு, முறுக்கு, பிட்டு, வாய்ப்பன், மோதகம் முதலான உணவுகளும் யாழ்ப்பாணத் தமிழர்களால் உண்ணப்பட்டமை பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை அவர்கள் எவ்வாறு வெளிப் படுத்துகின்றார் என்பதை நயமாக இக்கட்டுரையில் கூறிச் செல்கிறார் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா. சமூக வாழ்வோடு கள்ளுக்கிருந்த தொடர்பினைக் காதலியாற்றுப்படையை ஆதாரங் காட்டி பேராசிரியர் கூறும் விதம் அதிர்ச்சியளிக்கிறது. அதிகாலையில் குழந்தைக்கு எண்ணை பூசி ஒரு சங்கிலே கள்ளினை விட்டுப் (மேசைக் கரண்டி பிரமாணம்) பருக்கி இளவெய்யிலே தடுக்கினிலே (ஓலையால் செய்த பாய்) கிடத்தும் வழக்கம் இருந்ததை எடுத்து விளக்குகிறார். இம்மரபு தற்போது வழக்கிழந்து போய்விட்டதை அறிய முடிகிறது. ஆடை, அணிகள் குறித்து காதலியாற்றுப் படையில் விரிவாக உரைக்கப்படவில்லை என்பதை தெளிவுபடுத்தும் சிவலிங்கராஜா அவர்கள் காதலியாற்றுப்படையில சிறிதளவு பேசப்படும் ஆடை ஆணிகலன்களை மேலோட்டமாக விளக்குகிறார். வடமாராட்சியில் இடம்பெறும் விளை யாட்டுக்கள் காதலியாற்றுப்படை இடம்பெறுமாற்றினை சுவைப்பட இக்கட்டுரை விளக்கிநிற்கிறது. இங்கு விளையாடப்படும் விளையாட்டுக்களை குழந்தைகள் விளையாடும் விளையாட்டுக்கள், பெரியவர்கள் விளை யாடும் விளையாட்டுக்கள் என இரண்டாகப் பிரித்து பேராசிரியர் விளக்குவார். கிந்தியடித்தல், வளைய முருட்டுதல், தட்டுப்பாய்தல், கிட்டி அடித்தல், சிற்றில் விளையாடல், சிறுசோறு அட்டு விளையாடல் (பிள்ளை பெத்து விளையாடல்), தேர்கட்டி விளையாடல் முத லான விளையாட்டுக்கள் குழந்தைகளால் விளையாடப் படும் விளையாட்டுக்கள் எனக்கூறும் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா அவர்கள் தாயம் விளையாடுதல், நாயும் புலியும் விளையாடுதல், சீட்டாட்டம் என்பன பெரியவர்களால் விளையாடப்படும் விளையாட்டுக்கள் எனக்கூறி வகைப்படுத்துவார். யாழ்ப்பாணத்தில் நல்லூர், செல்வச்சந்நிதி, வல்லிபுரக்கோயில், பசுபதீஸ் வரர் கோயில் வழிபாடுகள் எவ்வாறு காதலியாற்றுப் படையில் வெளிப்படுகிறது என்பதை எடுத்துரைக்கும் பேராசிரியர் அக்காலமக்கள் பேய், பிசாசு, முனி மீது நம்பிக்கை கொண்டிருந்தமையை "நம்பிக்கைகள் என்ற தலைப்பின் விளக்கி நிற்கிறார். யாழ்ப்பாண மக்களின் சமூக வாழ்க்கையை வெளிப்படுத்தும் ஒன்றாக காதலி யாற்றுப்படை விளங்குவதை இவ்வாய்வு சுவைப்பட விளக்கிநிற்கிறது.


*2003*ஆம் ஆண்டு இணுவில் இந்துக் கல்லூரி நிறுவுநர் பேருரையை "அம்பிகைபாகரும் இணுவில் கல்விப்பாரம்பரியமும்" என்னும் தலைப்பில் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா அவர்கள் ஆற்றியிருந்தார். இணுவில் மண்ணின் சிறப்பையும் அங்கு கல்விப் பாரம்பரியமானது எவ்வாறு வளர்ந்து வந்தது என்பதையும் இக்கட்டுரை பேசிச் செல்கிறது. ஒல் லாந்தர் காலத்துப் புலவரான இணுவில் சின்னத்தம்பிப் புலவர் மற்றும் நடராசையர், முருகேசையர், வெங்காடசலஐயர், அம்பிகைபாகர், அ.வைத்திலிங்கம், தா.வைத்திலிங்கம், சேதுலிங்கம், மாணிக்கம், சின்னத் தம்பி, சபாபதி முதலானவர்கள் இணுவில் மண்ணுக் காற்றிய பணிகளையும் இக்கட்டுரை எடுத் துரைக்கிறது. சி.வை.தாமோதரம்பிள்ளைக்கும் அம்பிகைபாக உபாத்தியாருக்கும் இடையிலான உறவுநிலையையும் இக்கட்டுரையில் விரிவாக ஆராய்கிறது.

*07.08.2010*ஆம் ஆண்டு யா/வேலாயுதம் மகா வித்தியாலயத்தின் நிறுவுநர் அமரர் திரு வை.வேலாயுதம் பிள்ளை அவர்களின் நினைவுப் பேருரையை "யாழ்ப் பாணத்தில் அரை வாய்மொழிகள்" என்ற தலைப்பில் ஆற்றியிருந்தார். இக்கட்டுரையும் எம் மண்ணில் அறியப் படாமல் நாம் மறந்தவற்றையும் எம்மால் மறைக்கப்பட்ட வற்றையும் எடுத்துக் காட்டுகிறது. தமிழக இலக்கியக் காரர்களாலும் பேராசிரியர் செ.யோகராசா அவர் களாலும் "முச்சந்தி இலக்கியம்" என அழைக்கப்படும் "அரைவாய்மொழிப் பாடல்கள்" குறித்து ஆராயும் இக்கட்டுரை *19*ஆம் நூற்றாண்டு முதல் யாழ்ப்பாணத் தில் வழக்கில் இருந்த அரைவாய்மொழிப்பாடல்களை யும் அவை பாடப்பட்ட சூழ்நிலை, அவற்றில் வெளிப் படுத்தப்படும் விடயங்கள், பாடலைப் பாட யாத்த யாப்பு ஆகியவற்றில் ஆழ்ந்த கவனஞ் செலுத்துகிறது. பேராசிரியர் கா.சிவத்தம்பி, பேராசிரியர் செ.யோகராசா முதலான ஆய்வாளர்கள் முன்னர் ஆய்ந்த ஆய்வுப் போக்கில் இருந்து இவ்வாய்வு பல்வேறு வழிகளில் வேறுபடுகிறது. குறிப்பாக பேராசிரியர் செ.யோகராசா மட்டக்களப்பு, மலையக வாய்மொழிப்பாடல்களை முதன்மைபடுத்தி தன் ஆய்வினை முன்னெடுத்த சூழலில் மக்களிடம் சொல்லத்தவறிய செய்திகளை மற்றும் சொல்ல விரும்பாத செய்திகளை வெளிப்படுத்த முயன்ற அரைவாய்மொழிப்பாடல்கள் யாழ்ப்பாணத்தில் கும்மிப் பாடல்களாகக் காணப்பட்டமைக்கான காரணத்தையும் இக்கட்டுரையில் பேராசிரியர் விரிவாக ஆராய்கிறார். சேனாதிராசா கொலை பற்றிய அரைவாய் மொழிப்பாடல்களையும் கோகிலாம்பாள் கொலை பற்றிய அரைவாய்மொழிப்பாடல்களையும் ஆராயும் இக்கட்டுரை பத்திரிகையில் படிக்க வாய்ப்பில்லாத பாமர மக்கள் இரசித்துக் விரும்பிக் கேட்கும் வகையில் பாடப் பட்டதையும் விளக்கி நிற்கிறது. இவ்வாய்மொழிப் பாடல்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டில் எழுத்து வடிவம் பெற்றதைக் கோப்பாய் களவு குறித்து முருகேசம்பிள்ளை பாடிய பாடலை ஆதாரம் காட்டியும் மல்லாகம் கோட்டு நீதவானாக இருந்த "றைஸ்" துரை வீதியோர முட்கிமுவை மரங்களை மட்டமாக வெட்டும்படி சட்டம் போட்டுத் தடுத்ததைக் கண்டு பாடிய

பாடலையும் ஆதாரங்காட்டி எடுத்துரைக்கிறார். வெயில் காலத்தில் முட்கிழுவை வெட்டப்படுமேயானால் அவை அழிந்துவிடும் என்பதை

வெட்டி நட்ட முட்கிழுவை மெத்த உயரமென்று
மட்டமாய் வெட்ட "ம" றைஸ் துரையும் - சட்டமாய்
இட்டானே கட்டளையை இட்டபடி யாகிலிது
பட்டுவிடும் பட்டுவிடும் பார்

முருகேசம் பண்டிதரை ஆதாரங்காட்டி விளக்கி நிற்கும் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா புலவர் ஒருவரால் பாடப்பட்டு வாய்மொழியாக வழங்கி வரும் பாடல்களை வாய்மொழிப்பாடல்களாகக் கொள்வதில் ஏற்படும் பிரச்சினைகள் குறித்தும் இக்கட்டுரையில் கவனஞ் செலுத்துகிறார். யாழ்ப்பாணத்தில் இருந்த கோடு, கோட்டு வழக்குகள் குறித்த செய்திகள் அரைவாய் மொழிப்பாடல்களில் எவ்வாறு பதிவு செய்யப் பட்டன முதலான செய்திகளை வாய்மொழியாகப் யாழ்ப்பாணத்தில் பாடப்படும் கும்மிப்பாடல்களை ஆதாரங் காட்டியும் உத்தியோகர் வணக்க கும்மிப் பாடல்களை ஆதாரங்காட்டியும் எடுத்துரைக்கிறார். மக்களுக்கு வருகின்ற நோய்கள் அரைவாய்ப் பாடல்களில் இடம்பெறுமாற்றினை "கோதாரிக் கழிச்சல் கும்மி", "சிரங்குப் பாடல்" ஊடாக பேராசிரியர் எடுத்துரைக்கும் பாங்கு நயப்புக்குரியது. சமூகச் சீர்திருத்தக் கருத்துக்களை விளக்குவதில் அரைவாய் மொழிப்பாடல்கள் கூடிய கவனம் செலுத்தியதையும் இக்கட்டுரை விரிவாக ஆராய்கிறது. மனித வாழ்வை கள்ளு சீரழிப்பதை வமாராட்சிப் பகுதியில் கள்ளுக்குப் பாடப்பட்ட பஞ்சபுராணத்தின் ஊடாக ஆராயும் பேராசிரியர் சமூக மாற்றத்தை ஏற்றுக் கொள்ளத் தயங்கும் மக்களின் வாழ்க்கைமுறையை வாய்மொழிப் பாடல்கள் எவ்வாறு சித்திரித்துச் சென்றன குறித்தும் கூர்ந்து நோக்குகிறார். தேநீர், கோப்பி, கோதுமை மா பாவனைக்கு வந்தபோது மக்கள் அதனை எவ்வாறு எதிர்கொண்டனர் என்பதை சுவாரசியமாக இக்கட்டுரை எடுத்துக் காட்டுகிறது. அரைவாய் மொழிப்பாடல்கள் நவீனத்துவத்தைச் சாடி எழுந்தமையை "கலிகால வேடிக்கை", "கலிகாலக்கும்மி", "கலிகால அலங் கோலம்", "கலிகாலக் காட்சி", "தற்கால நாகரீக வேடிக்கைப்பாக்கள்" முதலான நூல்களை ஆதாரங்காட்டி விளக்கும் பேராசிரியர் சிவலிங்கராஜா அவர்கள் சமூகத்தைக் கண்டிக்கவும் நவ நாகரீகப் போக்கை நகையாடவும் அரைவாய்ப் பாடல்கள் எவ்வகையில் துணை நின்றன என்பதையும் ஆழமாக எடுத்துரைக்கிறார். இக்கட்டுரையில் அரைவாய்ப் பாடல்களில் வெளிப்படும் அரசியலும் சிலாகித்துப் பேசப்படுகிறது.




பேராசிரியர் சு.வித்தியானந்தனின் நினைவுப் பேருரைகள் பலவற்றை பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா அவர்கள் பலவிடங்களில் ஆற்றியுள்ளார். யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் பேராசிரியரின் நினைவுப் பேருரைகள் இரண்டினை ஆற்றிய பெருமை இவரையே சாரும். 1994ஆம் ஆண்டு "விபுலாநந்தர் முதல் வித்தியானந்தன் வரை பல்கலைக்கழகத் தமிழ்க்கல்வி மரபு" என்ற தலைப்பில் பேராசிரியர் வித்தியானந்தன் அவர்களின் நினைவுப்பேருரை ஒன்றை பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா அவர்கள் ஆற்றியிருந்தார். அப்பேருரை கிடைக்குமாறில்லை.

2009ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் "யாழ்ப்பாணத்துப் பண்பாடு மறந்தவையும் மறைந்தவையும்" என்ற தலைப்பிலும் 2016ஆம் ஆண்டு "புலமைச்சிரத்தைக்கு உட்படாத தமிழ்க் கவிதைப் பாரம்பரியம்" என்ற தலைப்பிலும் பேராசிரியர் சிவலிங்கராஜா அவர்கள் ஆற்றிய வித்தியானந்தன் நினைவுப் பேருரைகள் கனதியானவை. ஆழமான தமிழ்ப் பண்பாட்டின் வேர்களையும் விழுதுகளையும் புலமைச் சிரத்தைக்கு உட்படாத தமிழ்க் கவிதைப் பாரம்பரியத்தையும் தமிழ் உலகுக்கு வெளிப்படுத்தும் இக்கட்டுரைகள் இற்றைவரை அறியப்படாத தகவல்கள் பலவற்றை எமக்குத் தருகின்றன.

இன்றைய உலகம் நவீன இலத்திரனியல் சாதனங்களின் வளர்ச்சியினால் எமது பண்பாட்டையும் கடந்தகாலம் பற்றிய உணர்வினையும் மறந்து வரும் நிலையில் "யாழ்ப்பாணத்துப் பண்பாடு மறந்தவையும் மறைந்தவையும்" என்ற பொருளில் பேராசிரியர் ஆற்றிய உரை அதிக கவனம் பெறுகிறது. கட்டுரையின் ஆரம்பத்தில் பண்பாடு குறித்து வரையறுக்கும் பேராசிரியர் யாழ்ப்பாணப்பிரதேசத்தின் அமைவிடம் பற்றியும் புவியியல் அமைப்பு பற்றியும் எடுத்துரைக்கிறார். யாழ்ப்பாணத்தில் 19ஆம் நூற்றாண்டில் தோன்றிய "பனங்காய்ப் பாரதம்" என்ற இலக்கியம் பேசும் விடயதானம் குறித்துப் பேசும் இக்கட்டுரை பத்தொன்பதாம் நூற் றாண்டில் யாழ்ப்பாணத்தில் சீதனமாகப் பனங்காணிகள் வழங்கப்பட்டநிலையையும் கூறி நிற்கிறது. தமிழ்க் குடும்பங்களின் வாழ்வாதாரத்தில் பனை பெறும் முக்கியத்துவத்தினை இது எமக்கு எடுத்துக்காட்டுகிறது. பனாட்டுத் தட்டுகள் பழுதடையாமல் அடுக்கி வைப்ப தற்கு பாவிக்கப்படும் தொக்கடிக் கூடை, பாணிப்பனாட்டு, பனம் வெல்லம், பனங்கற்கண்டு, பதநீர் என பனையில் இருந்து தாயரிக்கப்படும் பல பொருட்களை இன்றைய தலைமுறை இழந்து விட்டதை இக்கட்டுரை எமக்குணர்த்தி நிற்கிறது. 2003ஆம் ஆண்டு ஒரேட்டர் சுப்பிரமணியம் அவர்களின் நினைவுப் பேருரையை

"தமிழர் வாழ்வியலிற் பனை" என்ற தலைப்பில் பேராசிரியர் உரையாற்றி இருந்தமையும் இங்கு நினைவு கூரத்தக்கது. யாழ்ப்பாண சமூகத்தினர் மரக்கறி என்னும் "ஆருதக்கறி" உண்ணும் வழக்கத்தைக் கைக் கொண்டமைக்கான காரணங்களை ஆராயும் இக்கட்டுரை யாழ்ப்பாண மக்களின் பாவனையில் இருந்த ஆடை, அணிகலன்கள், வீடுகள், மடம், போக்குவரத்து குறித்தும் அதிக கவனஞ் செலுத்துகிறது. இக்கட்டுரை யில் யாழ்ப்பாணத்துப் பொருளாதார வளர்ச்சியில் அதிக செல்வாக்குச் செலுத்துகின்ற "புகையிலை" குறித்துப் பேசும் பேராசிரியர் சுருட்டுக் கொட்டிலில் "படிப்பு பாரம்பரியம் ஒன்று இருந்ததையும் எடுத்துக்காட்டு கின்றார். இக்கட்டுரையில் இடம்பெறும் பொருள் சாராப் பண்பாடுகள், மொழிசார் பண்பாட்டுக்கூறுகள், சடங்குகள், நம்பிக்கைகள், கலை மரபுகள், கல்வி மரபுகள் குறித்த பேராசிரியரின் பதிவுகள் விரிவான ஆய்வைக் கோரிநிற்கின்றன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் "புலமைச் சிரத்தைக்கு உட்படாத தமிழ்க் கவிதைப் பாரம்பரியம்" என்ற தலைப்பில் ஆற்றப்பட்ட உரை, தமிழ் இலக்கியப் பரப்பில் ஆய்வுக்குட்படுத்தப்படாத பகுதிகளை ஆய்வுக் குட்படுத்துகிறது. வெவ்வேறு சூழல்களில் வெவ்வேறு காலப்பகுதியில் பாடப்பட்டு பத்தொன்பதாம், இருபதாம் நூற்றாண்டுக் காலப்பகுதியில் தொகுக்கப்பட்டு வெளிவந்த தனிப்பாடற்றிரட்டினை முன்னிறுத்தி ஆராயப்பட்ட ஆய்வாக இவ்வாய்வு காணப்படுகிறது. ஆய்வின் முற்பகுதி தனிப்பாடல்களின் பதிப்பு முயற்சிகள் குறித்துக் கவனஞ் செலுத்துகிறது. இம்முயற்சியில் ஈடுபட்டவர்களுக்குத் தாம் கண்டெடுத்த பாடல்களை அச்சுவாகனம் ஏற்றிவிடவேண்டும் என்ற ஆர்வம் இருந்ததே தவிர அதனை முறையாகக் காலவரிசைப் படுத்தி பதிப்பிக்கவேண்டும் என்ற எண்ணம் இருக்கவில்லை என்பதை இக்கட்டுரையில் பேராசிரியர் எடுத்துரைக்கிறார். பாடிய புலவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு தொகுக்கப்பட்ட பாடல்களாக இவை விளங்குவதைச் சுட்டிப்பாகக் கூறிச்செல்லும் பேராசிரியர் ஒரே பெயரில் பல புலவர்கள் வாழ்ந்தபோது அப்பெயரில் அனைத்துப் புலவர்கள் பாடிய பாடல்கள் ஒன்றாகத் திரட்டப்பட்டு தொகுக்கப்பட்ட நிலைமை காணப்பட்டமையை ஔவையார் பாடல்களை ஆதாரங் காட்டி விளக்கிச்செல்கிறார். தனிப்பாடற்றிரட்டில் உள்ளடக்கப்பட்ட பாடல்களை முற்காலப் பாடல்கள், இடைக்காலப் பாடல்கள், பிற்காலப்பாடல்கள் என மூன்றாக இக்கட்டுரையில் பகுத்தாராய்கிறார். கபிலர், பரணர், நக்கீரர், இறையனார், ஔவையார் ஆகியோரால் பாடப்பட்ட பாடல்களை முற்காலப் பாடல்களுக் குள்ளும் கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்திப்புலவர், பிற்கால ஔவையார் முதலியோரால் பாடப்பட்ட பாடல்களை இடைக்காலப் பாடல்களுக்குள்ளும் ஒப்பில்லா மணிப் புலவர், படிக்காசுப்புலவர், இராமச்சந்திரக் கவிராயர், அருணாசலக்கவிராயர், காளமேகப்புலவர், சுப்பிரதீபகவிராயர் முதலியோரால் பாடப்பட்ட பாடல்களை பிற்காலப் பாடல்களுக்குள்ளும் வைத்து இக்கட்டுரையில் ஆராய்கிறார். இடைக்காலத்தில் வாழ்ந்த அரசவைக் கவிஞர்களிடத்தில் காணப்பட்ட போட்டி, பொறாமை, பிரச்சினைகளை எடுத்துரைக்கும் இவ்வாய்வு அரசர்களின் புகழினைச் சிறப்பித்துப் பாடிய புலவர்கள் குறித்தும் பேசுகிறது. இவ்வாய்வின் விரிவான பகுதியாக பிற்காலப்பாடல்கள் அமைகிறது. தனிப்பாடற்றிரட்டின் தனித்துவத்தை இப்பாடல்கள் எவ்வாறு வெளிப்படுத்தி நிற்கின்றன என்பதை சுவையாகவும் நூசனமாகவும் சொல்லும் பகுதியாக இப்பகுதி விளங்குகிறது. வறுமை, பரத்தமை, விரக்தியுணர்வு, மடங்கள் ஆதினங்களின் நடைமுறைகள், நிலாக்கிழார்களை, புரவலர்களைப் பாராட்டுதல், பழித்தல், போலிப்புலமை முதலான இக்காலப் பாடுபொருள் குறித்து இக்கட்டுரையில் விரிவாகப் பேசும் பேராசிரியர் இக்காலத்தில் தோன்றிய சில பாடல்களை சங்க இலக்கியச் செய்யுட்களுடன் ஒப்பிட்டு நோக்குகிறார். தமிழுக்கு கிடைத்த அரிய ஆய்வாக இவ்வாய்வு துலங்குகிறது.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியில் திரு சுப்பிரமணியம் பரமானந்தம் பீடாதிபதியாக இருந்த காலப்பகுதியில் பேராசிரியர் வித்தியானந்தனின் நினைவுப்பேருரை ஒன்றை பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா அவர்கள் ஆற்றியிருந்தார். "யாழ்ப்பாண அச்சுக் கலை தொடக்கமும் தொடர்ச்சியும்" என்ற தலைப்பின் கீழ் ஆற்றிய அவ்வுரை அச்சுகலையின் தோற்றத்தையும் அது பத்தொன்பதாம் நூற்றாண்டில் துரித வளர்ச்சி பெற்று இருபதாம் நூற்றாண்டில் எவ்வாறு கோலொச்சியது என்பதை எடுத்துரைக்கிறது. அச்சியந்திரம் கண்டுபிடிக்கப்பட்டு (கி.பி.1450) நூற்றி நான்கு ஆண்டுகளுக்குப் பின்னரே (1554) "காத்திலா" என்ற நூல் உருவானதையும் அந்நூலைத் தொடர்ந்து 20.05.1577ஆம் ஆண்டு "தம்பிரான் வணக்கம்" என்ற நூல் உருவானதையும் 1586இல் தூத்துக்குடி புன்னைக்காயலில் "அடியார் வரலாறு" என்ற நூல் அச்சாகி வெளிவந்ததையும் தனிநாயகம் அடிகளாரின் கூற்றினை ஆதாரங்காட்டி நிறுவும் பேராசிரியர் பத்தொன்பதாம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் அச்சகப்பண்பாடு எவ்வாறு வளர்ந்தது என்பதை ஆய்வுக்குட்படுத்துகிறார். பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்து இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை யாழ்ப்பாணத்தில் இருந்த அச்சுக்கூடங்களையும் அவற்றின் செயற்பாடுகளையும் அவற்றால் ஏற்பட்ட மொழி. கலை, இலக்கிய, சமுதாய, பொருளாதார மாற்றங்களையும் இக்கட்டுரை விரிவாக நோக்குகிறது. அமெரிக்க மிசனரிமார்களின் கட்டுப்பாட்டில் இருந்த அச்சியந்திரசாலைகள் தமது சமயப் பிரச்சாரத்துக்கும் கல்வி தேவைகளுக்கும் பயன் பட்டதையும் யாழ்ப்பாண வைபவ கௌமுதி என்ற நூலில் இடம்பெறும் குறிப்புக்களை ஆதாரமாகக் கொண்டும் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் அவர்களின் ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டும்

நிறுவுகிறார். சுதேசிகள் அச்சியந்திரசாலைகளை உருவாக்கச் சாதகமாக அமைந்த காரணிகளை ஆராயும் இப்பேருரை கல்வி பரவலாகி வாசிப்புப் பழக்கம் பரவ லாக்கம் அடைவதற்கும் அச்சியந்திரம் அடிப்படையாக அமைந்ததையும் எமக்குணர்த்தி நிற்கிறது. அச்சுப் பணியில் நாவலர் ஆற்றிய பங்களிப்பினையும் மதிப்பிடும் இக்கட்டுரை அச்சக உரிமையாளர்களே பத்திராதியர்களாகவும் விளங்கி யதையும் எமக்கு எடுத்துக் காட்டுகிறது.

2010ஆம் ஆண்டு கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் தமிழ்வேள் கந்தசாமி நினைவுப் பேருரையை “யாழ்ப்பாணத்துப் பண்டிதப் பாரம்பரியம்” என்ற தலைப்பில் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா அவர்கள் ஆற்றியிருந்தார்கள். ஈழத்துப் பண்டிதப் பாரம்பரியம் இதுவரைகாலமும் ஆராயப்படாத, அறியப்படாத நிலையில், நெடுங்காலமாகத் தமிழ்க் கல்விப் பாரம்பரியத்தில் தோன்றிய யாழ்ப்பாணத்துப் பண்டிதப் பாரம்பரியத்தை ஆராயும் முதல்நிலை ஆய்வாக இவ்வாய்வு துலங்குகிறது. மரபுவழித் தமிழ்க் கல்விப் புலமையாளர்களாக மதிக்கப்படும் இவர்கள் குறித்து நூல்களோ ஆய்வுகளோ வெளிவராத நிலையில் இவ் வாய்வு ஈழத்திலக்கியப் பரப்பில் சிறப்பித்துக் குறிப்பிட்டுக் கூறக்கூடிய பண்டிதர்களின் இலக்கியப் பணிகளை இனங்காட்டி நிற்பதுடன் அவர்களை உருவாக்கிய நிறுவனங்களையும் கோடிட்டுக் காட்டுகிறது. குண வீரபண்டிதர், வரதபண்டிதர், சங்கரப்பண்டிதர், முருகேசபண்டிதர், நாகநாதப்பண்டிதர், கணேச பண்டிதர் என ஆரம்பகாலப் பண்டிதர்கள் குறித்தும் இருபதாம் நூற்றாண்டில் பேரோடும் புகழோடும் விளங்கிய பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, முகாந்திரம் சதாசிவஐயர், வித்துவ சிரோமணி சி.கணேசையர், நவநீதகிருஷ்ணபாரதியார், பண்டிதர் ச.பொன்னுத்துரை, கந்த முருகேசனார், வித்துவான் சுப்பையாப்பிள்ளை, இலக்கணவித்தகர் நமச்சிவாயத் தேசிகர், பண்டிதர் க.வீரகத்தி, பண்டிதர் க.நாகலிங்கப் பண்டிதர், பண்டிதர் சி.சச்சிதானந்தன், பன்மொழிப் புலவர் கா.அப்பாத்துரை, பண்டிதர் மயில்வாகனம் முதலானோரை தமிழ் இலக்கிய உலகுக்கு அறிமுகம் செய்யும் இக்கட்டுரை யாழ்ப் பாணத்தைச் சேர்ந்த பத்மாசனி அம்பாள், பரமேஸ்வரி, சத்தியாதேவி, அமிர்தாம்பிகை, மகேஸ்வரி, தங்கம்மாள் அப்பாக்குட்டி, பொன் பாக்கியம் முதலானோர் மதுரை, யாழ்ப்பாணப் பண்டிதர் பரீட்சையில் சித்தியடைந்து பண்டிதைகளாக விளங்கியதையும் எமக்குணர்த்தி நிற்கிறது. ஈழத்துப் பண்டிதர்களை உருவாக்கியத்தில் ஆரியதிராவிட பாஷா விருத்திச் சங்கம் ஆற்றிய பணி களையும் காவிய பாடசாலைகள், பிராசீன பாடசாலைகள், பரமேஸ்வரா பண்டித ஆசிரியர் பயிற்சி கலாசாலை முதலானவை ஆற்றிய பங்களிப்பையும் இக்கட்டுரை வெளிப்படுத்தி நிற்கிறது. நீண்ட அகன்ற பண்டிதப் பாரம்பரியத்தில் பண்டிதர் பண்டிதர் கதிரிப்பிள்ளை, சி.அப்புத்துரையார், உமாமகேஸ்வரம்பிள்ளை, இலக்கிய கலாநிதி மு.கந்தையா, வித்துவான் இ.திருநாவுக்கரசு, பண்டிதர் செ.திருநாவுக்கரசு, வித்துவான் க.ந.வேலன், வித்துவான் க.வேந்தனார், பண்டிதர் செ.துரைசிங்கம், பண்டிதர் கடம்பேஸ்வரன், புலவர்மணி வை.க.சிற்றம் பலம், ஊரேழு சரவணமுத்துப்பிள்ளை, பன்னாலை வித்துவான் சிவானந்தையர், மாணிக்கத்தியாகராசப் பண்டிதர், புலோலியூர் வைத்திலிங்கதேசிகர், சிவங்கருணாலய பாண்டியனார், பண்டிதர் வ.நடராசா எனப் பலர் இக்கட்டுரையில் தவிர்க்கமுடியாது விடுபட்டு போயிருந்தனர் என்பதும் இங்கு நினைவுகூரத்தக்கது.

2011ஆம் ஆண்டு கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் இந்துமாமன்றப் பெருந் தலைவர் பாலசுப்பிரமணியம் நினைவுப் பேருரையைத் “தமிழ்க் கவிதை அன்றும் இன்றும்” என்னும் தலைப்பில் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா அவர்கள் ஆற்றியிருந் தார்கள். ஈழத்துத் தமிழ்க் கவிதை மரபுவழிக் கட்டமைப்பில் இருந்து விலகாது செழுமையாக அன்று இருந்ததை எடுத்துரைக்கும் பேராசிரியர் அக்கவிதை பாவலர் துரையப்பாவுக்குப்பின் ஈழத்தில் சேரன், ஜெயபாலன் காலத்தில் எவ்வகையான வளர்ச்சியை அடைந்தது என்பதை இக்கட்டுரையில் தெளிவுபடுத்து கிறார். ஈழத்திலக்கிய உலகில் விவாதிக்க வேண்டிய விடயங்களை விளக்கி நிற்கும் ஆய்வாக இப்பேருரை அமைகிறது.

2011ஆம் ஆண்டு யாழ் மறைமாவட்ட குருக்கள் ஒன்றியத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட மறைந்த, முன்னாள் யாழ் ஆயர் வ.தியோகுப்பிள்ளை ஆண்டகை யின் ஞாபகார்த்த நினைவுப் பேருரையை “அச்சுவேலி எஸ்.தம்பிமுத்துப்பிள்ளை அவர்களின் வாழ்வும் பணியும்” என்ற தலைப்பின் கீழ் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா அவர்கள் நிகழ்த் தினார். இந்த நினைவுப் பேருரை எஸ்.தம்பிமுத்துப்பிள்ளை அவர்களின் பணிகளை சமயப்பணி, சமூகப்பணி, பதிப்புபணி, பத்திரிகைப் பணி, இலக்கியப்பணி எனப்பகுத்து ஆய்வுக் குட்படுத்துகிறது. திருச்சபைக்குரிய கடமைகளைச் செவ்வனே செய்து வந்த தம்பிமுத்துப் பிள்ளை அச்சு வேலித் தேவாலயத்தை மூப்பராக இருந்த கட்டுவித்த வரலாற்றை அவருடைய சமயப்பணிகளுக் கூடாக எடுத்துக்கூறும் இவ்வாய்வு ஆலயங் களில் திரைக்கவி, சிந்துப்பிரார்த் தனை, முதலியவற்றை மேளதாளங் களோடு அச்சுவேலி எஸ்.தம்பிமுத்துப்





பேராசிரியரின்திரு ண நிகழ்வில் பேராசிரியர்கள் கைலாசபதி, சிவத்த ் பி

பிள்ளையே முதன்முதலில் அளிக்கை செய்தார் எனக் கூறுகிறது. அச்சுவேலியில் ஆங்கில வித்தியாசாலை ஒன்றை நிறுவுவதற்கு அரும்பாடு பட்டு உழைத்த இவர் இப்பகுதியில் வைத்தியசாலை ஒன்றையும் நிறுவியதை இக்கட்டுரையின் சமயப்பணியினூடாகப் பேராசிரியர் எடுத்து விளக்குகிறார். இவருடைய பதிப்பு பணிகள் குறித்து இவ்வாய்வு விதந்து பேசுகிறது. திருச்செல்வர் அம்மானை, யாகப்பர் அம்மானை, தேவமாதா அம்மானை, ஞானசவுந்தரி அம்மானை, அர்ச் அலகம் மானை, சந்தந்தோனியார் அம்மானை, அகினேசக் கன்னி அம்மானை, மரிக்கருத்தாள் அம்மானை, அர்ச்செபஸ்தியார், தீத்தூஸ் அம்மானை, திருச்சபை அம்மானை, கிறீஸ்தீன கன்னி அம்மானை, சம்மனச் சுவாமி அம்மானை என கிறிஸ்தவ சிற்றிலக்கியங் களையும் திருச்செல்வர் காவியத்தையும் பதிப்பித்தமை யும் இவ்வாய்வில் குறிப்பிடும் பேராசிரியர் வைத்திய நூல்களைப் பதிப்பித்து இவராற்றிய சேவைகளையும் மதிப்பிடுகிறார். இன்னாசித்தம்பியின் ஊசோன் பாலந்தை கதையை 1891இல் பதிப்பித்த வரலாறு தொடர்பாகவும் இக்கட்டுரையில் பேசப்படுகிறது. நெவின்ஸ் சிதம்பரப்பிள்ளை செய்த தமிழ் வியாகரணம், உடுப்பிட்டி சிவசம்பு புலவர் உரையெழுதிய யாப்பருங் கலக்காரிகை, உரிச்சொல் நிகண்டு, தம்பிமுத்துப் பிள்ளை அவர்களின் மூதாதையர் வரலாற்றைக் கூறும் மானியம் பதியார் சந்ததி முறை என இவராற்றிய பதிப்பு பணிகளை இக்கட்டுரையில் விதந்துரைக்கிறார் பேராசிரியர். இவருடைய பத்திரிகைப்பணி, இலக்கியப் பணிகள் குறித்தும் இக்கட்டுரை நன்கராய்கிறது. "சன்மார்க்கப் போதினி" சஞ்சிகையை வெளிக்கொண்டு வந்ததில் எஸ்.தம்பிமுத்துப்பிள்ளை ஆற்றிய பணி எத்தகையது என்பதை மதிப்பிடும் இக்கட்டுரை தம்பிமுத்துப்பிள்ளையின் கவிபாடும் ஆற்றலையும் நாவல் எழுதும் ஆற்றலையும் வெளிப்படுத்தி நிற்கிறது. சம்சோன் கதையை செய்யுள் நடையில் எழுதியதை இக்கட்டுரையில் ஆராயும் பேராசிரியர் தம்பிமுத்துப் பிள்ளை நாடகத்துக்கு ஆற்றிய பங்களிப்பையும் மதிப்பிடுகிறார். வரலாற்றில் தம்பிமுத்துப்பிள்ளையின் இடத்தையும் இருப்பையும் ஆழமாக எடுத்துரைக்கும் ஆய்வாக இக்கட்டுரை காணப்படுகிறது.

பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவின் நினைவுப் பேருரைகளில் பெரும்பாலானவை இதுவரைகாலமும் அறியப்படாத தமிழ் இலக்கியப்பரப்பில் பேசப்படாத, பேச மறந்த அரிய செய்திகள் பலவற்றை உள்வாங்கி எழுதப்பட்டவை. அவை ஆழமானவை. இதுவரை காலமும் தொகுக்கப்படாது உதிரிகளாக ஆங்காங்கே அருந்தலாகக் கிடைக்கின்ற இந்நினைவுப் பேருரைகளை ஒன்றுதிரட்டி முறையாகத் தொகுக்கப்பட்டு நூலாக வெளிவருமாயின் தமிழ் இலக்கிய வரலாறு செழுமைபெறும். அது இனிவருங்காலங்களில் புதிய தளங்களை நோக்கி பிரவேசிக்கும்.

கந்தையா பத்மானந்தன்

# பேராசிரியர் சிவலிங்கராஜாவின் "யாழ்ப்பாணப் பண்பாடு மறந்தவையும் மறைந்தவையும்" ஓர் வாசகனின் வாசனை அனுபவம்

பொதுவாகப் பண்பாடு பற்றியும் நாகரீகம் பற்றியும் எழுதும் போதும் அல்லது பேசும்போதும் பண்பாடு (Culture) என்பதனையும் நாகரிகம் (Civilization) என்பதனையும் வேறுபடுத்தத் தெரியாமல் நாகரிகக் கூறுகளையும் பண்பாட்டுக் கூறுகளாகக் குறிப்பிடுகின்ற ஒரு போக்குச் சிலரிடம் காணப்படுகின்றது. உண்மையில் சமூக விஞ்ஞானிகளின் (Social Scientists) கருத்தின் படி, பண்பாடு என்பது, வாழ்க்கை முறையாகும் (way of life). ஒவ்வொரு மனித சமுதாயத்திற்கும் என்று ஒரு பண்பாடு உண்டு. அது அச் சமுதாயத்தில் வாழுகின்ற பெரும்பான்மை மக்களின் ஒருமித்த நடத்தைகளையும் எண்ணங்களையும் வெளிப்படுத்துவதாக அமையும். அதேவேளை ஒரு சமுதாயத்தில் அமைந்துள்ள கலை, நம்பிக்கை, பழக்கவழக்கங்கள், மொழி, இலக்கியம், விழுமியங்கள் (Values) யாவும் அந்தச் சமுதாயத்தின் பண்பாட்டுக் கூறுகள் எனப்படும். நாகரிகம் என்றால் திருந்திய வாழ்க்கை முறை என்று குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும். அதாவது நகரங்களில் பின்பற்றப்பட்ட சமூக வாழ்க்கை முறை அல்லது வளர்ச்சியின் மேம்பட்ட நிலை என்று குறிப்பிடலாம். கால தேச வர்த்தமானங்களுக்கு ஏற்ப பண்பாட்டில் ஏற்படும் மாற்றங்கள் நாகரீக மாற்றத்திற்கு உதவலாம் மறுதலையாக நாகரீக மாற்றமும் பண்பாட்டில் தாக்கத்தை ஏற்படுத்தலாம்.

சமூக இயல் அறிஞர்களின் கருத்துப்படி ஒரு மனிதன் பேசும் மொழி, அணியும் ஆடை, உண்ணும் உணவு, வாழும் முறை, செய்யும் பணி, அவனது எண்ணங்கள் யாவும் அவன் சார்ந்த சமுதாயத்தின் பண்பாட்டை வெளிப்படுத்தும் வாயில்களாகக் கருதப்படுகின்றன. அச் சமூக இயல் அறிஞர்கள் பண்பாட்டை மூன்று வகையாகப் பிரிப்பார்கள்.

1. மனிதன் தன் அடிப்படைத் தேவைகளை (Basic needs) நிறைவு செய்யும் முறைகளினால் வெளிப்படும் பண்பாடு: மனிதனின் அடிப்படையான தேவைகளான உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றின் வாயிலாகவும் ஒருவன் சார்ந்திருக்கும் பண்பாடு வெளிப்படும்.



2.கல்வி, கேள்வி வழியாகப் பேணப்படும் பண்பாடு: எந்த ஒரு மனிதனிடமும் பண்பாடு பரம்பரையாக வருவதில்லை. மாறாக அவன் அதனைப் பிறரிடம் இருந்து கற்றறிந்து கொள்ள வேண்டும் . குழந்தை ஒன்று தனது அனுபவத்தினாலும், பிறரைப் போலச் செய்வதனாலும் (imitation) கவனிப்பதனாலும் (watching), கூர்ந்து நோக்குவதனாலும் (observation ) தான் சார்ந்த சமூகத்தின் பண்பாட்டைத் தெரிந்து கொள்ளு கிறது என்று அறிஞர்கள் கருதுகிறார்கள் .

3.குறியீடுகளைப் (Symbols) பயன்படுத்துவதின் வாயிலாக வெளிப்படும் பண்பாடு: ஒரு கருத்தைத் தெரிவிக்கும் அடையாளம் குறியீடு (Symbol) எனப்படும். பொதுவாகத் தமிழ்ப்பெண்கள் கழுத்தில் அணியும் தாலியும், காலில் அணியும் மெட்டியும் நெற்றியில் அணியும் திலகமும், திருநீறும், தலையில் சூடும் மலரும், கைகளில் அணியும் வளையலும் இவ்வகையிலான பண்பாட்டுக் குறியீடுகளே. சங்க காலத்தில் போர் வீரர்கள் அணியும் பூவினை வைத்துக்கொண்டு அவர்கள் எத்தகைய போரில் ஈடுபட்டுள்ளார்கள் என்பதனை அறியக்கூடியதாக இருந்தது. உழிஞைப்பூவை அணிந்தால் உழிஞைப் போர் அதாவது முற்றுகைப் போர் என்று பொருள்படும் .முற்றுகை இடும் நாட்டுப் படைவீரர்கள் இந்தப் பூவை அணிந்திருப்பார்கள். அதேபோன்று தும்பைப் பூவை அணிந்திருந்தால் தும்பைப் போர் அதாவது நேரடிப் போர் எனப் பொருள்படும் . சண்டையில் ஈடுபடும் இரு நாட்டுப் படை வீரக்ளும் இந்தப் பூவை அணிந்திருப்பார்கள். சண்டையில் வெற்றி பெற்றவர்கள் வாகைப் பூவை அணிவார்கள் . இதே போன்று பாண்டிய, சேர, சோழ வம்சத்து மன்னர்களும் முறையே வேப்பம் பூ, பனம்பூ, ஆத்திப்பூ ஆகியவற்றைத் தமது இலச்சனைகளாகக் (ensign) கொண்டிருந்தனர் என்பது வரலாறு .

சில தனிக்கூறுகளும் அதேபோன்று ஒன்றோடொன்று தொடர்புடைய தனிக்கூறுகள் சில இணைந்தும் உருவாகும் கூட்டு வடிவங்களைக் கொண்டதாகப் பண்பாடு அமையும் என்பது அறிஞர்களின் கருத்து . ஒருவரின் அக உணர்வு என்பதும், அந்த அக உணர்வின் காரணமாக வரும் புறச்செயல்கள் அல்லது சம்பிரதாயங்கள் என்பவையும் பண்பாட்டின் இரு கூறுகளாக உள்ளன என்று கருதும் அறிஞர்கள் இந்த இரண்டு கூறுகளும் சேர்ந்து அமைவதே பண்பாட்டின் கூட்டு வடிவங்கள் என்பது அவர்களின் எண்ணமாகும் .

இத்தகைய கூட்டு வடிவங்களால் அமையும் பண்பாட்டை சமூகவியல் அறிஞர்கள் இரண்டு வகையாகப் பிரிப்பார்கள்.

1.புறச்செய்கைகள், பழக்கவழக்கங்கள் வெளிப்படுத்தும் பண்பாடு (Material Culture) புறப்பண்பாடு: நெடுங்காலமாகப் பின்பற்றப்பட்டு வரும் சில சடங்குகள், சில அமைப்புகள், பழக்க வழக்கங்கள் முதலியன புறத் தோற்றத்தினால் வெளிப்படும் பண்பாட்டுக் கூறுகளாகக் கருதப்படுகின்றன. உதாரணமாக மரணச் சடங்குகள் கிராமிய வழிபாட்டு முறைகளை இதனுள் அடக்கலாம் .

2.அக உணர்வுகள் வெளிப்படுத்தும் பண்பாடு (Non Material Culture) அகப்பண்பாடு: "CULTURE" என்ற சொல்லுக்குப் பக்குவப்படுதல் என்று ஒரு பொருளும் உண்டு. மனம் பக்குவம் பெற்ற அல்லது பண்பட்ட மனம் கொண்ட ஒருவரை Cultured man என்று அழைக்கின்றோம். மனப்பக்குவம் என்பது உயர்ந்த சிந்தனைகளை உள் வாங்கி அவற்றிற்கு ஏற்றவாறு மனத்தை உருவாக்கிக் கொள்ளுதல் ஆகும். நல்ல சிந்தனைகள் என்பது நல்ல மனத்தின் வெளிப்பாடு ஆகும். நல்ல சிந்தனைகள் அல்லது உயர்ந்த சிந்தனைகள் ஒரு சமூகத்தின் அல்லது ஒரு இனத்தின் அல்லது ஒரு நாட்டின் உயர்ந்த பண்பாட்டைக் குறிப்பிடும். உதாரணமாகத் தமிழர்கள், வயதில் மூப்பு உடையவர்களையும் சிறப்பு உடையவர்களையும் நேரில் பார்த்தால், எழுந்து நிற்பார்கள் அல்லது காலில் விழுந்து வணங்குவார்கள் . பெரியவர்களுக்கு மரியாதை கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அவ்வாறு எழுந்து நின்று செய்யப்படும் மரியாதை தமிழர்களின் பண்பாட்டுக் கூறுகளில் ஒன்றாக அமைகிறது.

பண்பாட்டுக்கு ஒரு வரையறை அல்லது எல்லை கூற இயலாது என்பது அறிஞர்களின் கருத்து . பண்பாடு என்பது ஒரு சமூகத்திற்குரிய பண்பாடாக அல்லது ஒரு நாட்டிற்கு உரிய பண்பாடாக அல்லது உலகளாவிய பண்பாடாக இருக்கக் கூடும். சில பண்பாடுகள் ஒரு இனக் குழுவிற்கு மட்டுமே உரியதாக இருக்கும் அதேவேளை சில இனக்குழுக்கள் பல்வேறு பண்பாடுகளையும் கொண்டிருக்கும் . உதாரணமாக தமிழர்கள் தமக்கென்று ஒரு பண்பாட்டினைக் கொண்டு இருக்கும் அதேவேளை புலம் பெயர் தேசங்களில் இருக்கும் பண்பாடுகளையும் தமது பண்பாடாகக் கொள்கிறார்கள். அதே போன்று சில பண்பாட்டுக் கூறுகள் உலகம் முழுக்கப் பரவி இருக்கும். உதாரணமாக ஆங்கிலேயரின் ஆளுகைக்கு உட்பட்ட நாடுகளில் ஆங்கிலேயரின் பண்பாட்டுக் கூறு கள் புழக்கத்தில் இருக்கும் . அதேபோன்று மொரீசியஸ், தென் ஆப்பிரிக்கா, ரியூனியன், பர்மா, மலேயா, சிங்கப்பூர் போன்ற பகுதிகளில் வாழும் தமிழர்களிடமும் தமிழ் மொழியும், தமிழர்களின் பண்பாட்டுக் கூறுகளாகிய தமிழர்களின் நம்பிக்கைகளும், பழக்க வழக்கங்களும், வழிபாட்டு முறைகளும், சமயச் சடங்குகளும் பெருமளவில் பின்பற்றப்படுகின்றன.

ஒரு நாட்டில் வாழ்வோர் தாம் வாழும் நிலம், சூழல், பழக்க வழக்கங்கள், நடவடிக்கைகள், நம்பிக்கைகள், உணர்வுகள் ஆகியவற்றின் அடிப்படையாக ஒரு தனித்தன்மை வாய்ந்த பண்பாட்டை உருவாக்கிக் கொள்வார்கள் அப்பண்பாட்டுக் கூறுகளைக் கொண்டே அவர்களை அடையாளம் காண இயலும். இதை நாட்டுப் பண்பாடு என்பார்கள். உதாரணமாக இலங்கைப் பண்பாடு இந்தியப் பண்பாடு என்பவற்றைக் கொள்ள முடியும். அதேபோன்று ஒவ்வொரு சமுதாயத்திற்கும் கூட இந்தப் பண்பாடு இருக்கும். இதனைச் சமுதாயப் பண்பாடு (Sub Culture) என்பார்கள். இலங்கைத் தமிழர்களின் பண்பாடு இந்த சமுதாயப் பண்பாட்டிற்கு உதாரணமாகும். ஆண்கள் வேட்டி அணிதல், தலைப்பாகை கட்டுதல், இளம் பெண்கள் பாவாடை தாவணி அணிதல், முகத்தில் மஞ்சள் பூசுதல், திருமணத்தின்போது கணவன் மனைவிக்குத் தாலி கட்டுதல், தைப்பொங்கல், மாட்டுப்பொங்கல் என்பன இலங்கைத் தமிழர்களின்


பண்பாடாக அமையும் . இந்தச் சமுதாயப் பண்பாடு கூட புவியியல் பொருளியல் சமூகவியல் அரசியல் காரணங் களினால் பிரதேச ரீதியான விசேட இயல்புகளைக் காட்டும் .உதாரணமாக இலங்கைத் தமிழர்கள் மத்தியில் யாழ்ப்பாணத்தில் ஒரு பண்பாடும் வன்னியில் ஒரு பண்பாடும் மட்டக்களப்பில் ஒரு பண்பாடும் மலையகத் தில் ஒரு பண்பாடும் அந்தந்தப் பிரதேசத்திற்குரிய வகையில் இருப்பதை அவதானிக்கலாம் .

இவ்வாறாக யாழ்ப்பணத்திற்கு மட்டுமே உரிய பண்பாட்டினைப் பேசுவதற்காகப் பேராசிரியர் சிவலிங்க ராஜா அவர்கள் கலைக்கேசரியில் தொடர்ச்சியாக எழுதிய கட்டுரைகளின் தொகுப்பாக யாழ்ப்பாணப் பண்பாடு மறந்தவையும் மறைந்தவையும் என்ற புத்தகத் தினை வெளிக்கொணர்ந்துள்ளார்கள் . போர்த்துக்கீசர் ஒல்லாந்தர் ஆங்கிலேயர்களின் படை எடுப்புகளாலும் இடம் பெயர்வு புலம் பெயர்வுகளாலும் கால தேச வர்த்த மானங்களிற்கு ஏற்பவும் வேறு பல காரணங்களினாலும் அறிவியல் வளர்ச்சியினாலும் தொழில் புரட்சியினாலும் யாழ்ப்பாணப் பண்பாடு மாற்றத்திற்கு உள்ளாகியுள்ளது. சில பண்பாட்டு அம்சங்கள் மறைந்து விட்டன அதே போன்று சில பண்பாட்டு அம்சங்களை மக்களினால் ஒன்றோ அல்லது பல காரணங்களிற்காக மறக்கப்பட்டு விட்டன . அவை பற்றியே பேராசிரியர் அவர்கள் தனது புத்தகத்திற்கு மிகப் பொருத்தமாக யாழ்ப்பாணப் பண்பாடு மறந்தவையும் மறைந்தவையும் என்ற பெயரினை வைத்துள்ளார்கள் .

யாழ்ப்பாணத்துக்குச் சொந்தமான பண்பாடு என்பதனை யாழ்ப்பாணத்துப் புவியியல், அரசியல், பொருளியல், சமூகவியல் என்பன தீர்மானிப்பதாகக் கூறும் ஆசிரியர் அதே காரணத்திற்காக யாழ்ப்பாணத் தில் இருக்கும் வலிகாமம் , தென்மாராட்சி , வடமாராட்சி, தீவகம் போன்ற பிரதேசங்கள் பண்பாட்டு ஒற்றுமைக் குள் சில பண்பாட்டு வேற்றுமைளைக் காண்பிப்பதாகக் கூறுகிறார். யாழ்ப்பாணப் பண்பாட்டினை ஆய்வு செய்யும் ஆசிரியர் வீடுகளின் அமைப்பு, வீட்டுப் பாவனைப் பொருட்கள், அணிகலன்கள், ஆடைகள், தொழிற்கருவிகள், செய்பொருட்கள், போக்குவரத்துச் சாதனங்கள், விவசாயம், கால்நடை வளர்ப்பு, தொழில் கள் சடங்குப் பொருட்கள், போன்ற பல்வேறு பொருட்களை மையமாகக் கொண்டு எவ்வாறு யாழ்ப்பாணத்தின் பொருள் சார் பண்பாடு நிலவியது என்று விளக்குகின்றார். அதேவேளை பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், சடங்குகள், சம்பிரதாயங்கள், வழி பாட்டு முறைகள், நெறிமுறைகள், கருத்தியல், இலக்கியம் ,இசை நடனம் நாடகம் போன்ற கலைகள், விளை யாட்டுக்கள், அழகியற்சிந்தனைகள் என்பவற்றை மையமாகக் கொண்ட பொருள் சாராப் பண்பாடு எவ்வாறு நிலவியது என்றும் விளக்குகின்றார் .

தான் கண்டதையும் கேட்ட தையும் கற்று அறிந்ததையும் அனுப வித்ததையும் வைத்துக்கொண்டு யாழ்ப்பாணத்தில் கிராமத்திற்கு கிராமம் பண்பாட்டு வேறு பாடுகள் இருந்தாலும் யாழ்ப்பாணத்தின் பண்பாட்டில் ஒரு பொதுமையை இனம் கண்டு ஆசிரியர் இந்தப் புத்தகத்தை எழுதி உள்ளார் . உணவு , உறையுள் , ஆடை அணிகலன்கள், புழங்கு பொருட்கள், போக்குவரத்து, மொழிசார் பண்பாட்டு கூறுகள், ஆட் பெயர் வழக்குகள், உறவு முறைச் சொற்கள், மரபுவழிச் சீர்மியம், பாரம்பரிய விளையாட்டுக்கள், பாரம்பரியத் தொழில்கள், திட்டுகள், யாழ்ப்பாணத்தில் அரைவாய் மொழிப் பாடல்கள், யாழ்ப் பாணத்து வாய் மொழி இலக்கியம், யாழ்ப்பாணத்து கோயிற் திருவிழாக்கள், பிறப்பு முதல் ஏடு தொடக்குதல் வரையான சடங்குகள், பூப்பு நீராட்டற் சடங்கு, திரு மணச் சடங்கு, மரணச் சடங்கு முறைமைகள், ஒப்பாரிப் பாடல்கள், யாழ்ப்பாணத்து வாழ்வியலில் பஞ்சாங்கம் ஆகிய இருபத்தியொரு தலைப்புகளில் யாழ்ப்பாணத்தின் பொருள் சார் பண்பாட்டையும் பொருள் சாராப் பண்பாட்டையும் ஆசிரியர் விளக்குகின்றார் .

ஊருக்கு ஊர் குறிச்சிக்கு குறிச்சு சிற்சில வேறு பாடுகள் இருந்தாலும் ஒட்டு மொத்த யாழ்ப்பாணப் பண்பாடு எவ்வாறு இருந்தது இருக்கிறது என்பதனை வாசகர்கள் இந்தப் புத்தகத்தினை வாசிப்பதன் மூலம் அறிந்து கொள்ளலாம் . குறிப்பாக பத்தொன்பதாம் நூற் றாண்டிலும் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் யாழ்ப்பாணப் பண்பாடு எப்படி இருந்தது என்பதனை இப் புத்தகத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம் .தொல்லியல் இலக்கிய வரலாற்றியல் ஆய்வு அடிப்படையிலான ஆதாரங்களை ஆசிரியர் தேவையான இடங்களில் எடுத்து காட்டுவதானது யாழ்ப்பாணப் பண்பாட்டின் இருக்கையை உறுதிப்படுத்துவதாக அமைகிறது. யாழ்ப் பாணப் பண்பாடு பற்றி அறிய விரும்புகின்றவர்கள் அல்லது அது பற்றி ஏனையோருக்கு சொல்ல விரும்பு கின்றவர்கள் அல்லது எழுத விரும்புகின்றவர்கள் இந்தப் புத்தகத்தை ஒருமுறை அல்ல பலமுறை வாசிக்க வேண்டும். அதே போன்று இன்று பலவிதங்களிலும் மாற்றத்திற்கு உள்ளாகி இருக்கின்ற யாழ்ப்பாணப் பண் பாடு அன்று எவ்வாறு இருந்தது என்பதனை அறிய அல்லது ஆய்வு செய்ய விரும்புகின்றவர்களுக்கு இது ஒரு உசாத்துணையாக அமையும் என்று நம்புகின்றேன் .




யாழ்ப்பாணப் பண்பாடு என்பது மிகவும் விசாலித்த ஒன்று. ஆசிரியர் குறிப்பிடுவது போல அவர் கண்டு கேட்டு அறிந்து அனுபவித்ததை மட்டுமே இங்கு ஆவணப்படுத்தி உள்ளார்.

அவரின் பார்வைக்கு அகப் படாத இன்னும் பல பண்பாட்டு அம்சங்கள் இருக்கக் கூடும். எனவே ஆய்வாளர்கள் பேராசிரியர் சிவ லிங்கராஜாவின் இந்தப் புத்தகத்தினை ஆரம்பமாகக்கொண்டு தொடர்ந்து ஆய்வுகளை மேற்கொண்டு யாழ்ப் பாணப் பண்பாட்டின் வன்மையையும் தொன்மையையும் வெளிக் கொணர வேண்டும் என்று பேராசிரியர் விரும்புவது போலவே கட்டுரையாளராகிய நானும் விரும்புகின்றேன் .

கோகிலா மகேந்திரன்



# பேராசிரியர். எஸ் .சிவலிங்கராஜாவின்
## “யாழ்ப்பாணத்துக் கல்வி வளர்ச்சியில் இந்திய ஆசிரியர்களின் பங்களிப்பு”
# ஆய்வு நூல் சார்ந்து ஒரு வாசகர் எண்ண அலை

*“நாவலராற் புகழ்பெற்ற நாடு !நாகரிகம் பெற்ற நாடு !*
*வன்மை பெற்ற நாடு !சமய நிலை பெற்ற நாடு ! சகல*
*நலமும் பெற்ற நாடு !நம் யாழ்ப்பாண நாடு !”*

என்று 1949ஆம் ஆண்டு இந்துசாதனம் வச்சிரவிழா மலரில் எழுதியவர், இங்கு வந்து பணியாற்றிய இந்திய ஆசிரியர் சு. நவநீத கிருஷ்ணபாரதியார். பெரும் வியப்பாக இல்லையா? இந்தச் சிறிய குடாநாட்டை ஒரு நாடு என்று குறிப்பிடும் இந்தப் பெரும் புலமையாளர் எமது மண்ணைத் தனது நாடாகக் கருதி மரணபரியந்தம் இங்கு வாழ்ந்தவர். இவரது மாணவர்களில் ஒருவரான மாவைப் பண்டிதர் க .சச்சிதானந்தன் அவர்களிடம் பயிலும் பாக்கியம் எனக்கும் கிடைத்ததால், அவர் இந்தப் பாரதி பற்றிக் கூறிய விடயங்கள் மனக்குகையின் ஆழத்தில் உள்ளன .




“ஒரு நூல், ஒரு பேனா, ஒரு பிள்ளை, ஒரு ஆசிரியர், உலகை மாற்றப்போதும்” என்றார் மலாலா. (Malala Yousafzai )

ஒரு நாட்டிலிருந்து புலம்பெயர்ந்து இன்னொரு நாட்டுக்கு ஆசிரியராகச் செல்வது இன்றும் நடக்கிறதுதான். உலகம் முழுக்க இருக்கிறதுதான். இன்று ஆசிரியர் விசா பெறுவதற்கு இலகுவான நாடாக அயர்லாந்து இருக்கிறதாம் .ஒப்பீட்டளவில் ஆசிரியருக்கு அதிக சம்பளம் வழங்கும் நாடு கொங்கொங்.(மாதத்திற்கு $7400).எனது அனுபவத்தில் அவுஸ்திரேலியாவில் மாணவர்கள் ஆசிரியராக வரும் இலக்கைக் கொண்டிருப்பது குறைவு .அது மிகக் கடினமான வேலை என்பார்கள் .

அழகான, அர்த்தமுள்ள அட்டைப்படத்துடன் 2020இல் வெளிவந்த இந்த

நூலைப் படித்து முடித்தபோது, இங்கு பணியாற்றிய இந்திய ஆசிரியர் பற்றிய தகவல்களை முழுமையாகச் சேகரிக்க முடியாது பாடசாலை ஆவணங்கள் எல்லாம் அழிந்து போயிற்றே (பழஞ்சோற்றின் மணமும் போயிற்று. பலாச்சுளையின் சுவையும் போயிற்று )என்ற எல்லோருக்கும் நன்கு தெரிந்த இழப்புத் துயருக்கு மேலாக, அதை மேவி ஓர் உள்ளுணர்வு வருகிறது! ஒரு காலத்தில் எங்கள் நாடு, இந்தியாவில் இருந்து பலர் நல்ல தொழிலும் சம்பளமும் (மலையாளக் கடை இருந்தது போன்ற சங்கதிகளுக்கு அப்பால்) தேடி வருமளவுக்கு - வந்தவர்கள் லேசானவர்கள் இல்லை என்பதை நூல் நிறுவுகிறது - பணப்பெறுமதியிலும், கலாசார, பண்பாட்டு விழுமியங்களிலும் சிறந்து உயர்ந்திருந்ததே என்கிற ஏக்கம் சார்ந்த உணர்வு அது. இன்று...? சரித்திரத்தில் நாம் தவறு செய்த இடங்கள் எவை? இன்னும் தவறாகவே செய்யும் காரியங்கள் எவை?

ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்கு வேலைக்குப் போகும்போது, கலாசார அதிர்ச்சி இருக்கும். ஆசிரியராக இங்கு வரும்போது, வித்தியாச மான பிள்ளைகளுடன் பழக வேண்டிய நெருக்கீடு, சக ஆசிரியர்கள், அதிபர், மனேஜர், பாடசாலைச் சமூகம், இந்தநாட்டின் கலைத்திட்டம் ஆகியவற்றுக்கு ஏற்றபடி மாறவேண்டிய நிர்ப்பந்தம், தாய்நாட்டையும் குடும் பத்தையும் பிரிந்து வாழும் தனிமை, போன்றவற்றை வெல்லவேண்டித்தான் இருக்கும். இந்தக் கஷ்டங் களைத் தகர்த்துக்கொண்டு எமது நாட்டின் கல்விச் சூழலை வளம்படுத்திய நாயகர்களாக இவர்கள் எவ்வாறு பவனி வந்தார்கள் என்பதை அழுத்தமாக முன்வைப்பது தான் இந்நூல்.

இலங்கை இந்தியப் புலமை ஊடாட்டத்தைப் பட்டினப்பாலையில் இருந்து தொடங்கும் பேராசிரியர் அவர்கள், க.சரவணமுத்துப்பிள்ளையின் “சைவ உதயபானு” என்ற பத்திரிகை ஏக காலத்தில் யாழ்ப் பாணத்திலும், மதுரையிலும் வெளிவந்த செய்திவரை கூறுகிறபோது, தனது ஆய்வுப்பின்புலத்தை மிக உறுதியாகக் கட்டி எழுப்பிவிடுகிறார். அதே நேரம் யாழ்ப் பாணத்தின் கல்வி நிலை அப்போது எவ்வாறிருந்தது, இங்கு நிறுவப்பட்ட சைவாங்கிலப் பாடசாலைகளில் ஆங்கிலத்தையும், ஆங்கில மொழிமூலம் விஞ்ஞானம், கணிதம் போன்ற பாடங்களையும் கற்பிக்கப் பட்டதாரி ஆசிரியர்கள் போதாதிருந்தநிலை, சைவப் பாடசாலை களில் மிஷனரிமார் கொண்டுவந்த ஆசிரியர்கள் கற்பிக்க அனுமதிக்கப் படாதிருந்த இடைவெளி, முகாமை யாளர்கள் எமது சமூகத்தின் கல்வி அபிவிருத்தியில் கொண்டிருந்த அக்கறை ஆகியவற்றையும் மிகத் தெளிவாக விளக்கிவிடுகிறார்.

நாட்டின் வேறு பல பகுதிகளிலும் இந்திய ஆசிரியர்கள் கற்பித்திருந்தாலும் ,தனது ஆய்வுப்பரப்பை யாழ்ப்பாணத்துடன் மட்டுப்படுத்திக்கொண்ட நூலாசிரி யர், அப்பரப்பை மேலும் பிரிக்கும்போது, தற்போதுள்ள ஐந்து கல்வி வலயங்களூடாகப் பயணிப்பது, என் போன்ற இன்றைய வாசகர் இலகுவில் பின்பற்றிச் செல்ல வழிகாட்டுகிறது.

உயர் சம்பளத்தை மையப்படுத்தியே முதலில் இந்த ஆசிரியர்கள் இங்கு வந்திருந்தாலும், அவர்களில் பலர், “சமூக மூலதனத்தைப் பண்படுத்துபவர்கள் ஆசிரியர்கள்” என்ற எண்ணக்கருவை நிறுவிச் சென்றி ருக்கிறார்கள் என்பதை நூல் நிறுவுகிறது. நம்பிக்கை, பரஸ்பர பரிமாற்றம், சமூக ஒட்டுணர்வு, சமூகப் பிணைப்பு, ஈடுபாடு,சமூக உறுதுணை, உச்ச வினை யாற்றல் பற்றிய சுய மதிப்பீடு முதலிய சமூக மூலதனக் கூறுகளை எமது பிரதேசத்தில் விட்டுச் சென்ற நல்லாசிரியர்களாக இவர்கள் செயற்பட்ட பெறுமதியை ஊடுருவி அலசியுள்ளார் ஆய்வாளர்.

ஒருவரைப் பீடத்தில் வைக்க வேண்டுமெனில் ஆசிரியரை முதலில் அங்கு வை. ஏனெனில் ஆசிரியரே சமூகத்தின் கதாநாயகன் என்பார் கை கவஸாகி (Guy Kawasaki ).பாடசாலை மனேஜர்மார் இவ்வாசிரியருக்கான வீட்டு வசதி முதல், விடுமுறையில் இந்தியாவிற்குப் போய் வரும் ஏற்பாடுவரை பல வசதிகளைச் செய்து அவர்களைப் பீடத்தில் வைத்திருக்கிறார்கள். சிலரது ஓய்வூதியம் கூட இந்தியாவிற்கு அனுப்பப்பட்டிருக்கிறது .இதனால் அவ்வாசிரியர்களும் பலர் மாணவர்களின் தலைவிதியில் முக்காலத்தும் செல்வாக்குச் செலுத்து பவர்களாக இருந்திருப்பதை மாணவர்களின் கூற்றாக நூல் முழுவதும் தேடி விதைத்திருக்கிறார் நூலாசிரியர்.

உலகம் முழுவதும் கற்பித்த இந்தியாவின் மிகப்பெரும் ஆசிரியர், பாடசாலை ஆசிரியரல்லாத சுவாமி விவேகானந்தர் என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்வர். “எனது மாணவர்களை நான் கற்பிப்பதில்லை. அவர்கள் கற்பதற்கான நிலைமைகளை வழங்குவதற்கு முயலுவேன்” என்றார் விஞ்ஞான மேதை அல்பேர்ட் அயின்ஸ்டீன். அதேபோல விவேகானந்தர் போன்ற மகான்களால் உருவாக்கப்பட்ட அகச்சூழல், இந்திய ஆசிரியர்களும் அதிபர்களும் இங்கு இப்போது கல்வித் திணைக்களம் செய்யமுடியாதிருக்கும் விடயங்களைக் கூடச் சாதிக்க உதவியது என்பதைச் சிவலிங்கராஜா அவர்கள் தெளிவுபடுத்தும் முறை நெஞ்சில் நிரந்தர இடம்பிடிக்கிறது.

இவ்வாசிரியர்களின் தோற்றப்பொலிவு, உணவு, உடை, தங்கியிருந்த மனைகள், சென்று வந்த பாதை, பூர்வீகம், அவர்கள் தமிழ் பேசியமுறை, (சிலருக்குத் தமிழ் வராதிருந்த அதேவேளை வேறு சிலர் “ழ” கர உச்சரிப்பு வரை செம்மையாகப் பேசினர்)ஆங்கிலம் பேசிய முறை, அறிந்திருந்த பிறமொழிகள், அவர்களின் பழக்க வழக்கங்கள், வழிபாட்டு முறைகள் என்று மூலை முடுக்கெல்லாம் தேடி அறிந்திருக்கிறார் ஆய்வாளர்.

மிக முக்கிய விடயம் அவர்களின் வெற்றிக்கான வேர்களைத் தேடுவது! பலர் குடும்பத்தோடு இங்கு வாழ்ந்து சமூகத்தோடு ஒட்டிவிட்டனர். பேரனின் பெயரைக்கூறிப் பிள்ளையை அழைக்குமளவுக்கு மாணவர்களின் ஆழ, நீளங்களை அறிந்திருந்தனர். காலை, மாலை வேளைகளில் கிராமத்து ஒழுங்கை

களில் நடந்து திரிந்து, மாணவர்களின் வீடுகளையும் வழித்தடங்களையும் அறிந்தனர். அவர்களின் நன்மை, தீமைகளில் கலந்துகொண்டனர். சிலர் இலங்கைப் பிரஜா உரிமை பெற்று இறப்பு வரை இங்கேயே வாழ்ந்தனர். பாடத்திட்டத்திற்கு மேலேயும் வெளியேயும் கற்பித்தனர். தமது பிள்ளைகளையும் அதேபாடசாலை யில் கற்பித்தனர் எனும்போது அந்தப் பாடசாலைக் கல்வியின் தரத்தை அவர்களும் விரும்பினர் என்பது தெளிவு. (இங்கிருந்து நைஜீரியா போன்ற நாடுகளுக்கு ஆசிரியராகச் சென்றவர்கள் தமது பிள்ளைகளை அங்கு நீண்டகாலம் கற்பிக்கவோ பிரஜா உரிமை பெற்றுத் தங்கிவிடவோ விரும்பவில்லை என்பது எமக்குத் தெரியும்) சமய விழாக்களை நடத்தியதோடு, விளை யாட்டுக்களிலும் அக்கறை காட்டினர். சாரணியம் முதலான இணைப் பாடவிதானச் செயற்பாடுகளை ஆரம்பித்துப் பிள்ளைகளை அவற்றில் ஈடுபடுத்தினர். மாணவர் கழகங்களையும் நூலக வாசிப்பு முறைகளை யும் அறிமுகம் செய்தனர். இப்போதுதான் தொடங்கி யிருப்பது போல நாங்கள் பலர் கருதும் மாணவர் பாராளுமன்ற முறையை அப்போதே ஆரம்பித்தனர். (இடையில் அதன் தொடர்ச்சி அற்றுப்போயிற்று).

நீலாவணன் சொல்வதுபோல்,
"பள்ளிக்கூடத்திலே பகலிரவாய்ப் பாடுபட்டுச்
சொல்லிக்கொடுத்துச்சுணையேற்றிக்கல்வியிலே
நாட்டத்தைக்கூட்டிநயம்பலவும்துய்க்கவைத்தார்"

"பெற்றோர் தினங்கள், விளையாட்டுப்போட்டி,
மற்றும் சுற்றுலா என்றெல்லாம் சொல்லிக்
கொடுத்தார் வாசிகசாலை,
வளர்ந்தோர் வகுப்பு வைத்தார்"

வளர்ந்தோர் வகுப்பு எப்படி நடைபெற்ற தென்றால், திறன் மிகுந்த ஓர் அதிபர் மாலை நேரத்தில் உரையாற்ற, அதைக் கேட்பதற்கு வேறு பல அதிபர் ஆசிரியர்கள் சுயமாகக் கூடுவர்.

ஒருபாடசாலை ஆசிரியர் மற்றைய பாடசாலை மாணவருக்கும் மாலை நேரத்தில் கற்பித்தார்.(டியூசன் இல்லை)

சோர்ந்த பயிரும் நீரைக் கண்டால் தோகை விரித்து வளரும்தானே!

இவர்களிற் சிலர் பாடசாலைக்கு வெளியே சமூகத்திற்காகப் பங்களித்த விடயங்களையும் இந்த நூல் புலப்படுத்துகிறது. இந்துவாலிபர் சங்கம் ஆரம்பித்தனர். கவிதைகள், கட்டுரைகள் எழுதி ,எமது ஈழகேசரி போன்ற பத்திரிகைகளுக்கும் அனுப்பினர். இந்தியப் பத்திரிகை, சஞ்சிகைகளிலும் எழுதினர். சிலர் இன்னும் ஒருபடி மேலேசென்று சிறுவர் இலக்கண நூல், செய்யுள் நூல், நாடகநூல், போன்றவற்றையும் எழுதினர் .மாணவர்களின் இசை, நடனக் கல்வியிலே பெரும் பங்களிப்பைச் செய்தனர். திரு .சு .நடேசபிள்ளை அவர்கள் அரசியலுக்குள்ளும் பிரவேசித்து, இசை நடனக் கல்லூரி ஒன்றையே தொடங்கிப் பெரும் பிரபலம் பெற்றார்.

இங்கு பணியாற்றிய இந்திய அதிபர்கள் பலரும், ஒருவர் மீது மற்றவர் காழ்ப்புணர்ச்சி கொண்டவரா கவோ, "எனக்குத்தான் எல்லாம் தெரியும்" என்ற எண்ணம் கொண்டவராகவோ இருக்கவில்லை. ஒருவர்











மற்றவரிடம் கற்க விருப்பம் கொண்டவராகவே இருந்தனர் என்பது மிகப்பெரிய முன்மாதிரி. "இன்றைய காலத்தில் இதைப் பின்பற்றினால் எப்படி இருக்கும்?" என்று நாம் மனவரைபடம் (mental map)ஆக்கும்படி அவ்விடயத்தை அழுத்திக் குறிப்பார் ஆய்வாளர்.

இன்று சில அதிபர்களைப் பார்க்கிறபோது "எத்தனை பெரிய மனிதருக்கு இத்தனை சிறிய மனமிருக்கு?" என்றும், இத்தனை சிறிய மனிதருக்கு எத்தனை பெரிய எண்ணமிருக்கு?" என்றும் தோன்றுகிறது.

பல வருடங்கள் கல்விப் புலத்திலே பணி யாற்றிய எனக்கு, இந்த நூலில் குறிப்பிடப்படும் ஒரு விடயம் மிக அரிய, அதிசய செய்தியாக இருந்தது. 1913ஆம் ஆண்டு யாழ்.இந்துக்கல்லூரியிலே அதிபராகப் பொறுப்பேற்ற உயர்திரு.பி.சஞ்சீவராவ் L.M.A அவர்கள், பதவியில் அமர்ந்த மறுநாளே மாணவருக்கு வழங்கப்படும் உடலியல் ரீதியான தண்டனைகளை முழுமையாக நிறுத்தினார். கடமையும், ஒழுங்கும், கட்டமைப்பும் பிரம்பினால் நிலைநிறுத்தப்படுவதில்லை என்பதை நிறுவிக்காட்டினார் என்பதே அச்செய்தி. உளவியல் ரீதியாக மிக முக்கியமான செய்தி இது.

ஏராளமான உளவியல் ஆய்வுகள் சரீர தண்டனை பிள்ளைகளைப் பாதிக்கும் முறைபற்றி நிறையவே சொல்லிய பிறகும் இலங்கை, இந்தியா, சீனா போன்ற நாடுகளில் – சட்டம் சொல்வது பற்றிக் கவலைப் படாத-பாடசாலைகளில் தண்டனை இருக்கிறதுதான் என்பது பலரும் அறிந்த ரகசியம். வளர்ச்சி அடைந்த நாடுகளென நாம் கொண்டாடும் ஐக்கிய ராச்சியம், அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில்கூட 1980களின் ஆரம்பத்தில்தான் சரீர தண்டனை முழுமையாக நிறுத்தப்பட்டது. 1913இல் இங்கும், இந்தியாவிலும் ஆங்கிலேயரின் ராச்சியமே இருந்தது. அப்படி இருந்தும் உள்ளுணர்வின் உந்தலால் மிகத் தெளிவாக விஞ்ஞான ரீதியான முடிவை அமுல்படுத்திய இந்த அற்புத மனிதன் யார்?" யாரடா மனிதன் அங்கே? கூட்டிவா அவனை இங்கே! "கணிதப் பேராசிரியரான இவருக்கு நிகரான கல்வியறிவு படைத்தவர் இலங்கையில் வேறெவரு மில்லையென்று சொல்லினர்" எனத் திரு ம.வே. திருஞான சம்பந்தபிள்ளை அவர்கள் எழுதியிருப்பதை யும் நூலாசிரியர் சுட்டத் தவறவில்லை. சஞ்சீவராவ் என்ற அந்த மகானிடம் படித்தவர்கள் புண்ணியவான் களே!

மொத்தமாகப் பார்த்தால் ஒரு மாணவனுக்கு மிகச் சிறந்த பாடப் புத்தகம் அவரது ஆசிரியரே என்ற செய்தியை மிக அற்புதமாகவும், ஆழமாகவும், விரிவாகவும் நிறுவியிருக்கிறது இந்நூல். 2020ஆம் ஆண்டு சாகித்திய விருதைப் பெற்றுக்கொண்ட (சஞ்சீவ ராவ் பற்றிய செய்திக்காகவே விருது கொடுக்கலாமே!) இந்நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பு சமீபத்தில் வெளிவந்திருப்பதாக அறிகிறேன்.

முதல் நூலில் விடப்பட்ட சில தகவல்கள் ஆங்கில நூலில் வந்திருக்கும் அதே சமயத்தில் மேலும்பல தகவல்களுடன் இதன் இரண்டாம் பதிப்பு வெளிவரும் என்ற செய்தியால் உள்ளம் உவகை கொள்கிறது. பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா அவர்கள் கல்வியுலகுக்கு ஒரு பெரும் பொக்கிஷத்தைத் தந்திருக் கிறார் எனில் அது மிகையில்லை.

மம்மல் அறுக்கும் மருந்து கல்விதான்.

காலம் கற்பித்த பாடத்தைக் கருத்தில் கொள்வோம்.

எஸ்.சிவலிங்கராசா

# மைமலாகிறது

உய் தண்ணீர் ஊற்றி வளர்க்க வேண்டிய மிளகாய்க் கன்றுகளை மழைவந்து நிரவலடித்து விட்டது. கொத்திப் பண்படுத்திப் பதமாக இருந்த மண் இறுகிவிட்டது. கன்றுகள் விறைத்து, வெள்ளாரித்துப் போய் நிற்கின்றன. தனக்குரிய பத்துப் பட்டிகளிலும்தான் அவள் மிளகாய்க்கன்றை நாட்டியிருந்தாள். கொஞ்சம் பிந்தி நட்ட தறைதான். மிளகாய்க் கன்றுகள் விறைத்து வெள்ளாரித்ததோ....?

மற்றவர்களின் மிளகாய்க் கன்றுகள் கன்னங் கரும் பேட்டுக் கோழிகள் பரந்து நிற்பதுபோல அவளின் கண்களுக்குக் காட்சி தருகின்றன.

நல்லாய் கண்டடியை இழக்கி இரண்டு வெய்யிலுக்கு வாடவிட்டு இறைத்தால் ஒரு மாதிரிக் கறுத்துக் குழைத்துவிடும். புல்லுக் கிண்டியால் கன்றடி களைக் கிண்டிக் கோரைக் கிழங்குகளை அகற்றிக் கொண்டிருக்கிறாள் பொன்னம்மா. புல்லுக்கிண்டி வேரைத்தாக்கினாற் கன்றுகள் வாடிவிடும். அதற்காக அவதானமாகத்தான் கிண்டிக்கொண்டிருக்கின்றாள். அருகிலிருந்த புலவுத் தரையில் கட்டியிருந்த பசுமாடு புல் மேய்ந்துவிட்டு அசை போட்டுக்கொண்டிருக்கின்றது.

அமைதி, தனிமை......

பொன்னம்மா தனக்குள்ளேயே சிரிக் கின்றாள்.... ஏன் அந்தச் சிரிப்பு வந்ததோ, அவள் சிரிப்பதை அந்தத் தோட்டத்தில் யாரும் கவனித்திருக்க முடியாது. ஒருவேளை அந்த மிளகாய்க் கன்றுகள் கண்டிருக்கலாம்.

மாலை வெய்யில் மங்கி எரிகின்றது. சிவப்பு, பச்சை, நீலம், நாவல், ஊதா, காவி இவ்வாறு பல வர்ணங்களைக் காட்டிப் பகலவன் தன் பயணத்தின் அனுபவிக்கின்றான்.

பொழுதுபடுவதற்கு முன் இந்தக் கீலத்தைக் கிண்டி முடிக்கவேண்டும். பொன்னம்மாவின் இதயத்து உந்தல் கைகளுக்கு வேகத்தையும் வலுவையும் கொடுக் கின்றது. பொன்னம்மா மளமளவென்று கன்றடிகளைக் கிண்டிக்கொண்டிருக்கின்றாள்.

கைமட்டும் கன்றடிகளைக் கிண்டுகிறது... இறுகிப்போய் இருக்கும் நிலத்தைக் கிண்டிவிட்டால் மிளகாய்க் கன்றுகள் கறுத்துச் சடைக்கும். இறுகிப் போய் இருக்கும் இதயத்தைக் கிண்டுவதால்...

வேலையை விரைவாக முடிக்க வேண்டுமென்ற உந்தலை முந்திக் கொண்டு.... பசுமாடு அசை போடுகின்றது.

இன்று காலை பருத்தித்துறைக் கோட்டுக்குப் போய்ப் படிக்காசை வாங்கிக்கொண்டு வரும்பொழுது...

கோடு, படிக்காசு இவையெல்லாம் பொன்னம்மாவுக்குப் பழகிப் போனவை.

ஆனால் இன்று...

அவளுக்கும் பிள்ளைக்குமாக நூறுரூபா படி தீர்ந்திருந்தது. பத்து மாதங்களாகக் கட்டாமற் தாக் காட்டித் திரிந்தவர். அரசாங்கத்திற்குப் பயந்து இன்று ஆயிரம் ரூபாவாகக் கட்டி இருக்கிறார்.

காசை வாங்கிக்கொண்டு பொன்னம்மா "பஸ்ராண்"டை நோக்கி வந்து கொண்டிருக்கிறாள். பிரக்கிராசிமாரின் கந்தோர்களைத் தாண்டிக் கொட்டடிப் பிள்ளையார் கோயிற்சந்தியை நெருங்கிக் கொண்டிருக் கிறாள்.

"இஞ்சார் உன்னைத்தான் இஞ்சாரப்பா" உன்னைத்தான், எனக்குப் பெரிய இடைஞ்சல், கஸ்ரம். உந்தக் காசிலை ஒரு ஐநூறு ரூபாவைத்தா நான் நெல்லு வெட்டி அடிச்சுப் போட்டு "மணிஓடரிலை" அனுப்பி விடுகிறன். கெஞ்சலாகக் கேட்கிறான்.

அவளுக்கு யார் கேட்பதென்பது தெரிகின்றது. ஆனால் அவள் திரும்பியே பார்க்கவில்லை!

"இஞ்சார், இஞ்சார்...."

அவள் வேகமாக நடக்கிறாள். அவள் தலையோ, கண்ணோ, உடலோ திரும்பிப் பார்க்க ஒருப்படவில்லை. ஆனால் - துன்பம், துயரம், விரக்தி இவையெல்லாம் பாட்டமாகப் பெய்து இறுகிப்போய் இருக்கும் இதயம் மட்டும் திரும்பிப் பார்க்கிறது. ஏதோ பிச்சை கேட்பதுபோலக் கைகளை நீட்டிக்கொண்டு அவன், பின்னே வருவது...

கண் மட்டும் ஓட்டைப் பட்டையாக ஒழுகிறது. அவள் திரும்பியே பார்க்கவில்லை.

பொன்னம்மா சாவகச்சேரி பஸ்ஸில் ஏறி விட்டாள். பஸ் புறப்படுகின்றது.

பொன்னம்மாவின் கண்கள் ஒருமுறை பஸ்ஸை வெள்ளாட்டு மேய்ச்சல் மேய்ந்து திரும்புகிறது.

ஒரு நிம்மதிப் பெருமூச்சு. பஸ்ஸின் கடமுடாச் சத்தத்தில் அவளின் பெருமூச்சு அவளுடனேயே உறவாடுகின்றது. அசை போட்ட மாடு எழுந்து மேயத் தொடங்குகிறது...

"சீ... ஒரு (500) ரூபாவைக் கொடுத்திருக்கலாம்.

ஏதோ பாவமாய்க் கிடக்கு…" அவளின் நினைவுத் திரையில் தாறுமாறாகச் சில கரிக்கோடுகள் கீறப் படுகின்றன. சுடலைச்சுவர், சுமைதாங்கி, கோயில்மடம் இவைகளில் மேலும் மேலும் கீறப்பட்டு, அழிந்தும் அழியாமலும், தெரிந்தும் தெரியாமலும் இருக்கும் கோடுகள் தாமா இவை?

"ஏதோ… இரக்க சிந்தையோ? வாழ்ந்து வாழ்வில் வசந்தத்தையே காணாத எனக்கா இரக்க சிந்தை வரவேண்டும்? இந்தத் தோட்டத்திலே தான் ஐஞ்சாறு வருடங்களுக்கு முன் வெங்காயப்பூ முறித்த அனுபவம். அந்த நினைவு ஆழமாக இருதயத்தில் அறையப் பட்டிருக்கின்றது. "அவர் வந்து எப்படி மண்டாடினார். ஒரு மைமலுக்கை…"

"பொன்னம்மா நீ என்னைத்தான் கலியாணம் செய்யவேண்டும் – ஓம் எண்டு சொல். நீ மறுத்தால் நான் வாழன். இந்த ஆடுகால் பூவரசிலை தூங்கிச் சாவன்."

நான் மௌனம் சாதிக்கிறேன்; ஒரு சில நிமிடம்.

"நீங்கள் ஏன் இந்தப் பட்டபொழுதுக்கை இதுக்கை வந்து நிக்கிறியள். ஆருங் கண்டால் என்ன நினைப்பினம்" எனது சம்மதத்தை இந்த வசனங்கள் அவருக்குக் கொடுத்தன.

தோளிலே மண்வெட்டி, அதிற் கொளுவியிருந்த பீலிப்பட்டையும் துலாக் கயிறும்…

"ஒரு 500 ரூபாவைக் கொடுத்திருக்கலாம்" இதயம் படம்போடுகின்றது.

மாலை வெய்யில் மாறி மாறி பல வர்ணங் களையும் காட்டிக் கொண்டிருக்கின்றது.

ஒரு நல்ல நாள்பெருநாள் என்று எனக்கு வேண்டாம் தன்ரை பிள்ளைக்கு ஒரு காற்சட்டை, சேட்டு வாங்கிக் குடாதவர்" அவளின் இதயம் இறுகுகின்றது….

கன்றடிகளை இழக்கிக்கொண்டிருக்கிறாள். சில இடங்கள் கலடாகி… கால் நடந்த இடம்… நல்லாய் இறுகி அவளின் கைகளைக் களைக்க வைக்கிறது.

"அவரைப் பாவமெண்டுதான் நானும் ஒப்புக் கொண்டனான். சிலவேளை ஆண்களே இப்படித் தானோ. முதல் நல்லாய் மண்டாடுவினம்…"

"சீ… அப்படியென்றால் செல்லாச்சியையும் சிவகுரு மண்டாடித்தானே முடிச்சவன். அவன், சாகிறன், மாயிறன் என்று நிண்டது எனக்கெல்லோ தெரியும். இப்ப அவளுக்கென்ன – முத்துப்போல மூன்று ஆம்பிளைப்பிள்ளையள், கமம், கார், உழவுமெசின்… இந்த அரிசி யாவாரத்தோடை லொறியும் வாங்கிப் போடுவினம்…"

"நான்… எங்கடை இவரை வைத்துக்கொண்டு எல்லோரையும் இப்படி எண்ணக்கூடாது."

மாலை வெய்யில் ஒரே நேரத்தில் பல வர்ணங்களைக் காட்டிக்கொண்டிருக்கின்றது.

"இவரும் சிலவேளை; நான் ஒரு 500 ரூபாவைக் கொடுத்திருந்தால்… என்னோடை உறவாகியும் இருப்பார். ஏன் எங்கடை தங்கமாக்கையும் பத்து வரியம் புருஷனோடை கோவிச்சுப் படிவழக்கும் வைச்சவ தானே. அதுக்குப்பிறகு ஒற்றுமையாகித்தானே உந்த இரண்டு பெடியனும் பிறந்தது.

கட்டுக் கொடியில் நின்று மேய்ந்த மாடு எட்டி மிளகாய்க் கன்றைக் கடிக்கின்றது.

"இவரிலை பிழையில்லை. தமக்கையும் தாயும் தான் இதுக்கெல்லாங் கால். வழக்குக்கு முந்தியும், இரண்டு மூண்டு முறை எத்தனை பேரிட்டைச் சொல்லி விட்டவர். வழக்கு வையாதை எண்டு."

"உப்பிடி வன்னி, கண்டியெண்டு போவமெண்டு கேட்டவர்தானே. அதுக்கு என்ரை அப்பு, ஆத்தையும் விட்டினமே."

"போனால் போகுதெண்டு 500 ரூபாவைக் கொடுத்திருக்கலாம். என்னத்தைச் செய்தாலும் கட்டின புருஷனல்லே."

மாலை வெய்யிலுக்காகத் தலையில் போட்டிருந்த தொங்கலை எடுத்து விடுகிறாள். கையும் நோகின்றது. நாரியும் உழையத் தொடங்குகிறது.

"ஆளும்பெருமாய்… எண்டால் இது பெரிய வேலையே – பொடியனும் படிக்கப்போட்டான்."

"கலியாணம் கட்டின வரியம் என்ன மாதிரித் தோட்டம் செய்தம். ஆளில்லாத் துன்பம் – இப்ப…. எங்கையோ வன்னிக் காட்டுக்கை அவர் தனியாப் பாடுபடுகிறார். இஞ்சை நான் தனிய முறியிறன்."

"எப்படியும் 500 ரூபாவைக் கொடுத்து ஆரிட்டை யெண்டாலும் அனுப்புவமோ…"

சபலம் பல பெறுகின்றது.

"அம்மோய்… அம்மோய்… பாடசாலை முடிந்து படிக்கப் போய் வீடுவந்த மகன் தாயைக் காணாததாற் தோட்டத்துக்கே தேடி வந்து விட்டான்."

"இஞ்சார் இதிலையெல்லாம் மிளகாய்க் கண்டுகளை மாடு கடித்துவிட்டது."

மிளகாய்க் கன்றுகளை ஆர்வமாகப் பார்க் கிறான்.

"அம்மா – ஐயா இண்டைக்குக் காசு கொண்டந்து கட்டினவரே. நான் "ரியூசன்" காசு நாளைக் குக் கொடுக்கவேணும்."

"இப்ப நான் படிச்சிட்டு வரயுக்கை நெல்லியடி யிலை ஐயாவைக் கண்டனான். என்னைக் கூப்பிட்டு, என்னோடை வாவன்ரா? எண்டு கேட்டார். நான் பேசாமல் நிண்டன்.

"ஓ… அவள் கொம்மா விடாள்" எண்டார்.


அவருக்குப் பக்கத்திலே ஒரு மனிசியும் நிண்டுது. என்னைக் காட்டி இது என்ரை முந்தின மனுசியின்ரை மோன் எண்டார். இது உன்ரை குஞ்சியம்மா. இவ வோடை கதையடா? என்றார். நான் ஒண்டும் கதைக்க யில்லை.

"பின்னை சொன்னார், அவள் கொம்மாவுக்குச் சொல்லு என்னையும் குஞ்சியம்மாவையும் கண்ட தெண்டு, இப்ப படம் பாத்துப் போட்டு விடியப்புறம் பஸ்ஸிலை போறமெண்டு சொல்லு"

பெடியன் சொல்லிக்கொண்டே போகிறான். புல்லுக்கிண்டியைப் பற்றிப் பிடித்து, ஒட்டிக் காய்ந்துபோய் இருந்த மண்ணை உரஞ்சிக் கொட்டியபடியே… "நீ மாட்டை அவிள், நாங்கள் போவம்" பொன்னம்மா ஒன்று மறியாதவள்போல் மகனைப் பாராமலே சொல்லுகிறாள். மாடுவீட்டை நோக்கி இழுக்கின்றது.

பலவர்ணங்களைக் காட்டி மகிழ்ந்த பகலவன் பனங்கூடலுக்குள் பதுங்குகிறான். உலகம்… மைம லாகிறது.

அ.பௌநந்தி



# இலங்கைத் தமிழ்க் கல்வி பற்றி வரலாற்றினை ஆழமாக ஆதாரங்களுடன் அலசும் "19ஆம் நூற்றாண்டு யாழ்ப்பாணத்துத் தமிழ்க்கல்வி"

## நுழைவு

இலங்கையின் பல்கலைக்கழகங்களில் காணப்படுகின்ற தமிழ்த்துறையின் தனித்துவ அடையாளங்களாக விளங்கியவர்கள் பலர் உளர். அவர்களின் வரிசையில் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா அவர்களும் தனக்கென ஒரு தனித்துவமான இடத்தைத் தக்கவைத்துள்ளார் என்று உறுதிபடக் கூறலாம். எண்பது வயதினை அண்மித்திருக்கின்ற பேராசிரியர் சிவலிங்கராஜா அவர்கள் வடமராட்சியிலுள்ள கரவெட்டியில் பிறந்தவர். கிராமப்புறத்தின் நறுந் துகள்கள் அவரின் பேச்சிலும் மூச்சிலும் ஒட்டியிருப்பதை அவரோடு நெருங்கிப் பழகிய கிராமத்தவர் பலரும் உணர்வர். கட்டைவேலி மெ.மி.த.க. பாடசாலை மற்றும் கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரி ஆகியவற்றில் தனது பாடசாலைக் கல்வியைப் பெற்றுக்கொண்டார். இரண்டு பாடசாலைகளும் கரவெட்டிப் பிரதேச மாணவர்களின் கல்வியில் செல்வாக்குச் செலுத்திய விதம் வெவ்வேறு விதமானவை. முன்னர் குறிப்பிட்ட பாடசாலை கிறிஸ்வதப் பாடசாலை. அப்பிரதேச மாணவர்களின் கல்வியில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக்கால மற்றும் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பகாலத் தசாப்தங்களில் அதிக செல்வாக்குச் செலுத்தியிருந்தது. அடுத்த பாடசாலை சைவப் பாரம்பரியத்தில் ஆங்கிலக் கல்வியியும் வழங்கப்பட வேண்டும் என்ற நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டு இருபதாம் நூற்றாண்டில் காத்திரமான பங்களிப்புச் செய்த பாடசாலை. இவற்றை இங்கு குறிப்பிடுவதற்கான காரணத்தையும் முன்வைக்க வேண்டியுள்ளது. "பத்தொன்பதாம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்துத் தமிழ்க்கல்வி" என்ற நூல் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா மற்றும் அவரது வாழ்க்கைத் துணைவியார் சரஸ்வதி சிவலிங்கராஜா ஆகியோரால் இணைந்து எழுதப்பட்டவை. பேராசிரியர் சிவலிங்கராஜா அவர்கள் ஆதாரங்கள் பலவற்றைத் தேடியறிந்ததோடு தனது முதனிலை அனுபவங்களின் திரட்சியுடனும் குறிப்பிட்ட நூலை எழுதியுள்ளார் என்பது இங்கு கவனிக்கப்பட வேண்டியது.

அத்தோடு பேராசிரியர் சிவலிங்கராஜா அவர்கள் கந்தமுருகேசனார், பண்டிதர் க.வீரகத்தி, ஏ.டி.சுப்பிரமணியம் ஆகிய ஜாம்பவான்களிடம் தமிழைக் கற்றவர். பின்னர் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர்களான க.கைலாசபதி, சு.வித்தியானந்தன், வி.செல்வநாயகம், கா.சிவத்தம்பி, ஆ.வேலுப்பிள்ளை அ.சண்முகதாஸ் போன்றோரிடம் கற்றவர். இக்கல்விப் பாரம்பரியங்களின் தொற்றலும் தொடர்ச்சியும் அவரது விரிவான தேடலுக்கும் புலமைத்துவத்துக்கும் பின்புலமாக அமைந்தன எனலாம். ஈழத்துக் கருணாநிதி என்று சொல்லப்படுமளவிற்கு சிறந்த பேச்சாளனாக, நடிகனாக, கவிஞனாக தன்னைப் பல்பரிமாணங்களில் அடையாளப்படுத்திக் கொண்டவர். அந்தவகையில் அவரது ஆய்வுப் பணிகளும் மிக முக்கியமானவை.

### பிரவேசம்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் யாழ்ப் பாணத்துத் தமிழ்க்கல்வி எனும் நூல் இரண்டு பதிப்பு களைக் கண்டுள்ளது. இரண்டு பதிப்புகளும் குமரன் புத்தக இல்லத்தின் பதிப்புகளாக வெளிவந்துள்ளன. முதலாவது பதிப்பு 2000 இலும் அடுத்த பதிப்பு 2008 இலுமாக வெளிவந்துள்ளன. நூலுக்கான அறிமுக முன்னுரையை பேராசிரியர் க.சிவத்தம்பி எழுதி யுள்ளமை இந்நூலுக்கான சிறப்பம்சங்களில் ஒன்று. மற்றையது பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா அவர்கள் தனது மானசீகக் குருவாகக் கருதுகின்ற பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களுக்கு மணிவிழா நினைவாக தனது குடும்பத்தின் சார்பில் நூலைச் சமர்ப்பணம் செய்துள்ளமை. பேராசிரியர் சண்முகதாஸ் அவர்களுக்கு எமது குடும்பத்தின் சார்பாக... என்று குறிப் பிட்டுள்ளமையிலிருந்து அவருடைய குருபக்தியையும் குடும்ப உறவுநிலையிலான அன்பின் வெளிப்பாட்டை யும் உணர முடிகின்றது. தமிழிலக்கிய வரலாற்றில் பத்தொன்பதாம் நூற்றாண்டு இலங்கைக்குரியது என்று தமிழக அறிஞர்களே குறிப்பிடுமளவிற்கு இங்கு இலக்கியப்பணி நடைபெற்றிருக்கிறது. அதற்கு அக்காலக் கல்விப் பாரம்பரியமும் வழிவகுத்துள்ளது என்று கொள்ளலாம். பேராசிரியர் அவர்கள் வட மராட்சிக் கல்விப் பாரம்பரியமும் இலக்கிய வளமும் பற்றி தனது இளமாணிப்பட்ட ஆய்வை மேற் கொண்டுள்ளார். அது பின்னர் ஆய்வுக் கட்டுரையாகச் சமர்ப்பிக்கப்பட்டு 1984 இல் வடமராட்சி கல்வி வட்டம் வெளியீடாக நூலாக வெளிவந்துள்ளது. இது தவிரவும் பல நூல்களை எழுதியுள்ளார். ஆனால் இங்கு அவரது பத்தொன்பதாம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்துத் தமிழ்க்கல்வி என்ற நூல் பற்றியே நோக்கப்படுகின்றது.

### நூலின் கட்டமைப்பு

அறிமுக முன்னுரை, பின்னிணைப்பு நீங்கலாக நூல் 7 பகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. முதலாவது பகுதி அறிமுகம். ஏனையவை யாழ்ப்பாணத்துத் தமிழ்க் கல்விப் பின்னணி பற்றியும் பத்தொன்பதாம் நூற்றாண்டு காலப் பகுதியின் யாழ்ப்பாணக் கல்வி மரபு, அக்காலப் பகுதியின் கலைத்திட்டம், அவை கற்பிக்கப்பட்ட முறைமை (கற்பித்தல் முறை), அக்காலத்து ஆசிரியர் - மாணவர் உறவுநிலை, அக்கல்வி மரபு ஏற்படுத்திய தாக்கம் என்பன பற்றி விளக்குகின்றது. பின்னிணைப்பில் 2ஆம் பாலபோதம் (1867) மூல நூலின் சில பக்கங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

தமிழிலக்கிய இலக்கணங்களை மட்டுமன்றி அவற்றைப் பயிற்றுமுறை தொடர்பான ஆழமான தேடலையும் அறிவையும் பேராசிரியர் கொண்டிருந்தார் என்பது நூலைக் கற்கும்போது தென்படும். அத்தோடு அவர் இலங்கைத் தமிழ் இலக்கியத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டு தொடர்பாக புலமைத்துவமுடையவர் என்பதும் வெளிப்படுகின்றது. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே ஈழத்துத் தமிழ்க் கல்விமரபு சிறப்புற்று விளங்கியிருந்திருக்க வேண்டும் என்பதை சங்காலத்துப் புலவர் ஈழத்துப் பூதன்தேவனார் ஈழத்தவர் என்று மெய்ப் பிக்கப்பட்டதை ஆதாரமாகக் கொண்டு முன்னெடுக் கிறார். அத்தோடு யாழ்ப்பாண மன்னர் காலத்திலும் ஈழத்தில் தமிழ்க் கல்விமரபு மிகச் சிறப்புற்றிருந்த தாலேயே மிகப் பெறுமதியான சோதிட, வைத்திய, வரலாற்று நூல்கள் தோற்றம் பெற்றுள்ளன என்பதை ஆதாரங்களோடு முன்வைத்துள்ளார். எனினும் யாழ்ப்பாண மன்னர் காலத்து கல்விப் பாரம்பரியம் அவர்களது வீழ்ச்சிக்குப் பின்னர் நலிவடைந்து சென்றிருந்தாலும் தொடர்ந்து மரபுவழிக் கல்விப் பாரம்பரியம் வலுவாகப் பேணப்பட்டு வந்த பிரதேசமாக யாழ்ப்பாணத்தை தரிசிக்க முடியும் என்றும் அவர் கருத்துரைக்கிறார். போத்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் காலத்திலும் யாழ்ப்பாணத்து கல்விப் பாரம்பரியம் மாறுதல்களை உள்வாங்கி நின்று நிலைத்தது என்பதையும் அவர் நிறுவுகின்றார். இங்கு மாறுதல்களை உள்வாங்கி குறிப்பிட்ட கல்விப் பாரம்பரியம் நிலைபெற்ற செய்தியை அவர் நிறுவு கின்றார். இக்காலப் பகுதியின் தமிழ்க் கல்விப் பாரம்பரியம் எவ்வாறு வளர்ச்சியுற்றிருந்தது என்பதற்கு அக்கால இலக்கியங்களும் இலக்கிய கர்த்தாக்களுமே சான்று என்பதை முன்வைத்துள்ளார்.

### பின்புலம்

யாழ்ப்பாணத்தின் சமூக, அரசியல், பொருளா தார வரலாற்றுக்கும் அதன் கல்விப் பாரம்பரியத்துக்கு மிடையில் நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது என்பது அவரது விளக்கம். குறிப்பாக பத்தொன்பதாம் நூற்றாண்டு யாழ்ப்பாணத்துத் தமிழ்க்கல்வி இத்தாக்கங்



பேராசிரியருடன் அ.பௌநந்தி மற்றும் கி.நடராசா

களுக்கு அப்பால் ஏற்படவில்லை என்று வியாக்கியானம் செய்கின்றார். தமிழ் நாட்டின் வித்துவச் செல்வாக்கோடு அங்கிருந்து வருகைதந்து யாழ்ப்பாணத்தில் கற்பித்த ஆசிரியர்களும் குறிப்பிட்டகால கல்வியில் மிகுந்த செல்வாக்கைச் செலுத்தியிருந்தினர். தமிழ்மொழி இலக்கியம், இலக்கணம், வைத்தியம், சோதிடம் முதலியன கற்பிக்கப்பட்டன என்றும் ஆரம்பகால கல்வி அரச ஆதரவுடனேயே முன்னெடுக்கப்பட்டது என்பதையும் அவர் நிறுவியுள்ளார். எனினும் யாழ்ப்பாண மன்னர் காலத்தில் பாடசாலைகள் நிறுவப்பட்டமைக்கான சான்றுகள் எவையும் இல்லை என்பதையும் அவர் வலியுறுத்தத் தவறவில்லை.



போத்துக்கேயர் காலத்தில் கிறிஸ்தவ மதத்தைப் பரப்பும் நோக்குடன் கல்வி முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன என்றும் மொழிக் கல்வியில் அக்கறை காட்டப்பட்டது என்றும் வலியுறுத்துகின்ற பேராசிரியர் போத்துக்கேயர்கள் தமிழைக் கற்பதில் ஆர்வம் காட்டியமையையும் அதற்கு மதம் பரப்பும் நோக்கமே அடிப்படையாக அமைந்தது என்பதையும் விளக்குகின்றார். வாய்மொழிக் கல்வி மரபே இக்காலப் பகுதியில் யாழ்ப்பாணக் கல்வி மரபாக முன்னெடுக்கப்பட்டது எனவும் உயர் கல்வியில் அக்கறை காட்டப்படவில்லை எனவும் வலியுறுத்துகின்றார்.

தொடர்ந்து ஒல்லாந்தர் காலக் கல்விமரபின் மாற்றங்களையும் அக்காலப் பகுதியில் தமிழ் நாட்டிலிருந்து தமிழ்க் கல்விமான்கள் யாழ்ப்பாணத்துக்கு வந்து சென்றமைக்கான ஆதாரங்கள் உள்ளன என்பதையும் வலியுறுத்துகின்றார். இக்காலப் பகுதியில் கல்வி யாழ்ப்பாணத்தில் மரபுவழிக் கல்வியோடு பாடசாலைக் கல்வியும் கலந்து முன்னெடுப்பட்டமையையும் அதன் விளைவுகளையும் அலசுகிறார். குரு சீட கல்வியோடு கோயிற்பற்றுப் பாடசாலைகளில் சென்று கற்க விரும்பம்கொண்ட கல்விச் சூழல் தோற்றம் பெற்றமை இக்காலப் பகுதியின் சிறப்பம்சமாகும்.

**19ஆம் நூற்றாண்டுக் கல்வியின் இருமரபு**

வரலாற்றுக்கு முற்பட்ட காலம், யாழ்ப்பாண மன்னர் காலம், போர்த்துக்கேயர் காலம் மற்றும் ஒல்லாந்தர் காலத்தில் காணப்பட்ட கல்விப் பாரம்பரியங்களின் பின்னணியில் 19ஆம் நூற்றாண்டு காலத்தில் யாழ்ப்பாணத் தமிழ்க் கல்விப் பாரம்பரியம் எவ்வாறு வளர்ச்சிபெற்றது என்பதை விலாவாரியாக விளக்குகின்றார். மரபுவழிக் கல்வி மற்றும் நிறுவனரீதியான கல்வி என இரண்டு தளங்களில் அது வளர்ச்சி பெற்றவாறு ஆழமாக நோக்கப்பட்டுள்ளது. தமிழ் மொழி ஆர்வலர்களுக்கு மட்டுமன்றி தமிழ் கற்றல் - கற்பித்தல் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்பவர்களுக்கும் வேண்டிய பல விடயங்கள் அவரது நூலில் பொதித்துள்ளன. மரபுவழியாக அல்லது குலவித்தையாக முன்னெடுக்கப்பட்ட கல்விப் பாரம்பரியத்தில் தகப்பன் அல்லது தாய்மாமன் முக்கிய குருவாக விளங்கினார் என்பதை வலியுறுத்துகின்றார். இதற்கு ஆதாரமாக சுன்னாகம் அ.குமாரசாமிப் புலவர், வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை, வித்துவசிரோமணி சி.கணேசையர் போன்றவர்களை இதற்கு ஆதாரமாக முன்வைக்கிறார். இந்த மரபுவழிக் கல்வியின் தொடர்ச்சியாகவே இன்றும் யாழ்ப்பாணத்தில் ஏடு தொடக்கல் நிகழ்வு நின்று நிலைத்துவிட்டது என்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளது. வேதனம் பெறாது, ஆசிரியரின் வீட்டைத் திண்ணைப் பள்ளிக்கூடமாகக் கொண்டு கற்கும் மரபும் யாழ்ப்பாணத்தில் பரவலாகக் காணப்பட்டுள்ளது. அதன் அமைப்பும் அங்கு ஆசிரியர் கற்பிக்கும் முறையும் பத்தொன்பதாம் நூற்றாண்டு யாழ்ப்பாணத்துத் தமிழ்க் கல்வி மரபின் தனித்துவ அடையாளங்கள் என்று வலியுறுத்துகின்றார். அக்காலத்தில் சமாந்தரமாக நிறுவனமயப்படுத்தப்பட்ட கல்வி காணப்பட்டாலும் கலைத் திட்டத்தாலும் கல்வியின் நோக்காலும் அவை வேறுபட்டிருந்தன. இருமரபும் பல இடங்களில் பொருந்தியும் முரணியும் முன்னெடுக்கப்பட்ட இரட்டைச் சூழ்நிலையை ஆதாரங்களுடன் முன்வைத்துச் செல்வது ஆய்வுநிலை நின்ற அணுகலை வெளிப்படுத்துகின்றது.

**இருதளக் கலைத்திட்டம்**

பத்தொன்பதாம் நூற்றாண்டு யாழ்ப்பாணத்துத் தமிழ்க்கல்வி முறையில் இரண்டு மரபுகள் காணப்பட்டுள்ளதோடு அவற்றுக்கென வெவ்வேறு வகையாக கலைத்திட்டங்களும் காணப்பட்டுள்ளன என்பதை பேராசிரியர் தெளிவுபடுத்துகின்றார். மரபுவழிக் கலைத்திட்டத்தில் நீதி நூல்கள் மற்றும் சமய நூல்களே ஆரம்ப வகுப்புகளில் கற்பிக்கப்பட்டன. ஔவை யாருடைய அற இலக்கியங்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருந்தன. அதன்பின்னர் தமிழ் இலக்கியம் மற்றும் இலக்கணம் கற்பிக்கப்பட்டதோடு செய்யுளைப் படிக்கவும் யாக்கவும் பயிற்சிகள் வழங்கப்பட்டிருந்தன. மனனம் செய்தலே அதிகளவில் இடம்பெற்றது என்கிறார். ஆனால் இக்காலத்து நிறுவன மயப்பட்ட கல்வியில் கலைத்திட்டம் ஆங்கிலத்தை மட்டும்

ஆங்கிலத்தையும் தமிழையும் போதிக்கும் நிறுவனங்கள் என இரண்டு வகை காணப்பட்டுள்ளன. தமிழ் இலக்கிய இலக்கணம், ஆங்கில இலக்கிய இலக்கணம், தமிழ் இலக்கியங்களை அச்சிடுதல், தமிழ் இலக்கியங்களுக்கு உரை எழுதுதல் ஆகியவையும் முன்னெடுக்கப்பட்டன.

**கற்பித்தல் முறைமையும் ஆசிரியர் -மாணவர் தொடர்பும்**

அறிவு விருத்தி, கிரகித்தல் திறன், மனனப் பயிற்சி, எழுத்துத் திறமை முதலியவற்றை விருத்தி செய்யும் வகையிலான கற்பித்தல் முறைகளின் மீதே அதிக கவனம் செலுத்தப்பட்டதாகப் பேராசிரியர் கூறுகின்றார். வாய்மொழிப் பயிற்சியே முதன்மையான கற்பித்தல் முறையாகப் பின்பற்றப்பட்டுள்ளது. ஒரு விடயத்தை மீண்டும் மீண்டும் செய்வித்தல், வாய்ப் பயிற்சி, செவிப்புலப் பயிற்சி, கட்புலப் பயிற்சி, கைப் பயிற்சி என்ற வகையில் மரபுவழிக் கற்பித்தல் முறையில் ஐம்பொறிகளுக்கும் பயிற்சி வழங்குவதில் கவன மெடுத்து ஐம்புலன் விருத்தியின் மீது யாழ்ப்பாணத்துத் தமிழ்க் கல்வியில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதென்பது அவரது ஆய்வுகளின் மூலம் நிறுவப்பட்டுள்ளது. சுய அனுபவங்களை மாணவர்கள் பெற்றுக் கொள்வதற்கான வழிகாட்டல்களை ஆசிரியர்கள் தமது நடத்தைகளின் மூலம் வெளிப்படுத்தினர். அதாவது ஆசிரியர்கள் தம்மை முன்மாதிரிகளாக (Rolemodel) தமிழ்மொழி கற்பித்தலில் பயன்படுத்தப்பட்ட நாநெகிழ் பயிற்சி, நாபிறழ் பயிற்சி போன்றவையும் பயன்படுத்தப் பட்டுள்ளன. அத்தோடு "சித்திரமும் கைப்பழக்கம்" என்பதற்கிணங்க பயிற்சிகள் வழங்கப்பட்டிருந்தன. இவர்களது மரபு ரீதியான கற்பித்தலில் வயது வேறு பாட்டுக்கு முதன்மையளிக்கப்படவில்லை எனினும் தராதரம் பார்த்துக் கற்பிக்கும் தன்மை காணப்பட்டது என்பதையும் சுட்டிக்காட்டத் தவறவில்லை. இது கட்டுரையாசிரியரின் நடுவுநிலைத் தன்மையை வெளிப் படுத்துகின்றது. ஆனாலும் பத்தொன்பதாம் நூற்றாண்டு யாழ்ப் பாணத்துத் தமிழ் கல்வி மரபில் நிறுவனமயப்படுத்தப்பட்ட கல்வி முறையிலான கற்பித்தலில் ஆறுமுக நாவலர் போன்றோர் புதுமைகளைப் புகுத்தவும் தவறவில்லை என்பதையும் அவர் வெளிப்படுத்தியுள்ளார். குறிப் பாக தமிழ்ப் போதனை முறைக்கு அப்பால் முறையான மதிப்பீட்டு முறை இக்காலக் கல்வி முறை யிலேயே அறிமுகப் படுத்தப்பட்டது என்ற அவருடைய கருத்து மிக வலிதுடையதாக அமைகின்றது.

இக்கால ஆசிரியர்களைப் பொறுத்தவரை வாத்தியார், சட்டம்பியார் என்று சொல்லப்படு மளவிற்கு அவர்களது நடத்தைகளும் செயற்பாடுகளும் காணப்பட்ட தோடு அவர்களை குறிப்பிட்ட சமூகமே பின்பற்றி நடக்கும் தன்மை காணப்பட்டுள்ளது. சமய, சமூக விழாக்களுக்கான பல பொறுப்புகளை, வழி காட்டல்களை முன்னெடுப்பவர்களாகவும் இவர்களே விளங்கியுள்ளர்.

குறிப்பாக ஆலய பரிபாலனங்களை செய்பவர் களாக முதன்மைபெற்றிருந்தனர் என்கிறார். ஆரம்ப காலத்தில் மாணவர்கள் ஆசிரியருக்கு காணிக்கை கொடுத்தாலும் அது அவரது வாழ்க்கையைக் கொண்டு நடாத்துவதற்குப் போதுமானதாக இருக்காமையால் மாணவர்கள் அவரது தொழிலுக்கு உதவுகின்ற வழக்கமும் காணப்பட்டுள்ளது.

ஆனால் அக் காலத்தின் பிற்பகுதியிலும் நிறுவன மயப்படுத்தப்பட்ட கல்வியிலும் ஆசிரியருக்கு கொடுப்பனவுகள் வழங்கப்பட்டிருந்தன என்பதை அவதானிக்க முடிகின்றது.


**நிறுவல்**

பத்தொன்பதாம் நூற்றாண்டில் யாழ்ப் பாணத்துத் தமிழ்க்கல்வி பற்றிய வேறு சில கட்டுரைகள் ஆங்காங்கே எழுதப்பட்டிருந்தாலும் தேடல், ஆய்வு ஆகிய அடிப்படையில் விரிந்த ஒரு நூலாக எழுதப் பட்டது பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா அவர் களுடையதே.

இலங்கையில் கல்வி வரலாறு பற்றிய நூல்கள் பல எழுதப்பட்டுள்ளன. குறிப்பாக சபா.ஜெயராசா அவர்களுடைய நூல் இவ்வகையில் முக்கியமானது. எனினும் அது முழு இலங்கையில் கல்வி வரலாற்றைக் கூறுகின்றது.

குறிப்பிட்ட ஒரு காலப் பகுதியின் கல்வி வரலாற்றை ஆழ அகல நோக்கிய வகையில், ஆதாரங்களோடு அனுபவத்தையும் சேர்த்து முன்வைத்த நிலையில் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா அவர்களின் நூல் கவனத்தைப் பெறுகின்றது.

கற்றல் - கற்பித்தலில் தனக்குள்ள அனுபவத்தையும் தேடலையும் உள்ளடக்கி இதனை எழுதியிருப்பது ஆய்வாளர்களுக்கு மட்டுமன்றி கற்பித்தலை குறிப்பாக தமிழ், சமயம் ஆகிய பாடங்களை முறையாக கற்பிக்க எத்தணிப்பவர் களுக்கும் இது ஏணிப்படியாக அமையும்.




அந்தவகையில் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா அவர்களின் "பத்தொன்பதாம் நூற்றாண்டு யாழ்ப் பாணத்துத் தமிழ்க்கல்வி" என்ற நூல் ஆசிரியர்கள், மாணவர், ஆய்வாளர்கள் என்று கல்விப்புலம் சார்ந்தவர்களுக்கும் மிகப் பயனுடைய நூல்.

அதன் முக்கியத்துவம் கருதியே அது இரண்டாவது பதிப்பையும் கண்டுள்ளது என்று துணிந்து கூறலாம்.

அண்மைக்கால யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளர்களில் ஈழத்து இலக்கியங்களின் பால் ஆர்வமும், ஆளுமையும் மிக்கவராகக் காணப்படுப்படுவர் கலாநிதி.எஸ்.சிவலிங்கராஜா அவர்கள். அவரது ஆய்வு நூல்களிற் பெரும்பாலானவை (ஈழத்து இலக்கியச் செல்நெறி. ஈழத்துத் தமிழ் உரை மரபு, பத்தொன்பதாம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்துத் தமிழ்க்கல்வி, மரபு, வடமராட்சிக் கல்விப் பாரம்பரியமும் இலக்கிய வளமும் போன்றவை ஈழத்து இலக்கிய வரலாறு தொடர்பானவையாகவே அமைந்துள்ளன. இந்த வரிசையில் புதியதொரு வரவாக, யாழ்ப்பாணப்பண்பாட்டின் பல்வேறு அம்சங்களையும் ஆராய்ந்து, நினைவூட்டி, அனுமானித்து, அகழ்ந்து எடுத்துத்தரும் நூலான அவரது "யாழ்ப்பாணத்து வாழ்வியற் கோலங்கள்" வெளிவந்துள்ளது.

117 பக்கங்களைக் கொண்ட இந்நூல், "யாழ்ப்பாணச் சமூகம் – கனகிபுராணம் முதல் கானல் நாவல் வரை", "யாழ்ப்பாணத்தில் எழுந்த கும்மிப் பாடல்கள்", "யாழ்ப்பாணத்துக் குழந்தைப் பாடல்கள்", "யாழ்ப்பாணத்து ஒப்பாரிப்பாடல்கள்", "யாழ்ப்பாணத்தில் மரபு வழிச்சீர்மியம்", "யாழ்ப்பாணத்திற் புகைப்படக்கலை" முதலிய 13 கட்டுரைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அட்டையில் யாழ்ப்பாணத்தவரின் தனித்துவமான கிடுகுவேலியின் படமும் அதனூடு கூர்மையாக நோக்கும் ஆசிரியரின் படமும் இடம்பெற்றுள்ளன.

இவற்றுள் "யாழ்ப்பாண சமூகம் – கனகிபுராணம் முதல் கானல் நாவல் வரை" என்னும் முதலாவது கட்டுரை கந்தபுராண கலாசாரம் நிலவிய யாழ்ப்பாணத்தின் இன்னொரு பக்கத்தை எவ்வாறு கனகி புராணம் முதலிய இலக்கியங்கள் எடுத்துக்காட்டின என்பதைத் தெளிவு படுத்துகிறது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் யாழ்ப்பாணத்தவர் மேலைநாடுகளுக்குப் பட்டம் பெறச் சென்று மேலைத்தேயப்

# யாழ்ப்பாணத்துப் பண்பாட்டம்சங்களை அகழ்ந்து எடுத்துத்தரும் "யாழ்ப்பாணத்து வாழ்வியற் கோலங்கள்"

ம.பா.மகாலிங்கசிவம்



பெண்களைத் திருமணம் செய்து வந்தமை, தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்த்தவர்கள் ஆங்கிலக் கல்வியினால் உயர் நிலை அடைந்தமை என்பவற்றுக்கு எதிரான இலக்கியக்குரல்கள், கிறிஸ்தவ மிஷனரிமாரும் உயர்சாதியினர் சார்ந்தே செயற்பட வேண்டியிருந்தமை. கனகியுடன் தொடர்புடைய உயர்குழாத்தினர் பற்றி வெளிவந்த செவிவழிக் கதைகள் தொடர்பான வெளிப்படையான, குறிப்பான செய்திகள் என்பவற்றைக் கொண்டதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

அடுத்த, யாழ்ப்பாணத்துக் குழந்தைப் பாடல்கள் பற்றிய கட்டுரை ஆய்வாளர்கள் தொடக்கம் சிறுகுழந்தைகள் வரை பயனளிக்கக்கூடியதாக உள்ளது. யாழ்ப்பாணத்துக் குழந்தைப் பாடல்கள் என்ற தலைப்பில் இருந்தாலும் ஈழத்துக் குழந்தைப் பாடலின் வரலாற்றை இக்கட்டுரை ஓரளவு முழுமையாக ஆராய்கிறது. தமிழ்க் குழந்தைகள் விளையாட்டுப் பாடல்கள் முதலிய நாட்டார் பாடல்களை முற்றாக மறந்து விட்ட சூழலில் அவர்களுக்கும், அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கப் பெற்றோருக்கும் உதவுவனவாக இக்கட்டுரையில் முழுமையாக எடுத்தாளப்பட்டுள்ள பாடல்கள் அமையும்.

யாழ்ப்பாணத்து ஒப்பாரிப்பாடல்கள் என்னும் கட்டுரை, யாழ்ப்பாணத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் வெவ்வேறு வகையாக ஏற்பட்ட மரணங்கள் குறித்து பாடப்படும் ஒப்பாரிப் பாடல்களைத் தருவதோடு அப் பாடல்களின் பின்னணியாக அமைந்த செய்திகளையும் தெளிவுபடுத்துகிறது. உதாரணமாக


“சொருகிவைச்ச ஒப்பையெல்லாம்
இப்ப
சோறள்ள வந்ததெணை
போட்டுடைத்த கோழிமுட்டை
இப்ப
போர்ச்சாவல் ஆச்சுதணை” என்னும் பாட

லுக்கு “தமது குடும்பத்திலே ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த உறவினர் பின்னர் சாவீட்டிலே வந்து மேலாதிக்கம் செலுத்துவதைப் பொறுக்காத ஒரு பெண்” வைக்கும் ஒப்பாரி என ஆசிரியர் விளக்கம் தருகிறார். (பக்கம் 41)

இந்நூலில் இறுதியாக அமையும் “யாழ்ப் பாணத்துப் புகைப்படக்கலை” என்னும் கட்டுரை இது வரை கலை இலக்கிய விமர்சகர்களாலும், வரலாற்றா



பேராசிரியருடன்பீ ராசிரியர் க. விசாகரூபன்




சிரியர்களாலும் கவனிக்கப்படாதிருந்த கலை வடிவம் ஆகிய புகைப்படக்கலையை வரலாற்று ரீதியாக ஆராய்வதுடன், நூலாசிரியரின் நவீனத்துவ சிந்தனையையும் புலப்படுத்துகிறது. புகைப்படக் கலை யாழ்ப்பாணத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் வாழ்ந்த தமிழறிஞர்களுடைய புகைப்படங்கள் கூட கிடைக்காமற் போனதற்கு “புகைப்படக் கருவி ஆட்களை, உயிரை இழுத்தெடுக்கும் தன்மை வாய்ந்தது என்றும், படம்பிடித்தால் ஆயுள்குறையுமென்றும், அமெரிக்க மிஷனரிமார் யாழ்ப்பாணத் தமிழர்களின் ஆயுளைக் குறைக்க ஒரு “சூத்திரத்தை அறிமுகப் படுத்தியுள்ளார்கள் என்றும் அக்காலத்திலே பரவலாகப் பேசப்பட்டமையே” காரணம் எனக் குறிப்பிடுவது ஒரு புதிய செய்தியாகும்.


அடுத்து “யாழ்ப்பாணத்தில் ஔவையாரின் கல்வியொழுக்கம்” என்னும் கட்டுரை ஈழத்துக் கல்வி மரபின் பெருமையை எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. தமிழக அறிஞர்களான மு.வரதராசன், ஔவை, சு.துரைசாமிப்பிள்ளை, ம.பொ.சிவஞானம் போன்றவர்கள் கல்வி ஒழுக்கம் என்னும் நூல் தமிழகத் தில் அழிந்து போய்விட்டது என்றே முடிவு செய்துள்ள னர். ஆனால் ஈழத்திலோ *1926*இல் முதலாம் பதிப்பாக வும், *1968*இல் *2*ம் பதிப்பாகவும் இந்நூல் வெளிவந்துள்ள நிலை எடுத்துக்காட்டப்பட்டு ஈழத்தின் பெருமை பேசப் படுகிறது. இதனுடன் தமிழகப் பதிப்பாசிரியருள் முதன்மையானவரான உ.வே.சாமிநாதையர் போன்றே சிலப்பதிகாரமா? சிறப்பதிகாரமா? என்று சிலப்பதிகாரத் தின் பெயரே தெரியாமல் தடுமாறிக் கொண்டிருந்த வேளையில் ஈழத்தில் வாழ்ந்த சாதாரணமானவர்களும் சிலப்பதிகாரத்தை நன்கறிந்திருந்த நிலையைப் பற்றிய பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் கருத்துக்களை யும் இணைத்து நோக்கினால் ஈழத்துக் கல்வி மரபின் பெருமையை நன்கு அறிந்து கொள்ளலாம்.

எனவே மேலைநாட்டு மோகத்திலும், சினிமாக் கலாசாரத்திலும் மூழ்கித் தமது பாரம்பரியமான பண்பாட்டம்சங்களை மறந்து போய்க் கொண்டிருக்கும் இன்றைய ஈழத்தமிழர்கள் அனைவருமே படிக்க வேண்டியதொரு சிறந்த நூலாக “யாழ்ப்பாணத்து வாழ்வியற் கோலங்கள்” விளங்குகிறது என்றால் அது மிகையில்லை.

# வடமராட்சியின் கல்விப் பாரம்பரியமும் இலக்கிய வளமும் குறித்த முகிழ்நிலை ஆய்வு நூல்


■ இ.சு.முரளிதரன்

அங்கதச் சுவையால் அவையைக் கலகலப்பாக்கும் வித்தை அறிந்தவராகவும், இரசனை முறைத் திறனாய்வோடு கற்பிக்கும் விற்பன்னராகவும், நாட்டாரியற் கூறுகளைக் குறித்த தகவற் களஞ்சியமாகவும், மரபுவழி இலக்கியங்களின் நயத்தைக் காதுகளில் தேனாறாகப் பாய வைக்கும் நிபுணத்துவம் அறிந்தவராகவும் பேராசான் எஸ்.சிவலிங்கராஜா திகழ்கின்றார்



அங்கதச் சுவையால் அவையைக் கலகலப்பாக்கும் வித்தை அறிந்தவராகவும், இரசனை முறைத் திறனாய்வோடு கற்பிக்கும் விற்பன்னராகவும், நாட்டாரியற் கூறுகளைக் குறித்த தகவற் களஞ்சியமாகவும், மரபுவழி இலக்கியங்களின் நயத்தைக் காதுகளில் தேனாறாகப் பாய வைக்கும் நிபுணத்துவம் அறிந்தவராகவும் பேராசான் எஸ்.சிவலிங்கராஜா திகழ்கின்றார். நவீன இலக்கியங்களில் பரிச்சமில்லாதவர் என அவையடக்கத்தோடு தன்னை வெளிப்படையாக இனங்காட்டத் தயங்காதவர். எனினும் நவீன இலக்கியங்களையும் விருப்போடு வாசிப்பார். இருண்மை சுவறிய படைப்புகளை தயக்கமின்றி நிராகரித்து விடுவார். இவரோடு பேசிக் கொண்டிருந்தால் சிரித்துச் சிரித்து ஆயுள் அதிகரிக்கும். கேட்ட தமிழிலிருந்த கேட்ட தமிழ் வரைக்கும் நாட்டத்தோடு பேசுவார். அதாவது கெட்ட வார்த்தையாக இருப்பினும், சிலேடையோ நயமோ பொதிந்திருப்பின் புளங்காகிதத்தோடு முன் வைப்பார். ஒற்றைக் கொம்பு இரட்டைக் கொம்பாகும் நகைச்சுவை; சிலை திறப்பு சேலை திறப்பெனத் தவறுதலாக அச்சான கதை அரசன் (கோ) வியப்படைந்த மகன்; கோவலன் - கேவலனாகும் கதை என்று ஏராளமான "சரக்கு" அவர் வசம் இருப்பதால் மாணவ குழாமொன்று பூவைச் சுற்றும் வண்டுகள் போல அவரைச் சுற்றியிருக்கும். எனினும் பெண்கள் இருக்கும் சூழலில் "வண்ணக் கிளிமொழியார் எல்லோரும் வந்தாரா? என்று அதியுச்ச நாகரிகத்தோடு உரையாடுவார். பேராசான் சிவலிங்கராஜா அவர்களை வெறுக்கின்ற மனிதர் ஒருவரேனும் இந்தப் பூமியில் இன்றுவரை பிறந்ததில்லை. அனைவராலும் நேசிக்கப்பட்டுகின்ற உயர்ந்த உள்ளங்கொண்டவர். "ஏர் பூட்டிப் பிழைத்திடலாம் குடத்தனைய புத்தூரோ கரம் பொன்னோ குடாரப்பு" என்ற எனது "ஊர்க்காதல்" நாமாந்தரிகையில் இடம் பெற்ற வரிகளை நயந்து பாராட்டியமை இன்றும் பசுமையான நினைவாக நிழலாடுகிறது. பேராசானோடு இணைந்து DAN தமிழ் ஒளி தொலைக்காட்சியில் "நல்ல தமிழ் பேசுவோம்" நிகழ்ச்சியில் தொடர்ச்சியாகப் பங்கேற்று வருகிறேன்.

பல்கலைக்கழகத்தின் இறுதி ஆண்டுத்தேர்வினை நிறைவு செய்யும் நோக்கிலே எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரையானது, 1984 இல்




சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தில் அச்சிட்டப்பட்டு "வடமராட்சியின் கல்விப் பாரம்பரியமும் இலக்கிய வளமும்" என்ற தலைப்பிலே நூலாக வெளிவந்துள்ளது. சகலரும் வாசிக்க வேண்டிய தகுதிப்பாட்டினைக் கொண்டமைந்த நூலாகும். பல்வேறு புதுமையான செய்திகளை உள்ளடக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. பாரதியார் கொண்டாடிய யாழ்ப்பாணத்துச் சுவாமி வடமராட்சியைச் சேர்ந்தவர்; வல்லை வெளிக்கு அருகேயுள்ள கண்டற்காடுகளில் புலிகளும், மான்களும் வசித்துள்ளன. ஈ.வோ.ரா அவர்கள் நெல்லியடிக்கு வந்து கூட்டம் நடத்திக் கல்லெறி வாங்கியுள்ளார்; இவ்வாறான பல்வேறு தகவல்கள் நூலின் உள்ளே புதைந்துள்ளன. "வடமராட்சிப் பாரம்பரியம் தெளிவு பெற்றால், அதைக் கண்டறிப் பயன்படுத்தி, யாழ்ப்பாணக் குடாநாட்டின் பிற பகுதிப் பாரம்பரியங்களை ஆராய்ந்து காணலாம். இலங்கைத் தமிழ் இனத்தின் பாரம்பரியத்தை ஆராய்ந்து காண யாழ்ப்பாணக் குடா நாட்டுப் பாரம்பரியம் பற்றிய ஆராய்ச்சி உதவும் என்பது சொல்லித் தெரிய வேண்டிய தில்லை" என அணிந்துரையிலே பேரா.ஆ.வேலுப் பிள்ளை குறிப்பிடுவது மிக முக்கியமான கருத்தாகக் கொள்ளத்தக்கது.

இச்சிறு நூலானது நான்கு இயல்களைக் கொண்டமைந்துள்ளது. முதலாவது இயலிலே வடமராட்சியின் அமைவிடம் பதிவு செய்யப்பட்டுள்ளது. புவியியல் குறித்த பதிவில் உப்பு விளைவித்தல், அலம்பற்காடுகள் போன்ற "காணாமற்போன" பல விடயங்களை இனங்காண முடிகின்றது. வடமராட்சி என்ற சொற்பிரயோகத்தின் ஆதி மூலத்தையும் அலசியுள்ளார். தொழில் சார்ந்தும் சாதியடுக்குகள் சார்ந்து சுட்டிக் காட்டுகின்றார். குறுக்குக் கட்டுப் பெண்களோடு, வடமராட்சியின் வட்டார வழக்குகளும் இனங்காட்டபட்டுள்ளன. மூடல், மள்ளாக்கொட்டை, அயத்துப் போனேன், இணல், நாறல் எனப் பிரதேச வழக்காற்றினையும் துல்லியமாக இனங்காட்டியுள்ளார்.

இரண்டாவது இயலில் வாய்மொழிப் பாரம்பரியம் குறித்துப் பேசுகின்றார். நாட்டார் பாடல்கள், கூத்து, சிறு தெய்வ வழிபாடு என்பன பதிவாகியுள்ளன. மருத்துவிச்சிப் பாடல், மீனவர் பாடல், சிறுவர் பாடல், ஒப்பாரிப்பாடல் என்பன தக்க உதாரணத்தோடு இடம் பெற்றுள்ளன. கூத்துமரபு பற்றி ஆச்சரியமான விடயங்களை இனங்காட்டியுள்ளார். நெல்லண்டை பத்திரகாளி கோயிலில் ஒரு மாதத்தில் 15 தொடக்கம் 20 வரையான கூத்துகள் பெற்ற தகவல் வியப்பூட்டுகின்றது. மேலும் அத்துளு, அல்வாய் முத்துமாரி அம்மன் போன்ற ஆலயங்களிலும் கூத்துகள் இடம் பெற்றமையும் நேர்த்திக் கடன்களுக்காக நடத்தப்பட்டமையும் பதிவாகி யுள்ளது. ஐயனார், அண்ணமார், பணிக்கர், காளி, கொத்தி முதலான சிறுதெய்வ வழிபாடுகள் குறித்தும் ஆராய்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இயல் மூன்றானது எழுத்தறிவுப் பாரம்பரியம் குறித்துப் பேசுகின்றது. திண்ணைக் கல்வி முறை, பெண்கல்வி, நிறுவன ரீதியான கல்விமுறை, கழகங்களின் செயற்பாடு, அச்சுக் கூடங்கள், பத்திரிகைகள், சரமகவிகள், இலக்கண மரபு, அகராதி முயற்சி, புராணபடன மரபு எனப் பல்வேறு விடங்களைப் பதிவு செய்துள்ளது. தேவரையாளி இந்துக்கல்லூரியின் தோற்றமும் பின்புலமும் உரிய வகையிலே ஆய்வுக் குள்ளாகியுள்ளன. சனசமூக நிலையம், கிராம முன்னேற்றச் சங்கம், வாசிகசாலை என்பவற்றின் சமூகப் பெறுமானத்தை துல்லியமாக இனங்காட்டு கின்றார். மேலும் வாணிகலைக் கழகத்தின் செயற்பாடு கள் சிலாகிக்கப்பட்டுள்ளன. சைவாபிமானி, ஞானசித்தி, சைவபோதினி, கண்கள், சிரித்திரன் போன்ற பத்திரிகை கள் குறித்து ஆராய்ந்துள்ளார். சவாரித் தம்பரின் தோற்றுவாய் நயமான விடயங்களோடு அலசப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இலக்கண மரபினைக் குறித்துப்பேசும் போது பல்வேறு ஆளுமையாளர்களை இனங்காட்டுகின்றார்.

இறுதியானது பிரதேசங்களோடான ஒப்பீட்டு ஆய்வாக அமைந்துள்ளது. "கரவை வேலன் கோவை"" குறித்த விடயங்கள் விஞ்ஞானி கந்தையா, ஈழத்தின் முதற் கலாநிதி பேரா.கணபதிப்பிள்ளை போன்றோரைப் பற்றிப் பேசி நூலை நிறைவு செய்துள்ளார். பின்னிணைப்பில் ஆளுமையாளர்கள் பற்றிய குறிப்பு இடம் பெற்றுள்ளது. இறுதியாண்டு கல்வியை நிறைவு செய்ய எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரையொன்று இவ்வளவு கனதியோடு அமைந்திருப்பது வியப்பிற் குரியது. பேராசான் எஸ்.சிவலிங்கராஜா அவர்கள் வடமராட்சி மக்களுக்கும் தமிழுக்கும் செய்த இந்த அரும்பணி போற்றற்குரியதாகும்.

கலாநிதி தி. செல்வமனோகரன்



# பல்கலைக்கழகத்துக்குள் ஒரு புதிய "பண்டிதமணி": "வித்துவசிரோமணி கணேசையர் வாழ்க்கையும் பணியும்" பற்றிய குறிப்பு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப் பட்ட காலத்தில் தமிழ்த்துறை மார்க்ஸிய சிந்தனை யாளர்களாலும், நவீன கல்வியாளர்களாலும் நிறைந் திருந்தது. மரபுவழி நின்று விடுபட்ட மனோபாவம் அங்கு காணப்பட்டது. அத்துறையில் கற்று முதற்பிரிவில் சித்தியெய்திய ஒரு மாணவர், விரிவுரையாளர் தெரிவுக்குச் சென்றிருந்தார். தேர்வாளர்களில் ஒருவர் "இவன் ஒரு பண்டிதமணி" என்றார். அதற்கு பேராசிரியர் கைலாசபதி எங்கள் துறை பூரணத்துவமுற ஒரு பண்டிதமணியே வேண்டும் என்றார். அவரே ஓய்வுநிலைப் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா.

ஈழத்துத் தமிழ் இலக்கியத்திலும் மரபுவழிப் பழந்தமிழ் இலக்கியத்திலும் நிறைந்த தாடணமுடைய சிவலிங்கராஜா அவர்கள், ஈழத்து நாட்டாரியல் கதை சொல்லிகளில் தலைசிறந்தவருமாவார். அதேவேளை நவீனத்துவ வாசிப்பும் ரசனையும் அவருக்கு உண்டு என்பதும் குறிப்பிடத்தக்கது. அவரது மனனமும் ஞாபகசக்தியும் தலைமுறை இடைவெளி தாண்டிய கற்றலும் அன்பும் நான் கண்டு வியந்தவை. சொற்களில் – சொற்களால் வாழும் அரிய உயிரி கேட்பவர் சலிக்காது உரைத்துக் கொண்டே இருப்பவர் அவர் உரைப்பவை செவிநுகர் கனிகள்.

பன்முக ஆளுமை நிறைந்த பேராசிரியர், எழுதிய முக்கிய நூல்களுள் ஒன்றாக "வித்துவ சிரோமணி கணேசையரின் வாழ்க்கையும் பணியும்" எனும் நூல் அமைந்துள்ளது. யாழ்ப்பாணப்பல்கலைக் கழக வெளியீடாக வந்த இந்நூல் பல்கலைக்கழக மட்டத்தில் கணேசையர் பற்றி நிகழ்த்தப்பட்ட முக்கிய ஆய்வு ஆகும். பெரும்பாலான "ஆளுமைகள்" பற்றிய நூல்கள் அவர்களது வாழ்க்கை வரலாற்றையும் எழுதிய நூல்களைப் பட்டியல்படுத்துவதையும் அடிப்படையாகக் கொண்டவை. ஆனால் இந்நூல் கணேசையரின் வரலாற்றோடு அவரது பணிகள், உரையாசிரியர், இலக் கணப் பேறறிஞர், கட்டுரையாளர், பாடபேத ஆய்வாளர், விவாத அறிஞர், கவிபாடும் புலமைமிக்கோன், போதனாசிரியர், பன்முகப் பணிகள் என்பவற்றோடு அவரது மாணாக்கர் பரம்பரை பற்றியும் ஆராய்கிறது. உசாத்துணை நூல்களொடு கணேசையர் எழுதிய கட்டுரைகளின் விபரத்தையும் கொண்டமைந் துள்ளது.

தமிழியலில் கணேசையரின் முக்கியத்துவத்தை ஆராயும் இந்நூல், தொல்காப்பியத்தோடு தன் வாழ்வின் பெருங்காலத்தை செலவு செய்த ஐயரின் நுண்ணாய்வுத் திறன், உரைத்திறன், பன்னூல் பரிச்சயம், நுண்மான் நுழைபுலம் புகுந்திறன் எனப் பன்மைத்துவப் புலமையை சான்றுகளுடன் வெளிக்காட்டி நிற்கின்றது. ஈழத்து புலமைத்துவ வரலாற்றில் கணேசையர் இடத்தை மதிப்பிடுவதோடு அவரது காலத்தில் தமிழ்ச்சமூகத் தினது அசைவியக்கத்தினையும் தமிழ் இலக்கண இலக்கிய பயில்நிலைகளையும் இந்நூல் வெளிப்படுத்து கின்றது. தமிழகத்துடனான தொடர்பு, செந்தமிழ் பத்திரிகை, ஆய்வுலக விவாதங்கள், பாடபேதங்கள் மரபு வழிக்கல்வி, நவீன கல்வி, கணேசையருக்குப் பின்னான பண்டிதமரபு புலமைச் சூழல் என நூற்றாண்டு கால இயங்கியல் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.

கணேசையரின், ஆக்க இலக்கியப்புலமையை அவரது செய்யுள்கள், உரைநடை நூல்களின் வழி ஆதாரங்களுடன் வெளிப்படுத்துகின்றார். "கவிபாடும் புலமை மிக்கோன்" என கணேசையரை சுன்னாகம் அ.குமாரசாமிப்புலவர் பாராட்டிய செய்யுள் வரியை தலைப்பாக இடுகிறார். ஐயரின் திருச்செல்வச் சந்நிதி நான்மணிமாலை, புன்னை மும்மணிமாலை, வருத் தலைவிளான் பிடாரத்தனை கண்ணகை அம்மன்

ஊஞ்சல், மேலைக்கரம்பொன் சண்முகநாதன் திரு விரட்டை மணிமாலை முதலான செய்யுள் இலக்கியங்கள், செய்யுள் இலக்கணக்காரர் பேசும் பத்து இலட்சணங்களும் பொருந்தியிருப்பதனைத் தெளி வுறுத்துகிறார் பேராசிரியர். சொற்செட்டும் பொருட் செறிவும் அணியிலக்கணங்களும் பொருந்திய இப்பிரபந்தங்கள் ஐயரின் ஆக்க இலக்கியப் புலமைக்குச் சான்றுகளாகின்றன.

மொழிப்பற்றோடு கணேசையரின் சமயப் பற்றையும் மருதடி விநாயகர் மீதிருந்த பக்தியையும் சூசகமாக வெளிப்படுத்துகிறார் பேராசிரியர். மருதடி விநாயகனுக்காகப் பலபேர் பலகாலங்களில் பல தீர்த்தக் கிணறுகள் தோண்டுவித்தும் நீரூற்றைக் காணவில்லை. ஆனால் ஐயர்,


“ஆட்டாதே எங்கள் அரனார் திருமகனே
கோட்டாலே குந்தியிந்தக் கூபமதை நாட்டிடுவாய்
மாமருதி லீசா மதமா முகத்தோனே
காமுறுவேற் குள்ளம் கனிந்து”

எனப்பாடி மனைவியார் ஞாபகார்த்தமாகக் கிணறு தோண்டுவித்தார் எனவும் அது தண்ணீரூற்று நிறைந் திருக்கக் கண்டு மகிழ்ந்தார் எனவும் இலக்கண வித்த கரை மேற்கோட்காட்டி உரைத்துள்ளார் பேராசிரியர்.

ஈழத்துத் தமிழ்க்கவிதை வரலாற்றில் பொது வான ஓட்டம் திசை திரும்பிய காலப்பகுதியில் வாழ்ந்த போதும் ஐயர் அவற்றின் பால் ஈடுபாடுகொள்ளாததை பேராசிரியர் சுட்டிக்காட்டுகிறார். பாரதியின் ஓட்டத்துக் குச் சமமாக பாவலர் துரையப்பாபிள்ளை இயங்கத் தொடங்கிய “எளியபதம், எளியநடை, சுவைபுதிது“ எனப் “புது ஓட்டம்” ஓடியபோதும் ஐயர் மரபுவழித் தமிழறிஞ ராயும் இலக்கண வித்தகராகவும், ஆராய்ச்சியாளருமாக வாழ்ந்தார். பழமையின் உள்ளூரத்தோடே அவரது அனைத்துப்பணிகளும் நிகழ்ந்துள்ளன என்பதைப் பேராசிரியர் சுட்டுகிறார்.

வித்துவசிரோமணி கணேசையரின் வாழ்க்கை யும் பணியும் எனும் பேராசிரியர். எஸ். சிவலிங்க ராஜாவின் இந்நூல் பின்வரும் விடயங்களை ஆராய்ச்சியின் வழி முன்வைக்கின்றது.

1. தமிழின் பல்வேறு துறை களிலும் தமது ஆற்றலை யும் ஆளுமையையும் ஆழமாகப் பதித்தவர் கணேசையர்.
2. ஐயரின் வாழ்வும் பணியும் அக் கால கட்டத்தின் கல்வி, இலக்கியப் புலமை என்ப வற்றின் வரலாறாக அமைகின்றது.
3. தனது உரைநடையை இடத்திற்கேற்ற வகையில் பொருத்தமான வகையில் கையாண்டார். காலத்துக் கேற்ற “நடை“ உடைய வராயும் பண்டைய உரையாசிரியர் மரபை மீறாமலும் பன்முகத்தன்மையான உரை நடையுடையவராகவும் விளங்குகின்றார்.
4. தொல்காப்பிய இலக்கண ஆய்விலேயே தன் பெரும்பொழுதுகளைச் செலவிட்டு ஈழநாட்டின் தமிழப் புலமைக்கும் கல்விப் பாரம்பரியத்திற்கும் பெருமை தேடித் தந்தவர்.
5. இவரது கட்டுரைகள் பன்முகத்தன்மை வாய்ந்தவை. அவை ஆராய்ச்சிக் கட்டுரை களாக, ஆராய்ச்சிக்கு வழிகாட்டும் கட்டுரை களாக, விவரணங்களாக, பன்முகச் சிந் தனைகள் சுவறியவையாக அமைந் துள்ளன.
6. மூலபாடத் திறனாய்வில் அதிதீரர் ஐயர், தக்க எடுத்துக்காட்டுக்களுடன் ஆதாரங் களுடன் மூலபாடத்தை விளக்கும் திறன் மிகுந்தவர்: தொல்காப்பியப் பதிப்புக்கள் செம்பதிப்புக்கள், பாடபேத ஆய்வுக் கட்டுரைகள் அவரின் புலமைக்குத் தக்க சான்றுகளாகின்றன. இலக்கண விவாதங் களோ தர்க்கபூர்வமானவை.
7. அவரது செய்யுள்களும், செய்யுள் பாடாந் தரங்களும் அவரது இலக்கியப் புலமையை வெளிப்படுத்துவன. தான் கற்றதை, சிந்தித் ததை தர்க்கபூர்வமாக, நயம்பட, சுருக்கமாக சிறப்புற எழுதவும் எடுத்தியம்பவும் தெரிந்தவர்.
8. நல்லாசிரியர் தனக்குப்பின் தமிழ்ப்பணி புரியத்தக்க நன்மாணாக்கரை உருவாக்கித் தந்தவர் சொல்லுக்கும் செயலுக்கும் வெளி யற்று ஒழுக்கசீலராக, பக்தியாளராக எளிமை யும் இனிமையும் மிக்கவராக வாழ்ந்தவர்.
9. மரபு வழியை பின்பற்றியவர், புதுமைகளில் நாட்டங்கொள்ளாதவர்.




இவ்வாறான கருத்துக்களைத் தன்னத் தியாயங்களின் வழி எடுத்துரைத்து ஐயரின் பன்முகத் தன்மைகளை பேராசிரி யர் வெளிப் படுத்துகிறார். காய்தல் உவத்தலற்ற ஆய்வின் தடத்தில் நின்று பிசகாது ஐயரின் புலமையை பேராசிரியர், தனக்கேயான இரசனை மிகுந்த நடையில் எளிமையாக விளக்கி யுரைத்துள்ளார்.

“சிறியன சிந்தியாத” பேராசிரியர் பிறரிடம் எப்போதும் நல்லதுகளை மட்டுமே கண்டு உரைத்து இன்புறுபவர். தன் மரபுவழிப் புலமையால் ஐயரின் பணிகளை மதிப்பிடும் பேராசிரியர் நமது காலத்தில் வாழும் புதிய “பண்டிதமணி” என்பதற்கு இந்நூலும் சான்றாகிறது.



# நான் கண்ட பேராசிரியர்

கலாநிதி. எஸ்.பத்மராஜா

நான் ஆறாம் வகுப்புப் படிக்கின்றேன். பாடசாலையில் தமிழ்தினப் பேச்சு போட்டியில் கலந்து கொள்ள வேண்டி இருந்தது. எனது மைத்துனர் என்னை இராசவீதியில் உள்ள அன்னை இல்லம் என்ற தனது மைத்துனரின் வீட்டிற்கு அழைத்துச் சென்றார். அன்று தான் நான் முதன் முதலாகப் பேராசிரியர் சிவலிங்கராஜாவைக் கண்டேன். எனக்கு "இலங்கை நாடு எம்நாடு" எனும் தலைப்பில் பேச்சு ஒன்று எழுதிக்கொடுத்துப் பேசப் பழக்கி விட வேண்டும் என்று அவரிடம் கூறி அறிமுகம் செய்து வைத்தார். பேச்சு எழுதித் தந்து பேசப் பழக்கியும்விட்டார். நான் தமிழ்த்தினப் போட்டியில் முதற்பரிசு பெற்றேன்.

அன்று தொடங்கிய நட்புறவு இன்று வரை தொடர்ந்து கொண்டிருக்கிறது.

பாடசாலையில் நடைபெறும் தமிழ் விழாக் களிலே பங்குபற்றமுன் அவரின் ஆலோசனையைப் பெற்றுக் கொள்வேன். அவர் பழகும் விதம் எனக்குப் பிடித்து விட்டது. அத்துடன் சொந்தம் என்ற உணர்வு எம்மை இன்னும் இறுக்கம் அடையவைத்தது.

அடிக்கடி சந்திப்பேன். நான் பேராதனைப் பல்கலைக்கழகப் பட்டப்படிப்புக்காகத் தமிழை அவரிடம் கற்றேன். கவர்ச்சிகரமான கற்பித்தற்திறன் என்னைக் கவர்ந்துகொண்டது. மாணவரின் உளவியலை உணர்ந்து சுவையாகக் கற்பிப்பார். "நான் இப்போது அறிவுக்குப் படிப்பிக்கின்றேன். பின்னர் பரீட்சைக்குப் படிப்பிப்பேன் என்று அடிக்கடி கூறுவார். அவரிடம் இலக்கியம் கற்பதற்குக் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

எனது முதுதத்துவமாணிப் பட்டத்திற்கு அவரே நெறியாளர். ஆய்வேடு சிறப்பாக அமைய வேண்டும் என்பதிலே கண்ணும்கருத்துமாக இருந்து வழி காட்டினார். பின்னர் கலாநிதிப்பட்ட ஆய்வு தொடங்கி னேன். அதற்கும் அவர்தான் வழிகாட்டியாக அமைந்தார். நூலகத்திற்குப்போ, கொழும்புக்குப்போ, மிஷனரிக்குப் போ, செமினரிக்குப்போ, "பிஷப்பிட்டைபோ" என்று கட்டளை இட்டு எனக்கு வழிகாட்டி ஆய்வினைச் செம்மையாகச் செய்வித்தார் நான் பட்டங்கள் பல பெற்று உயர்வதற்கு எனக்கு உந்துவிசையாக இருந்தவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா என்பது குறிப்பிடத் தக்கது.

அவர் சிறந்த நூலகம் ஒன்றை வைத்திருந்தார். பழைய இலக்கிய இலக்கண, புராண நூல்கள் (பெரும் பாலும் முதற்பதிப்புக்கள்) கையெழுத்துப்பிரதிகள், அரிய கடிதங்கள், ஓலைச்சுவடிகள், பழைய நாணயங் கள் என அருஞ்செல்வங்கள் பலவற்றை சேர்த்துப் பாது காத்து வைத்திருந்தார். 1995 யாழ்ப்பாண இடப் பெயர்வின் போது அவரது வீடு பாதிக்கப்பட்டு அவை யாவும் அழிந்து போனமையை இன்றும் அடிக்கடி கூறிக் கவலைப்படுவார்.

அவரிடம் எனக்குப் பிடித்த விடயம் அவரின் அணுகுமுறைதான். மனம் நோகவிடாமல் நகைச்சுவை கலந்து புத்திமதிகளைப் புகட்டுவார்.

இவர் தெய்வபக்தியும் குருபக்தியும் உடையவர் தான் வணங்கும் கடவுள்கள் மீது பதிகங்கள் ஊஞ்சல், பள்ளியெழுச்சி, முதலான பவவற்றைப் பாடியுள்ளார். எமது வெள்ளைப் பிள்ளையார் ஆலய ஊஞ்சலையும் அவரே பாடித் தந்தார்.



பல ஆண்டுகளுக்கு முன்னர் திருநெல்வேலி முத்துமாரி அம்மன் மீது அவர் பாடிய பாடல்களை நான் அடிக்கடி நினைப்பதுண்டு. உதாரணமாகப் பின்வரும் பாடலைச் சுட்டிக்காட்டலாம்.

“ஆச்சாரி ஜீவரத்தினத்தின்
ஆளுமையாலே உயர்ந்த தேரில்
பூச்சொரியும் பக்தர்புடைசூழ
பொன்மயிலே நீ வருதல் காண்பேன்
புத்திரர்கள் புத்தி செல்வம் பெற்று
புவியனைத்தும் போற்றிடவே கற்று
சத்தியத்தின் பாதை தவறாமல் – பல
சாதனைகள் செய்ய அருள்வேண்டும்.

இவ்வாறு ஏராளமான பக்திப்பாடல்களை இவர் பாடியுள்ளார். புராணபடனம் செய்யும் ஆற்றலுடைய இவர் இன்றும் பிள்ளையார்கதை, சித்திரபுத்திரனார் கதை இவற்றைப் படித்து வருகிறார்.

தெய்வபக்தி நிரம்பப் பெற்ற இவரிடம் குரு பக்தியும் நிறையவே உண்டு. இவரது குருபக்திக்குச் சான்றாக இவரது நூல்களின் சமர்ப்பணமே அமை



கின்றது. பேராசிரியர்கள் அ.சண்முகதாஸ், கா.சிவத் தம்பி, க.கைலாசபதி, சு.வித்தியானந்தன் ஆகி யோருக்கும் தனது பள்ளிக்காலத் தமிழ் ஆசிரியர் ஆ.தா.சுப்பிரமணியம் அவர்களுக்கும் மரபுவழியிலே தமக்குத்தமிழமுதூட்டிய பண்டிதர் க.வீரகத்தி அவர் களுக்கும் உள்ளன்போடு நன்றிக்கடப்பாடாகச் சமர்ப் பணம் செய்துள்ளார்.

தமிழ் இலக்கிய இலக்கணம், பண்பாட்டியல் நாட்டார் வழக்காற்றியல் முதலியவற்றிலும் ஈடுபாடு உடையவர். பெருமனது கொண்ட பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா மற்றவர்களின் உயர்வில் மனம் மகிழும் பக்குவம் உடையவர் அவரைப் பற்றி இன்னும் நிறைய எழுதலாம்.

பேச இனியவராய்
பெரிய மனசுடையவராய்
நேசம் உடையவராய் – என்
நெஞ்சம் நிறைந்தவராய்
வாழ்ந்திடும் என் குருநாதர்

பல்லாண்டு காலம் வாழ்ந்து தமிழ் கூறு நல்லுலகிற்கு இயற்பணி புரிந்திட இறையருளை வேண்டி நிற்கின்றேன்.



ந.குகபரன்

"பாவாரும் வாயான் பாவின் சுவைத்தேன்

நாவாரச்சொட்டும் நயப்புரையான்..." சிவலிங்கராஜா அவர்களது மணிவிழாவை ஒட்டி பண்டிதர் க. சச்சிதானந்தன் அவர்கள் எழுதிய வாழ்த்துப்பாவின் தொடக்க வரிகள் மகுடமாய் ஒளிர்கின்றன. கேட்பவர் உளமினிக்கப் பேசுவது பெருங்கலை. அவையகத்து அஞ்சாதவர் பகையகத்து சாகத்துணிந்தவரிலும் மதிப்புடையவர் என்பார் வள்ளுவர். அவையை ஆளும் அம்மரபில் கிளைத்து வளர்ந்தவர் பேராசிரியர் சிவலிங்கராஜர் இருமரபும் அறிந்தவர். தன்னைப் போல எதிர்காலத் தலைமுறையும் பேச்சுக் கலையில் உயரவேண்டும் என்ற உந்துதலால் இவர் எழுதியதே மேடையிலே பேசுவோம் எனும் இந்நூல்.


பேராசிரியர் சிவலிங்கராஜா அவர்கள் இலக்கியம், பண்பாடு, வரலாறு குறித்து நயம்பட எழுதியும் உரையாற்றியும் வருபவர் கவிஞர் ஆற்றுகையாளர். இவரது வகுப்பறை அரங்க ஆற்றுகையாக விரியும். சொற்கள் அணிவகுத்துத் தமக்கான வரிசையில் வழுக்கி வரும். கைகளும் கண்களும் மட்டுமன்றி கன்னங்களும் பேசும். சுவைத்துச் சுவைத்து இவருரைக்கும் தமிழமுதைப் பருகியவர்கள் அநேகர்.

சபையை உயிர்ப்போடு வைத்திருக்க பேராசிரியர் கையாளும் உத்திகள் பேச்சுக் கலையைக் கற்றுத்தேர்வோர்க்குத் திறந்த புத்தகமாக வழிசொல்லும். சொல்லழகும் ஓசைநயமும் காலமறிந்துரைக்கும் திறனும் சம்பவங்களைத்

# பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா அவர்களின் நாநலமும் "மேடையிலே பேசுவோம்" நூல்நயமும் சிறுகுறிப்பு



பேராசிரியர் மாணவனாக இருந்த போது பேச்சு போட்டியில் தங்கப்பதக்கம் பற்றபோது...



தொகுத்துரைக்கும் பாங்கும் மடைதிறந்த வெள்ள மென வரும் செய்யுள்களின் அழகும் பேராசிரியரின் தனித்தன்மைகள். சிரிக்கவும் சிந்திக்கவும் தூண்டும் இவர் பேச்சு இறுகிப்போன மனங்களையும் மலர்விக்கும் இருக்கும் இடம் சிரிப்பால் நிறைந்திருக்கும். பண்டிதமணி அவர்கள் தனது கட்டுரையின் நிறைவில் கதைவந்த கதையைக் கூறுவதுபோல சான்றுகளை முன்வைத்து கருத்துரைப்பது இவர் வழக்கு.

தனது இளமைக்காலத்தில் ஆற்றல் மிக்க பேச்சாளராகத் திகழ்ந்து தங்கப்பதக்கங்களைப் பெற்றவர்.

இவரது பேச்சாற்றலைக் கண்டு அன்றைய அரசியல் தலைவர்கள் பலர் வியந்து நின்றதாகக் கூறுவர். உடல் நிலை. நீண்ட நேரம் நின்று பேசுவது சிரமத்தைத் தருகிறது. இருந்து பேசுவது தவிர்க்க முடியாத தாகிவிடுகிறது.

அரங்கு நிறைந்த சபை. சிவலிங்கராஜா அவர்களது பேச்சுக்கான பொழுது. “இருந் தமிழே உன்னால் இருந்தேன். இமையோர் விருந்தமிர்தம் என்றாலும் வேண்டேன்...” தமிழ்விடுதூது செய்யுளோடு தொடங்குகிறது பேச்சு. இந்த சம யோசிதமும் திறனும் சிவலிங்க ராஜா அவர்களுக்கே உரியது.

**

தமது பிள்ளைகள் மேடையேறிப் பேசவேண்டும் என்பதற்காகப் பெற்றோர் படும் பாடு பெரும்பாடு. பலரிடமும் அரிதில் முயன்று எழுதிவித்த பேச்சை மனனம் செய்வித்து மேடையேற்றுவது நெடும் பயணம்.




இதற்குத் துணைசெய்யத்தக்கது மேடையிலே பேசுவோம் என்ற இந்நூல். தாய், தந்தை, குரு, இயற்கைச் சூழல், தமிழ்வளர்த்த பெரியோர்கள், பண்டிகைகள், சமூகம் சார்ந்த ஏனைய விடயங்கள் எனப் பல்வேறு கருப்பொருள்களில் முப்பத்தைந்து தலைப்புகளில் பேச்சுக்கான கட்டுரைகள் உள்ளன.

பொருத்தமான விளிப்பு, அறிமுகம், தெளிவுற வளர்த்துச்செல்லல், எடுத்துக்காட்டுகள் பிள்ளைகளின் வயதிற்கேற்ற எளிமையான சொற்தேர்வு, சிறு சிறு வாக்கியங்களும் தொடர்களும், நேரான சிந்தனையை வளர்க்கும் பாங்கு, பண்பாட்டு அடையாளங்களை முன்வைத்தல் என தேர்ந்த பேச்சுக் கான நுட்பங்கள் நூலில் விரவி யுள்ளன.

பிள்ளைகளின் உள நிலையைக் கருத்திற்கொண்டு எழுதப்பட்டுள்ள பாங்கு முக்கிய மானது. கட்டுரையின் நிறைவில் கவிதைகள் சிலவற்றையும் இணைத் துள்ளார்.

ஈழத்துத் தமிழ் இலக்கியம் சார்ந்து அதிகளவான பங்களிப்பை வழங்கிவரும் பேராசிரியர் அனை வரையும் அன்பால் அரவணைக்கும் மாண்புடையவர். இவரின் நாநலம் கேட்போர்க்கு என்றும் விருந்தளிக் கட்டும். படைப்புகள் ஒளிபெற்றுத் திகழட்டும்.

கந்தர்மடம் அ.அஜந்தன்



# யாழ்ப்பாணத்து வாழ்வியற் கோலங்கள் ஒரு பார்வை

கலாநிதி.எஸ்.சிவலிங்க ராஜா அவர்கள் தமிழ்த்துறைக்கு ஆற்றிய சேவைகளில் ஆய்வுகள் அடங்கிய நூலாக்கம் முதன்மை பெறு கின்றது. தமிழ்மீதும் தமிழ்ச் சமூகத்தின்மீதுமான பற்று யாழ்ப் பாணப் பண்பாட்டோடு கூடிய வாழ்வியற் கோலங்களின் ஆணி வேரைத் தேடும் அவரது ஆய்வின் பலனாக உருவானதே "யாழ்ப் பாணத்து வாழ்வியற் கோலங்கள்" என்ற ஆய்வுக் கட்டுரைகள். எல்லைக் கதவுகள் மூடப்பட்ட ஒரு குடாநாட்டை தாண்டி செல்லாத இவ் ஆய்வுக் கட்டுரைகள் நாம் வாழும் தளத்தின் அல்லது நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த மண்ணுக்குள் புதையுண்டுபோன எமது மண்ணின் வாழ்வியற் கோலங்களின் அடையாளங்களை மீட்டெடுத்து எதிர்காலச் சந்ததிக்கு கடத்தும் ஒரு அரிய பணியின் ஊடகமே இந் நூல். எமது வேலி களை அழகுபடுத்திய கிடுகு வேலி யின் நேர்த்தியும் அதன் இறுக்க மும் அட்டைப்படத்தை அழுகுபடுத்துவதோடு இந் நூலுக்கான குறியீடாகவே அதனைப் பார்க்க முடிகின்றது. 117 பக்கங்களை நிரப்பி நிற்கும் 13 கட்டுரைகளும் நாம் கடந்துவந்த பாதைகளில் எமது மூத்தோரின் பாதச் சுவடுகளைத் தேடத் தூண்டுகின்றன.

கந்தபுராண கலாசாரம் நிலவிய இதே மண்ணில் கனகிபுராணம் தோற்றம்பெற்ற வரலாற்றையும் அதன்பின் எழுத்துப் புரட்சியை ஏற்படுத்திய டானியலின் நூல்களின் நெடுக்குவெட்டு முகங்களையும் முதலாவது ஆய்வுக்கட்டுரையான "கனகி புராணம் முதல் கானல் நாவல்வரை" ஆராய்கின்றது. யாழ்ப்பாணத்து பண்பாட்டு அமிசங்களுக்கு இரண்டு பக்கங்கள் உண்டு என்பதை இந்தக் கட்டுரை அழுத்திச் சொல்கின்றது. நீதித்துறையின் தவறுகளை தட்டிக் கேட்கும் ஆயுதமாக எழுந்த கோட்டுப் புராணமும் இதற்குக் களமாக அமைந்த இலக்கியப் பரப்பும் அன்றைய புலவர்களின் புலமையின் சான்றாகின்றன.

கோடொரு களரி யதிலுறுந் துரையோ
  கூத்துப் பார்த்திருந் திடுமூப்பு
ஆடுறுங்குரங்கோ வளக்கர்களாவா
  ரவையிடை யவைகளைக் கொண்டு
நாடொறு மாட்டுங் கயிறுதான்
  நட்டுவப் பணிக்கனோ தரணி
வாடிடு வயிறு வளர்ப்பதற் கெடுத்த
  வஞ்சனை வேடமென் றுணரே.

கனகி புராணத்தினூடாகவும் கானல் நாவலினூடாகவும் உயர் குலத்தவர்களை விமர்சிப்பதனூடாக யாழ்ப்பாணச் சமூகத்தின் இன்னோர் முகத்தை அடையாளப்படுத்தும் கட்டுரையாகவே இது அமைந்துள்ளது. இதில் பழம்பெரும் இலக்கியவாதிகளின் புலமையும் புகழும் நினைவூட்டப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் மறைந்துபோன கும்மிப் பாடல்களை ஆய்வு செய்யும் "யாழ்ப்பாணத்தில் எழுந்த கும்மிப் பாடல்கள்" என்ற கட்டுரை கும்மிப் பாட்டின் வாயிலாகவே யாழ்ப்பாணச் சமூகத்தின் வரலாற்றையும் விழுமியங்களையும் அறிந்துகொள்ள முடியுமென்று கும்மிப் பாட்டின் பெருமையை உணர்த்தி நிற்கின்றது. வாய்மொழி இலக்கியம், நியம/ செந்நெறி இலக்கிய மென்ற இருவகை இலக்கியங்களை இக்கட்டுரையில் விளக்கு கின்றார். இதில் வாய்மொழி இலக்கியம் இயற்கைத்தன்மை வாய்ந்ததாகவும்,

செந்நெறி இலக்கியத்தில் புலவரின் புலமையினால் அதில் செயற்கைத் தன்மை தோற்றம் பெற்று விடுவதாகக் ஆய்வின் கோணத்தில் விளங்கிக் கொள்ளப்படுகின்றது. பெண்களுக்குரியதாகவும் பார்க்கப்பட்ட கும்மிப் பாட்டடிற்குள் சமூகப் புரட்சி ஒன்று இருப்பதை இந்த ஆய்வுக் கட்டுரை தெளிவுபடுத்து கின்றது.

எழுதப்பட்டவற்றை மட்டும் ஆய்வு செய்யாது அதன் கால எல்லைகளையும் அதனை எழுதியவர்கள் பற்றிய குறிப்புக்களையும் தருவதன்மூலம் இக்கட்டுரை களின் நம்பகத் தன்மையை உயர்த்தியுள்ளார். கும்மிப் பாட்டுக்கள் பெரும்பாலும் வாய்வழி இலக்கியத்தை தழுவியதாகவும், ஆனால் அவற்றை எழுதியவர்கள் செந்நெறி இலக்கியத்தைப் பின்பற்றியவர்கள் என்பதும் ஆய்வின் ஒரு முக்கிய விடயமாக இலக்கியப் பரப்பு எடுத்துக்கொள்ளவேண்டும்.

கல்லாதோருக்கும் விளங்கும் வகையில் அவர்கள் எழுதியதன் நோக்கம் அவர்கள் தமது புலமையை காண்பிக்க முயலாமல் தாம் சொல்லவந்த விடயங்கள் மக்களைச் சென்றடையவேண்டும் என்பதே ஆகம். இதனூடாக இலக்கியம் எளிமைப்படுத்தப்படும் பொழுது அது ஜனரஞ்சகமாக மாறுவதை விளக்கி யுள்ளார். மதமாற்றம், பெண்களின் நிலை, அரச ஊழியர்களின் ஆதிக்கம், சாதியம், வழக்குகள், அரசியல் போன்றனவே கும்மிப்பாட்டின் பேசுபொருளாக அமைந்துள்ளதை எடுத்துக்காட்டியுள்ளார். இந்த வடிவம் சமூகச் செய்திகளைச் சுமந்து மக்களைச் சென்றடைந்த ஒரு சிறந்த இலக்கிய வடிவமாக பல உதாரணப்பாடலோடு இக்கட்டுரை வடிவமைக்கப் பட்டுள்ளது நூலாசிரியரின தேடலின் விளைவே.

ஆண்டவர் கற்பனை காண்பர தூரத்தை
அங்கையாற் தீண்டலும்
காண்டலும் தீதென்பர்
வேண்டிய பெண்கள்கை
கோத்துத்தழீக்கொண்டு
வீதி திரிகிறார் ஞானப்பெண்ணே.

"யாழ்ப்பாணத்துக் குழந்தைப் பாடல்கள்" என்ற கட்டுரை எம்மைக் கடந்த கால நினைவுகளுக்குள் இட்டுச் செல்வ தோடு மறந்துபோன பல குழந்தைப் பாடலையும் விளையாட்டுக்களையும் நினைவூட்டு கின்றது. எமது பேரன் பேத்தியரையும் கண்முன் கொண்டுவந்து நிறுத்தியுள்ளது. தாலாட்டு மற்றும் குழந்தைப்பாடல்கள் பிள்ளைகளின் மொழி வளர்ச்சியில் எத்தகைய செல்வாக்கைச் செலுத்துகின்றது என்பதற்கு இக் கட்டுரையும், இந்நூலினை தனக்குப் பாடல்கள் வாயிலாக தமிழூட்டிய தந்தைக்கு சமர்ப்பித்திருப்பதும் ஒரு ஆதாரமாக அமைந்துள்ளது. குழந்தைப் பாடல்கள் விடுகதைத் தன்மை,



வியப்பார்வம், அபிநயப் பண்பு, கூற்றும் மாற்றமுமான பாங்கு போன்ற வடிவங்களைக் கொண்டிருப்பதாகவும் அதற்கு பல உதாரணப் பாடல் களையும் தந்திருப்பது தொலைத்தவற்றை மீளப் பெறப்பட்ட மகிழ்வைத் தருகின்றது.

நெய் நெய் நெய்
அரைப்போத்தல் நெய்
அத்தான் வந்து
சொன்னதெல்லாம்
பொய் பொய் பொய்
நெத்தியிலே நீலப்பொட்டு
வை வை வை

ஓசை நயத்துடன் நயந்து பாடிய பாடல்கள் தமிழ் மொழியை இலகுவில் கற்றுத்தரவும் ஒரே ஓசையுடைய சொற்களைப் பழகவும் உதவின. தற்பொழுது இவை மறைந்து வருவதால் தமிழில் பற்றற்ற தன்மையும் ஒரு வறட்சியும் காணப்படுவதை உணர்த்துகின்றது. அப்போதிருந்த பேரன் பேத்தியர் இப்பாடல்களின் வாயிலாக தமது பேரப்பிள்ளைகளுக்கு சொற் களஞ்சி யத்தைக் கொடுக்கும் தமிழ் ஆசான்களா விளங்கி யுள்ளதை நினைவூட்டிச் செல்கின்றன.

யாழ்ப்பாணத்து ஒப்பாரிப் பாடல்கள் என்ற கட்டுரை காலம் காலமாக இருந்து வந்த ஒப்பாரி வைப்பதை ஆழமான கண்ணோட்டத்தில் ஆராய்ந்து எழுதப்பட்டுள்ளது. எழுத்தறிவற்றவர்களும் தமது உணர்வுகளை, பிரச்சனைகளை, எதிர்பார்ப்புக்களை வெளிப்படுத்தும் ஒரு வடிவமாக காண்பிக்கின்றார். கிராமத்துப் பெண்களின் கற்பனைத்திறனும் கவித்துவமும் சங்கமிக்கும் இடமாக கும்மிப்பாட்டை வர்ணித்துள்ளார். இக்கலை மக்களிடமிருந்த நாடகம்ஃ கூத்திற்கும், நாடகம்/ கூத்திலிருந்து மக்களுக்குமாக இருவழிகளில் பயணித்த ஒரு வடிவமாக பார்க்கப் பட்டிருப்பதை தெளிவுபடுத்தி யுள்ளார்.

கொத்த வேண்டாம்
வெட்டவேண்டாம்
என்ரை நீல நயினார் – நீ
எனக்கொரு
கொள்ளி வைச்சால் காணுமெடா

ஒவ்வொரு மரணச் சடங்கிலும் தத்தமது பிரச்சினைகள் உணர்வுகளை ஒப்பாரியாக முன்வைக்கும் பாடல்களை உதாரணங்களுடன் தந்திருப்பது நூலாசிரியரின் அவதானிப்புத் திறனுக்கும் ஆய்வுத் திறனுக்கும் சான்று பகிர்கின்றன. பேராசிரியர் சபா.ஜெயராசா அவர்கள் தனது அணிந்துரையில் குறிப்பிட்டதுபோல கலாநிதி.எஸ்.சிவலிங்கராஜா ஆய் வாளர்கள் வரிசையில் தனித்துவம் பெற்றுள்ளார் என்பதையே அவை காண்பிக் கின்றன.

"யாழ்ப்பாணத்து உறவு முறைச்



சொற்கள்” என்ற கட்டுரையில் அருகிவந்துள்ள பல அரிய உறவுமுறைச் சொற்கள் மீழவும் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. எல்லா உறவுகளோடு நாம் வாழ்ந்த போதிலும் உறவுமுறை கூறுவதில் ஏற்பட்டுள்ள மொழிக் கலப்படத்தை இந்தக் கட்டுரை ஆய்விற்கு உட்படுத்து கின்றது. அம்மான், ஆச்சி, அப்பு, ஆத்தை, ஐயா போன்று மறைந்து செல்லும் சொற்களின் உயிரோட்ட மான அந்தப் பிணைப்பை உணர முடிகின்றது. நாகரீக மோகத்தில் அடித்துச் செல்லப்பட்டவற்றில் எமது உறவுமுறைச் சொற்களும் அடங்கு வதை இக்கட்டுரை எடுத்துக் காட்டு கின்றது.

“யாழ்ப்பாணப் பெயர் வழக்குகள் - ஆட் பெயர்கள்” என்ற கட்டுரையில் இடப்பெயர்கள், காணிப்



பெயர்கள், ஆட்பெயர்கள், அஃறிணைப் பெயர்கள் என பெயரிடும் பண்பு யாழ்ப்பாணத்தில் இருந்துள்ளது. பனை, தென்னை, காணி, விலங்குகளுக்கு பெயர் வைத்து அழைக்கும் மரபு இன்னமும் சில இடங்களில் உண்டு. யாழ்ப்பாணத்தில் தென்னிந்தியாவின் தாக்கம் காலம் காலமாக இருந்தபோதும். ஆட்பெயரிடலில் பெரிய தாக்கத்தைச் செலுத்த முடியவில்லை என்றும், சமயச் சார்பற்ற பெயர் வழக்கு வருவதற்கு மேலைப் புலத்தவரின் தாக்கம் இருப்பதாகவும் அவரது ஆய்வின் மூலம் உணரப்படுகின்றது. வழிபடு கடவுளின் அல்லது தலங்களின் பெயரைச் சூட்டுதல், மூதாதையரின் பெயர்களைச் சூட்டுதல், காப்பிய புராணப் பெயர்களைச் சூட்டுதல் போன்ற வழக்கங்கள் இருப்பதாக ஆட்பெயர் தொடர்பான ஆய்வின் விளக்கம் அமைந்துள்ளது.

சில சமூகத்திடமுள்ள குறியீட்டுப் பேச்சு வழக்கை ஆராயும் கட்டுரையில் நெடுந்தீவு, சுன்னாகம், வட்டுக்கோட்டையில் நிலவிய பேச்சு வழக்கில் புதிய சொற்களை ஆக்கியும், வழக்கிலுள்ள சொற்களை குறியீடாக்கியும் தொடர்பாடலை மேற் கொண்டுள்ள தாக கட்டுரை நீள்கின்றது.

“துவப்பரும் ஈப்பற்றிச் சாற்றுங்கோ நானும்
ஓர்ப்பராய் ஈப்பற்றிச் சாற்றுவேன்”

செவிவழிக் கதையில் வரும் திருடர்கள் இவ்வா றான பேச்சுவழக்கை வைத்து தமக்குள் தொடர் பாடலைச் செய்து தப்பித்ததாக கூறப்படும் பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் “திவெட்டிக் கள்ளர்” என்ற கதை அதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு. இப் பேச்சுமொழி ஒவ்வொரு சாதியிலும் மாறுபடுவதையும் தனது ஆய்வில் உள்வாங்கியுள்ளார்.

யாழ்ப்பாணத்தின் மரபுவழிச் சீர்மியம் என்ற கட்டுரை கல்விப் பாரம்பரியமும் ஈழத்து நாட்டார் வழக்காற்றியற் கூறுகளையும் கொண்டமைந்த யாழ்ப்பாணச் சமூகத்தில் மரபுவழிச் சீர்மியத்தின் எழுச்சிபற்றி ஆராய்கின்றது. இதில் மரபுவழிச் சீர்மியம் ஆன்மீகம் சார்ந்ததாக காணப்பட்டுள்ளதைச் சுட்டிக் காட்டியுள்ளார். இதற்கான உதாரணங்களாக மரபுவழிச் சீர்மியத்தில் உளப்பாதிப்பிலுள்ள ஒருவருக்கு பெரியவர் புத்திமதி கூறுவது, வீபூதி போடுதல், நூல் கட்டுதல், தண்ணீர் ஓதுதல், நாவூற்றுக்குத் துடைத்தல், கழிப்புக் கழித்தல், மருந்து விழுத்துதல் என்பவற்றை உதாரணங் களாக முன்வைத்துள்ளார்.

நாவூற்றுக் கழிப்பில் பயன்படுத்துப்படும் வரிகளாக

பாராதாள் பார்த்தாளோ
பாம்புக் கண்ணி பார்த்தாளோ
குண்டுமணிக் கண்ணாலை
கொழுந்தறுவாள் பார்த்தாளோ
பாராதாள் பார்த்தாளோ
கொள்ளிக் கண்ணி பார்த்தாளோ
நாவூறு.. கண்ணூறு இறங்கிறங்கு
காலால் இறங்கு கண்ணால் இறங்கு
காதால் இறங்கு கையாலே தான் இறங்கு

நாவூறு.. கண்ணூறு இறங்கிறங்கு
இவ்வாறான வரிகள் மனதில் நம்பிக்கையை ஏற்படுத்தி ஆறுதல் அளிக்கின்றது. எமது பாரம்பரியமானதும் அழிந்து வருகின்றதுமான இவற்றை ஆய்வாளர்கள் ஆய்வுசெய்து பதிவிடவேண்டும் என்ற வேண்டுகோளை முன்வைக்கின்றார்.

"யாழ்ப்பாணப் பிரதேச மக்களிடையே வழங்கும் திட்டுக்கள்" என்ற கட்டுரை மக்களிடத்தில் காலம் காலமாக இருந்துவரும் பிறரைத் திட்டுகின்ற பழக்கத்தை ஆராய்கின்றது. மனம் வருந்திய ஒருவர் அல்லது உள ரீதியா பாதிக்கப்படுகின்ற ஒருவர் ஒருவரை சபிப்பதைத் திட்டுதல் என்றழைப்பதாக வரைவிலக்கணப்படுத்து கின்றார். திட்டுவது அல்லது சாபமிடுவது பலிக்குமென்ற நம்பிக்கை இன்னமும் எமது மண்ணில் உண்டு என்பதாலும் எவரும் ஆய்விற்கு உட்படுத்தாத விடயப்பரப்பு என்பதாலும் இக்கட்டுரை முக்கிய இடம் பிடிக்கின்றது. மண்ணள்ளிக் கொட்டித் திட்டுவது, கோயிலில் திட்டி வழிபடுதல், நேரடியான திட்டல்கள், சாதிப் பெயர் கொண்டு திட்டுதல், செய்யும் தொழிலைப் கொண்டு திட்டுதல் என்று அதனை வகைப்படுத்திக் கூறியுள்ளார். திட்டுதல் என்பது உளவியல் பரப்பில் இரு முனைத்தாக்கத்தை ஏற்படுத்த வல்லதாக உணர்த்தப் படுகின்றது.

"யாழ்ப்பாணத்துக் கல்வி மரபில் இராமாயணம்" என்ற கட்டுரையில் யாழ் சமூகத்தின் கல்வி மரபுவழிக் கல்வி, நிறுவனவழி வரும் கல்வி ஆகிய இரண்டிலும் இராமாயணத்தின் தாக்கம் ஆராயப்பட்டுள்ளது. யாழ்ப் பாணத்திற்கும் இந்தியாவிற்குமுள்ள தொடர்பால் வட இந்தியாவின் இதிகாசங்கள், புராணங்கள் அதிகம் யாழ்ப்பாணத்தவரால் பயிலப்பட்டுள்ளது. பல வித்து வான்கள் இணைந்து இராமாயணத்தை படிக்கும் மரபும் இங்கிருப்பதை சுட்டிக்காட்டுகின்றார். மரபுவழிக் கல்வி புராணங்களை கற்றறிய போதிய வெளி இருந்துள்ளதை யும் சுட்டிக் காட்டியுள்ளார். யாழ் பல்கலைக்கழகத்தின் வருகையும் அதன் வளர்ச்சியும் இராமாயணக் கல்வி முறையில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாக குறிப் பிட்டுள்ளார்.

"யாழ்ப்பாணத்துப் புலமை மரபும் உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவரும்" என்ற கட்டுரை சிவசம்புப் புலவரின் திறமையும் ஆளுமையும் தமிழ்க் கல்வியிலும் ஆய்வுத் துறையிலும் செல்வாக்குச் செலுத்தியிருப்பதையே ஆராய்கின்றது. மரபுவழிக் கல்வியில் இவரது கால்த் தடம் ஆழமாகப் பதிந்திருப்பதை ஆதார பூர்வமாக விளக்குகின்றார்.

"யாழ்ப்பாணத்தில் ஔவையாரின் கல்வி யொழுக்கம்" என்ற கட்டுரை தமிழ்நாட்டில் கிடைக்கப் பெறாத ஔவையாரின் கல்வியொழுக்கம் என்ற நூல் யாழ்ப்பாணத்தில் 1926இல் பதிப்பிடப்பட்டுள்ளது. இந்நூல் வாழ்வில் கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறுவதாகக் கூறுகின்றார்.

"ஊமையென்பவர் ஓதாதவரே", "குறைவறக் கற்றவன் கோடியில் ஒருவன்", "கொற்றவன் தன்னிலும் கற்றவன் உயர்ந்தவன்" போன்ற சிறந்த விடயங்களை உள்ளடக்கியதாக கல்வியொழுக்கம் என்ற நூல் அமைந்திருப்பதைச் சுட்டிக்காட்டுகின்றார்.



இறுதிக் கட்டுரையான யாழ்ப்பாணத்திற் புகைப்படக் கலை என்ற கட்டுரை புகைப்படக்கலையின் வளர்ச்சியைச் சொல்கின்றது. இலங்கையில் முதலா வது புகைப்படம் வட்டுக்கோட்டை செமினறியிலேயே எடுக்கப்பட்டதாக வட்டுக்கோட்டைச் செமினறியின் வரலாற்றுக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதை பதி விட்டுள்ளார். யாழ்ப்பாணத்தின் புகைப்படக் கலை வர லாறு கென்றி மாட்டினுடன் ஆரம்பிப்பதாக பதிவிடு கின்றார். புகைப்படக் கருவி ஆட்களின் ஆயுளைக் குறைத்து விடுமென்ற மூட நம்பிக்கை மூண்டதும் இங்குதான் என்பதை அழகாகப் பதிவிட்டுள்ளார்.

டானியல், சுவாமி ஞானப்பிரகாசம், இ.பால சுந்தரம், பண்டிதமணி, பேராசிரியர் கணபதிப் பிள்ளை, பொன்னம்பலப்பிள்ளை, சுன்னாகம் அ.குமாரசாமிப் புலவர், அரசகேசரி, டாக்டர் மு.வரத ராசன் போன்ற பலரது நூல்களையும் ஆராய்ந்து எழுதப்பட்ட இந்த ஆய்வுக்கட்டுரைத் தொகுதி கலாநிதி.எஸ்.சிவலிங்க ராஜாவை ஒரு சிறந்த ஆய்வாள ராக அடையாளப்படுத்தி யுள்ளது. தனது இந்த ஆய்வு போதுமானதல்ல இதனைப் பலரும் தொடரவேண்டும் என்ற வேண்டுகோளையும் முன்வைத்துள்ளார்.


அவரின் எல்லையற்ற தேடலும் அனுபவமும் இந்த நூல் முழுவதிலும் பரந்துள்ளன. குழந்தைப் பாடல்கள், கும்மிப்பாட்டு, ஒப்பாரி, கோட்டுப் புராணம், கனகி புராணம், கல்வியொழுக்கம் போன்றன தேடிக் கிடைக்கப் பெறாத பொக்கிசங்கள். இவற்றை இந்த நூல் தன்னகத்தே கொண்டுள்ளது. இளம் தலை முறை இதனைக் கற்றுணரவேண்டும் என்பதே எனது அவா.



தருமராசா அஜந்தகுமார்

ஈழத்துத் தமிழ்ப்பேராசிரியர்கள் வரிசையில் தனக்கென ஓர் இடத்தைக் கொண்டவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா அவர்கள். க.பொ.த உயர்தரத்தில் நாங்கள் கற்கின்ற காலத்திலேயே அறிந்து வியந்த ஆளுமை. பல்கலைக்கழகத்தில் முதலாம் வருடத்தில் அவர் விரிவுரையிலும் நகைச்சுவை ததும்பும் குரலிலும் ஈர்க்கப்பட்டு இன்று வரை அந்தக் காதல் தொடர்கின்றது. வடமராட்சியின் கல்விப்பாரம்பரியமும் இலக்கிய வளமும் என்ற தனது இளமானிப்பட்ட ஆய்வுடன் ஈழத்துத் தமிழ் ஆய்வுலகில் தன்னை நிலைநிறுத்தத் தொடங்கியவர். சிரித்திரன் நடத்திய சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்றவர். சொல்லினால் ஒரு மாளிகை என்ற கவிதைத்தொகுதியைத் தந்தவர். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசிதம்பரம் அவர்களின் பிரசாரப் பீரங்கியாக அறியப்பட்டு "ஈழத்துக் கருணாநிதி" என்று சிறப்பிக்கப்பட்டவர். சிறுவர்களுக்கான பேச்சு ஆற்றலை வெளிப்படுத்தும் "மேடையிலே பேசுவோம்" என்ற நூலை வெளியிட்டவர். மரபு இலக்கியத்தில் தனது ஆழ்ந்த புலமையை வெளிப்படுத்துவதோடு அமையாது நவீன தமிழ் இலக்கியத்திலும் தன் படைப்பாற்றலையும் ஆர்வத்தையும் வெளிப்படுத்துபவர். சூர்ப்பனகை உள்ளிட்ட பாத்திரங்களை ஏற்று தன் ஆளுமையை வெளிப்படுத்தும் நடிகரும் ஆவார் மரபுவழிக்கல்வியை பண்டிதர் க.வீரகத்தி அவர்களிடம் கற்ற அதேவேளையில் பேராசியர்களான க.கைலாசபதி, கா.சிவத்தம்பி, சு.வித்தியானந்தன், அ.சண்முகதாஸ் ஆகியோரிடமும் கல்வி பயின்றவர். மரபும் நவீனமும் கலந்த கல்வி, மரபும் நவீனமும் கலந்த இலக்கியம், பழமையும் புதுமையும் சந்திக்கின்ற சந்தி என்று தன்னை முக்கியமான ஆளுமையாக வெளிப்படுத்திக் கொண்டவர். எழுத்திலும் பேச்சிலும் தன் ஆளுமையை நிரூபித்துக்கொண்டவர். சொல்லும் செயலும் ஒன்றாகிய மனிதர். அவர்

# பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா அவர்களின் சுன்னாகம் அ.குமாரசுவாமிப்புலவர் வாழ்வும் பணியும்



பாடல்களை மனனமாக்கி வைத்துள்ள விதமும் அதனை எடுத்துரைக்கும் முறையும் எப்பொழுதும் வசீகரம் மிக்கவை. என்னைத் தனது விருப்பிற்குரிய மாணவனாக அங்கீகரித்துள்ள அவரது பெருந்தன்மையும் அவருடைய பதவிக்கு நான் வந்து சேர்ந்துள்ள இறைசெயலும் என்னால் எப்பொழுதும் மறக்கவே முடியாதவை.


பேராசிரியரின் சிறப்புத்துறையாகப் போற்றப் படுவது ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு ஆகும். ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றிற்கு பேராசிரியர் ஆற்றிய பங்களிப்பினைப் பின்வருமாறு நோக்கலாம்.

1. பத்தொன்பதாம் நூற்றாண்டு வரையான ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றை எழுதியமை
2. பத்தொன்பதாம் நூற்றாண்டில் யாழ்ப் பாணத்தில் மரபுவழிக்கல்வி பயின்ற தன்மையை ஆவணப்படுத்தியமை
3. ஈழத்துத் தமிழ் அறிஞர்களின் வாழ்வையும் தமிழ்ப்பணியையும் வரலாறாக்கியமை
4. ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றின் ஆய்வு இடைவெளிகளை தனது மாணவர்களைக் கொண்டு ஆராயத் தூண்டியமை
5. ஈழத்துத் தமிழ் உரை மரபைப் பற்றிய விரிவான ஆய்வு
6. ஈழத்து இலக்கிய வரலாற்றின் முக்கியமான நூல்கள் சிலவற்றைப் பதிப்பித்தமை

இந்தவகையிலே ஈழத்து ஆளுமைகள் பற்றிய ஆவணப்படுத்தலில் சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்களின் வாழ்க்கைச் சுருக்கம், வித்துவசிரோன்மணி கணேசையரின் வாழ்க்கையும் பணியும், சுன்னாகம் அ.குமாரசுவாமிப்புலவர் வாழ்வும் பணியும் ஆகிய வெளியீடுகள் கவனத்தைப் பெறுகின்றன. பேராசிரியர் அவர்களின் **சுன்னாகம் அ.குமாரசுவாமிப்புலவர் வாழ்வும் பணியும்** என்ற நூலின் முக்கியத்துவத்தைப் பற்றியதாக இக்கட்டுரை அமைகின்றது.

2012 இல் முதற்பதிப்பும் 2022 இல் இரண்டாம் பதிப்பும் கண்டிருக்கின்ற இந்த நூலானது சுன்னாகம் குமாரசுவாமிப்புலவரின் ஆளுமையை வெளிப்படுத்தும் ஆவணமாக அமைகின்றது. இன்று ஆய்வுகள் என்ற பெயரில் தேடுபொறிகள் வழி வந்து சேரும் தகவல் களைக்கொண்டும், விக்கிப்பீடியாவைக் கொண்டும் வெட்டிஒட்டும் செயற்பாடுகளையே ஆய்வுகள் என்று வீரம் பேசி நிற்கும் நிலையில் களஆய்வு வழியாகவும், அவரது மாணவர்கள், குடும்பத்தினரின் நேர்காணல் வழியாகவும், அவரது மூலப்பிரதிகள் வழியாகவும் எழுதப்பட்டிருப்பது இந்த நூலின் முதன்மையை உணர்த்தி நிற்கின்றது.

சுன்னாகம் அ.குமாரசுவாமிப்புலவர் வீட்டிற்குத் திரு.முத்துக்குமாரசாமிப்பிள்ளையைக் காண ஒவ்வொரு சனி ஞாயிறும் செல்வேன்(1980, 81) திருநெல்வேலியில் இருந்து சுன்னாகத்திற்கு எனது




மிதிவண்டிப் பிரயாணம் சுமார் இரண்டு வருடத்திற்கு மேல் நடைபெற்றது.

அ.குமாரசுவாமிப்புலவர் சேகரித்து வைத்திருந்த பழந்தமிழ் இலக்கிய இலக்கண நூல்கள், சஞ்சிகைகள், கடிதங்கள், துண்டுப்பிரசுரங்கள், ஈழத்தில் வெளி வந்த நூல்கள் எனப்பலவற்றை அவரது வீட்டிலே பார்த்தேன். முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை அவற்றைக் காட்டினாரேயன்றி கைநெகிழவிட மறுத்து விட்டார்.

புலவர் அவர்களின் உருவாக்கத்திற்குக் காரணமாக அமைந்த பத்தொன்பதாம் நூற்றாண்டின் புலமைச் சூழல், புலவர் அவர்களின் வாழ்க்கை வரலாறு. இலக்கணமுயற்சிகள், இலக்கிய முயற்சிகள், பிற பணிகள் (நிகண்டு உரைகளும் அகராதி முயற்சிகளும், பதிப்பு முயற்சிகளும் பாடபேத ஆராய்வும், கண்டனங் கள்), கற்பித்தற்பணியும் மாணாக்கர் பரம்பரையும், மதிப்பீடு என்பவற்றை உள்ளடக்கமாகக் கொண்டு மிக நேர்த்தியாக திட்டமிட்டு இந்த நூலானது உருவாக்கப் பட்டுள்ளது. பின்னிணைப்பில் புலவருக்கு வந்த கடிதங்கள், உ.வே.சாமிநாதையர் அவர்கள் பதிப்பித்த சீவகசிந்தாமணியுரைப் பிழைகள் என்று அச்சிடப்பட்ட பிரதி ஆகியன இணைக்கப்பட்டுள்ளமை நூலின் பெறுமதியை அதிகரிக்கின்றது. தனது கருத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் அவர் தேடியுள்ள நூல்களும் அதனை அவர் நுணுகி நோக்கியுள்ள தன்மையும் இன்றைய ஆய்வாளர்களுக்கு மிகப்பெரும் வழிகாட்டு கின்றது எனலாம். குமாரசாமிப்புலவருக்கு வந்த கடிதங் களின் வழி புலமைத்தொடர்புகளையும் சூழலையும் எடுத்துக்காட்டும் விதமும் அவரின் உழைப்பினை வெளிப்படுத்தி நிற்கின்றன. ஆதாரமாகக் காட்டுகின்ற கடிதங்கள் இளைய தலைமுறையினரின் ஆய்வு

ஆர்வத்தைத் தூண்டக் கூடியன. வெறும் பெயர்களை உச்சரித்துப் பழக்கப்பட்ட சூழலுக்கு அந்தக் காலத்தை யும் ஆளுமைகளையும் கண்முன் நிறுத்தும் ஆய்வுப்பலம் முக்கியமானது. புலவரின் பேரனான சுன்னாகம் முத்துக்குமாரகவிராயரைப் பற்றியும் புலவர் அவர்களின் ஆசிரியர்களைப் பற்றியும் தனது தேடலை வெளிப்படுத்தியுள்ளார். இது ஒருவகையில் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் ஊடாக ஈழத்துத் தமிழ்ப் புலமை வரலாற்றின் ஒருபகுதியினை நிறைவுசெய்யும் முயற்சி யாகவே நிகழ்ந்துள்ளதை அவதானிக்கலாம்."1.10.1902 **ஆம் ஆண்டு புலவர் நாவலர் வித்தியாசாலையிலே தலைமை யாசிரியராக நியமனம் பெற்றார்."** முதலிய தகவல்களின் துல்லியத்தன்மை இந்த நூலோடு யாரையும் எளிதில் பிணைத்து விடுகின்றது.

ஈழத்து தமிழ் இலக்கண வரலாற்றிலே குமாரசுவாமிப்புலவர் பெறும் இடத்தினை அவருக்கும் இலக்கணத்திற்கும் உள்ள பிணைப்பு, இலக்கண ஆராய்ச்சி நூல்கள், இலக்கணப் புத்துரைகள் ஆகிய மூன்று வழிகளாலும் பேராசிரியர் அவர்கள் கண்டடைந்துள்ளார். புலவர் அவர்களின் இலக்கண ஆராய்ச்சிநூல்களான இலக்கணச்சந்திரிகை, வினை பகுபத விளக்கம் ஆகியவற்றைப் பற்றி விரிவாக எழுதி யுள்ளார். யாப்பருங்கலப் பொழிப்புரை, வெண்பாப் பாட்டியல் பொழிப்புரை, தண்டியலங்காரப் புத்துரை, யாப்பருங்கலக் காரிகைப் புத்துரை முதலிய உரைகளின் முக்கியத்துவம் பற்றியும் விரிவாக நோக்கியுள்ளார். இங்கு விரிவாக எழுதப்பட்ட குறிப்புகள் ஆசிரியர் புலவர் அவர்களைப் பற்றிய மதிப்பீட்டிற்காகக் கொண்டிருந்த உழைப்பை நிரூபிக்கின்றது.

செய்யுளியற்றல், இலக்கிய உரைகள், உரைநடை ஆக்கம் என்று இலக்கிய முயற்சிகளில் ஈடு பட்டிருந்த புலவரின் ஆளுமையை இலக்கியநிலையிலும் பேராசிரியர் வெளிப்படுத்தியுள்ளார். செய்யுளியற்றலை சுய ஆக்கம், மொழிபெயர்ப்பு என்று இரண்டாக நோக்கி யுள்ளார். கூர்ந்த மதிப்பீட்டினையும் ஒப்பீட்டினையும் தனது ஆய்வுகள் வழி பேராசிரியர் கொண்டு வந் துள்ளார். சாணக்கிய நீதி நூல் வெண்பா தனிநூலாக வெளிவந்த போதும் அது வெளிவந்த செந்தமிழ் இதழை யும் இந்த ஆய்விற்காகப் பயன்படுத்தி ஒப்பிட்டுள்ளார்.





> **"சாணக்கிய நீதிநூல் வெண்பா செந்தமிழில் பிரசுரமாகும்பொழுதே பின்னர் இது சில திருத்தங் களுடன் நூலாக வெளிவரும் என்று குறிப்பிட்டுள்ளார். இரண்டினையும் ஒப்பிட்டு நோக்குகையிற் குறிப்பிடத் தக்க திருத்தங்கள் இடம்பெற்றதாகத் தெரியவில்லை"**

இவரின் இலக்கிய, இலக்கணப் பணிகளை மதிப்பிடும் போது நூலாக வெளிவராதவற்றையும் இவர் கவனத்தில் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது ஆகும்.

புலவர் அவர்கள் உருவாகிய சூழலைச் சொல்வ தற்காக பத்தொன்பதாம் நூற்றாண்டின் புலமைச் சூழலையும் வரலாற்றையும் கூறிய பேராசிரியர் அவர்கள் "கற்பித்தற் பணியும் மாணாக்கர் பரம்பரையும்" என்ற அத்தியாயத்தின் ஊடாக இருபதாம் நூற்றாண்டின் புலமைச் சூழலையும் வரலாற்றையும் தெளிவாக வெளிக்கொணர்ந்துள்ளதைக் காணலாம்.

> **சிவசம்புப் புலவரின் இலக்கிய இலக்கண ஆளுமை முருகேச பண்டிதருக்கூடாகக் குமாரசுவாமிப்புலவரிற் சுவறியமையை ஒரு கிளையாகக் கொள்ளலாம். மற்றைய கிளை முத்துக்குமார சுவாமிக்குருக்களுக் கூடாகப் பேராசிரியர் கணபதிப்பிள்ளையிற் சுவறியது எனக்கொள்ளலாம்.**

இவ்வாறாக ஒரு புலவரைப் பற்றிய வரலாறு என்பதை இலக்கிய இலக்கண வரலாறாகவும் கல்வி வரலாறாக வும் எழுதும் பரிமாண எழுத்தாக இந்த நூல் அமைந்துள்ளது. பேராசிரியர் அவர்கள் புலவரின் அகராதி முயற்சி பற்றிக் கூறியதையே அவருடைய இந்த நூலுக்கும் கூறலாம்.

**" குன்றா உழைப்பையும் குறையா ஊக்கத்தையும் நுண்மாண் நுழைபுலத்தையும் தெளிவாகக் காட்டுகின்றது"** இந்த நூல்.

## பாதை திறந்த பான்மை

“அன்பின் ஐந்திணைக்களவும் கற்புமே
தமிழிலக்கியத்தின் தலையொளிர் மணிமுடி“
என்ற பாங்கில் இன்பப் பகுதியை
உச்சிமேற் கொண்டனர், உவந்து வந்தனர் -
ஈழம் தந்த சால்புடைப் புலமையோர்.

அந்த மரபின் அடிகொடி தொடர்ந்த
வித்துவ சிரோமணி கணேசையர்தம்
இலக்கண இலக்கியத் தொண்டுகள்பலப்பல;
அத்தகு திறம்பில் வித்தகச் சிறப்பினை
முற்றும் ஓர்ந்த முனைவர் யாரெனின் -
யாழ்பல்கலையின் தமிழ்த்துறைத்தலைவர்,
அவை பல ஏறி அகன்புகழ் பூண்டவர்,
சொற்பொழிவாளர், சுவை நயம் துய்ப்பவர்,
இலக்கண நெறிகளில் ஈடுபாடு உடையவர்,
கவிஞர், கட்டுரையாளர்,
கலாநிதி சிவலிங்கராசா என்பவே.

அகநானூற்றின் பொருண்மையை விளக்கி
வித்துவ சிரோமணி கணேசைர் அவர்கள்
எழுதிய உரைதனை “ஈழகேசரி“
ஐம்பதுகளிலே தந்து மகிழ்ந்தது;
உரையின் அருமையும் பெருமையும் உன்னி
பதிப்பாசிரியப் பணியிலே இறங்கி,
பழம்பெரு நூலினை இளம்புதுத் தமிழரும்
பின்று மகிழும் பாதையைத் திறந்தனர் -
முனைவர் சிவலிங்க ராசனார் இன்று;
பாதை திறந்த பான்மை ஏவரும் போற்றி எற்கத் தகுந்ததே

- முருகையன்
07.05.2002



மைத்துனர் லோகன் கணபதியுடன்



## பேராசிரியர் கலாநிதி சிவலிங்கராசா

சிந்தையில் செல்வச்சீமான்
சிறந்த யாழ் பல்கலைப்பீட
சீருயர் தமிழ்ப் பே ராசான்
சேர்கலா நிதியாய் வாழ்வோன்
அந்தமில் உலகோர் போற்றும்
அரிய சொற் பொழிவில் மேலோன்
அடினேன் அகவை நூறில்
அகமார வாழ்த்தி னானால்
வந்தனைக்குரிய செம்மல்
வாழ் கர வெட்டி தந்தோன்
வள்ளலாம் சிவலிங்க ராசா
மனம்வாக்குக் காயத்தாலே
செந்தமிழ் நாவலரை யொப்பான்
சீருயர் குடும்பத்தோடு
செகம்பல நூறாண்டு வாழ
சேயேனும் வாழ்த்து வேனே.

- புலவர்மணி வை.க.சிற்றம்பலம்

## வாழ்த்துப்பா

பாவாரும் வாயான பாவின் சுவைத் தேனை
நாவாரச் சொட்டும் நயப்புரையான் - மூவான்
அறுப தடையினும் சிவலிங்கராசன்
சிறுவனே செந்தமிழைத் தின்று

வண்டு மலரறியும்; நண்டு வளையறியும்
கண்டு கவியின் உயிரறிவான் - பண்டு
உரை மரபும் மூத்தோர் வழி மரபும் ஒன்றாய்
நிரை நிற்கும் நெஞ்சன் இவன்

ஈழ இலக்கிய வரலாற்றை நேர் செய்து
ஆழப்புகுந்துமிக ஆராய்ந்தான் - வாழும்
தமிழ் செய்தான் சங்கக் கவிக்குரை செய்து
அமிழ் தளித்தான் சான்றோன் அவன்

மக்கள் வழக்கம் மறையாப் பழக்கங்கள்
ஒக்க உரைத்தவை பேணுகிறான் - மிக்க
சுவைக் கவிஞன் தொட்டறியா நூல்கள்
நவக்கதைகளை ஏதில்லை நா!



**வேறு**

தேன் மலர்கள் தூவித் திருவிளக்கேற்றுமின்
மான்விழியீர் ஆரத்தி மகிழ்ந்தெடுமின் மற்றையோர்
ஆன்பால் அறுகோடு பல்லாண்டு பாடுமின்.

- கலாநிதி பண்டிதர் க.சச்சிதானந்தன்

*26.11.2007*
*தும்பளை மேற்கு,*
*தும்பளை.*

*அன்பு மிக்க பேராசிரியர் சிவலிங்கராஜாவுக்கு*

*உங்கள் தொலைபேசி அழைப்பு கிடைத்தது. எனக்குச் சுகமில்லை அப்பொழுது. இப்பொழுது கொஞ்சம் சுகம். புதன் கிழமை வருவதாகச் சொன்னேன். அது 30.11.05 ஆகும். நீங்கள் புதன் கிழமை என்ன செய்ய இருக்கிறீர்கள். நான் வருவதானால் என்ன கொண்ட வரவேண்டும். எத்தனை மணிக்கு ஆரம்பம் என்ற விபரங்களை அறிவிக்கவும். எனக்கு ஒலிவாங்கி வேண்டும். பெரிய கரும்பலகை இருந்தால் போதும்.*

*வணக்கம்*

*இங்ஙனம்,*
*தங்களன்புள்ள*
*க.சச்சிதானந்தன்*

உங்கள் இல்லங்களில் நடைபெற
இருக்கும் மங்களகரமான
நிகழ்வுகளுக்கு...

# மதி கலர்ஸ்



திருமண அழைப்பிதழ்
காட்சியறை

MATHI COLOURS



WEDDING CARD SHOW ROOM

15/2, Murugesar Lane, Nallur,Jaffna.
T.P: 021 2229285, 077 7222259


இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாநிதி த. கலாமணி அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.